# கல்கி

வைரவிழா ஆண்டு

இலவச இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்!

KALKI 12.8.2001
ரூ. 5.00



வாரம் ஒரு பட்டுப் புடைவை பரிசுப் போட்டி

## தாஜ்மஹாலில் தாஜ்மஹால்!


இப்போது ஆரோக்கியமான
சருமம் ஸெரிலாக்கின்
போஷாக்குடன்.
இலவசம்
50 கிராம் ஜான்ஸன்ஸ்
பேபி ஸோப்,
ஒவ்வொரு 400 கிராம் ஸெரிலாக்
பேக்குடனும்.*
Nestlé
CERELAC
Infant Cereal with Milk
Wheat
FREE
Mudra :NES : 2534 Tam
உங்கள் குழந்தைக்கு ஸெரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.
IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.
महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।

"என்னோட நடிப்புத் திறமையிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கு. ஒரு நல்ல நடிகரையோ நடிகையையோ, இண்டஸ்ட்ரியிலிருந்து அவ்வளவு சீக்கிரம் அப்புறப்படுத்த முடியாதுங்கறது என்னோட அபிப்பிராயம்."





# க்கீ...க்கீ... மீனாட்சி!

தேவயானி வீட்டு அழைப்புமணியை அழுத்திய அடுத்தகணம், 'டிங்டாங்' என்று ஒலிக்க வேண்டிய மின்னணு ஓசைக்கு மாற்றாக, உள்ளேயிருந்து க்கீ...க்கீ... என்றொரு கிளியின் குரல். பல்லி உச்சக் கொட்டுவதுகூட அழைப்புமணி ஓசையாக வந்துவிட்டபிறகு, கிளியின் இனிய கிரீச்சிடல் நல்ல ரசனைதான் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே கதவு திறக்கப்படுகிறது. வெளிர் மஞ்சள் நிற பருத்திப் புடைவை சரசரக்க, ஒப்பனை இல்லாத எளிய தோற்றத்தில், கன்னக் குழி விழும் புன்னகையோடு வரவேற்ற, தேவயானி ராஜகுமாரனின் வலப்புறத் தோளில் மெய்யாகவே ஒரு பச்சைப் பசுங்கிளி!

"என்ன தேவயானி, நமக்குத் தெரியாமல் ரகசியமாய்க் கிளி வளர்க்கிறீர்கள் போல!?" வியப்பாய்க் கேட்ட நமக்கு அவரும் வியப்போடு பதில் தருகிறார்.

"ஆங்...! கல்யாணம் முடிஞ்சு கணவரோடு இந்த வீட்டுக்குக் குடி வந்த மறுநாள், சின்னக் காயத்தோடு, ஒரு குஞ்சாக இங்கே வந்து விழுந்தது. உடனே எடுத்து வளர்க்க ஆரம்பிச்சுட்டேன்! மீனாட்சின்னு பேர் வெச்சிருக்கோம். மூணு மாசத்துல பெரிய

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com





பொண்ணா வளர்ந்துடுச்சி. எங்கிட்டே ரொம்ப செல்லம். பெப்ஸின்னா ரொம்ப பிரியமாக் குடிக்கும்" என்று இவரும் கிளி போலவே, பிசிறில்லாத கீச்சுக் குரலில் மூச்சு வாங்கப் பேசுகிறார்.

உரையாடல் சினிமா பக்கம் திரும்புகிறது.

''உங்க திடீர் திருமணத்தால், நீங்க நடிக்க ஒப்பந்தமாகியிருந்த படங்களில் இருந்து உங்களை நீக்கியது, மனத்தளவில் ரொம்ப பாதிப்பை ஏற்படுத்தியதா?" என்றால் ''நான் பதற்றப்படுற பொண்ணு இல்லை. எந்தச் சூழ்நிலையிலும் நிதானமா காத்திருந்து சாதிப்பேன். இப்போகூட அப்படித்தான் பொறுமையா இருக்கேன். சின்ன வயசுலேர்ந்து இதுதான் என் கேரக்டர்" என்கிறார்.

''என்னோட நடிப்புத் திறமையிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கு. ஒரு நல்ல நடிகரையோ நடிகையையோ, இண்டஸ்ட்ரியிலிருந்து அவ்வளவு சீக்கிரம் அப்புறப்படுத்த முடியாதுங்கறது என்னோட அபிப்பிராயம். ஒரு டெடிகேட்டட் ஆர்ட்டிஸ்டுக்குத் தொடர்ந்து வாய்ப்பு வந்துகிட்டேதான் இருக்கும். ஆர்டிஸ்டா விரும்பி இனி நடிக்கிறதில்லேன்னு ஒதுங்கினாத்தான் உண்டு. என்னை மாதிரி திறமை மீது நம்பிக்கை வைக்கிற நடிகைகள், கறுப்பு வெள்ளை காலத்திலிருந்து இருந்துகிட்டுதான் இருக்காங்க. கல்யாணம், ஆனாலும், ஆகலைன்னாலும் அவங்களைச் சினிமாவிலிருந்து பிரிக்க முடியாது. ரேவதி, சுகாசினி, மாதுரி தீட்சித், ஷப்னா ஆஸ்மி, ஊர்மிளான்னு நிறைய உதாரணத்தை என்னால சொல்ல முடியும்.

''என் விஷயத்தில் என்ன நடந்தது தெரியுமா? கல்யாணத்தப்போ, கையிலே இரண்டு, மூன்று படங்கள்தான் இருந்தது. அந்த வாய்ப்புகள் கைவிட்டுப் போனது உண்மைதான். ஆனால் பத்திரிகைகளில் ஒரு டஜன் படம் என்றெல்லாம் மிகைப்படுத்தி எழுதிட்டாங்க. பம்மல் கே.சம்பந்தம் படத்தில் என்னை மறுபடியும் நடிக்கச் சொல்லி கமல் சார் அன்பு காட்டினார். அவர் மாதிரி நல்லவங்க நிறைய பேர் சினிமாவில் இருக்காங்க. அப்புறம் எதுக்கு நான் கலங்கணும். இப்போ பழையபடி என் சினிமா கேரியர் தொடங்கிடுச்சு. தங்கர்பச்சான் இயக்கத்தில் 'அழகி' படம், 'கிளிக்' படத்துல பிரபு, கார்த்திக், மீனாகூட நடிக்கிறேன். பிரகாஷ்ராஜ் சொந்தமாகத் தயாரிக்கிற 'தயா' படத்துலேயும் முரளி சார்கூட 'கந்தவேல்' படத்துல நடிக்கிறேன். கடைசி வரை நடிச்சுகிட்டேதான் இருப்பேன்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்ன தேவயானியின் முகத்தில் நம்பிக்கை வெளிச்சம்.

''இனி தேவயானி அவ்வளவுதான் என்று பேச்சு எழுந்தபோது, உங்கள் ரசிகர்களிடம் பிரதிபலிப்பு எப்படியிருந்தது?" என்றதும் பட்டென்று கண் கலங்கிப் போனார் தேவயானி.

''நான் எதை உங்ககிட்ட மறக்காமல் சொல்லணும்னு நினைச்சேனோ, அதை நீங்களே கேட்டதுக்கு ரொம்ப நன்றி! தமிழ் மக்கள் ஒவ்வொருத்தரும், அவங்க வயசுக்குத் தகுந்த மாதிரி அன்பு காட்டினாங்க. இப்பவும்தான். வயசான பெரியவங்க, என்னை மகள் மாதிரி நினைக்கிறதா லெட்டர் போடுறாங்க. நாற்பது வயசுக்காரங்க... வைரம் எனக்கும் உன்னை மாதிரி ஒரு தங்கை இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும்னு எழுதறாங்க. வாலிப ரசிகர்களும், பொண்ணுங்களும் உங்களுக்குப் புடைவைதான் ப்ளஸ், அதுலதான் நீங்க தேவதை மாதிரி இருக்கீங்கன்னு எழுதறாங்க. படப்பிடிப்புலே, ஏர்போர்ட்லே, கோவில்லே எங்கே போனாலும் தாய்மார்கள் என் கையைப் பாசமா இறுக்கிப் பிடிச்சுக்கறாங்க. நீ எங்க வீட்டுப் பொண்ணு என்று சொல்றப்போ நான் அழுதுடுறேன். நான் சினிமா


வுக்கு வரும்போது நடிப்பைத் தவிர வேறு எதையும் கொண்டு வரலே. பணம், புகழ் எல்லாம் கொடுத்தது அவங்கதான். அப்படிப் பட்டவங்க என்னை எப்படிக் கைவிடுவாங்க..." என்று உடைந்து, பளீர் கன்னத்தில் ஒரு கோடாய் இறங்கிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டவரிடம் 'திருமண வாழ்க்கை எப்படியிருக்கிறது' என்றதும் முகம் முழுக்க சந்தோஷம் களை வந்து உட்கார்ந்து கொள்கிறது.

"என்னை எல்லோரும் ஒரு குழந்தை மாதிரி நடத்துறாங்க. இதைச் சாப்பிடு, அதைச் சாப்பிடுன்னு சொல்றாங்க. கணவரும் சரி, மாமியாரும் சரி என்னைக் குழந்தை மாதிரி கொஞ்சுறாங்க.. இதனாலே ஷூட்டிங் முடிஞ்சு வீட்டுக்கு வந்தாலே ஒரு குழந்தை மாதிரி ஆயிடுறேன். அவர் எனக்குச் சாப்பாட்டை ஊட்டி விடுகிறார். இது மாதிரி சின்ன சந்தோஷங்கள் நிறைய. அடிக்கடிக் கோவிலுக்குப் போறோம். 'சுந்தர புருஷன்'னு ஒரு மலையாள படத்தில் நடிக்க கணவரோடு கேரளா போயிருந்தேன். அங்கே நிறைய அவுட்டிங் போனோம். வாழ்க்கை ரொம்ப சந்தோஷமாக இருக்கு" என்று வெட்கப்பட்ட தேவயானி, ஒரு விஷயம் புரியவேயில்லை' என்கிறார். "ஒரு நடிகை ஒரு தொழில் அதிபரைத் திருமணம் செய்துகொண்டு அமெரிக்காவிலோ, லண்டனிலோ செட்டிலாகிவிட்டால் யாரும் கேட்பதில்லை. அதேபோல ஒரு தயாரிப்பாளரைத் திருமணம் செய்துகொண்டாலும் பரபரப்பாகப் பேசுவதில்லை. ஆனால் ஓர் இயக்குனரைத் திருமணம் செய்துகிட்டா மட்டும் ஏன் இப்படிப் பார்க்குறாங்க? ஒரே துறையைச் சேர்ந்த இரண்டு கலைஞர்கள் ஒன்று சேர்ந்தால் ஏதாவது தேச விரோதமா...?" என்று தைரியமாகக் கேட்கிறார். விடை பெறும் முன் "உங்க குழந்தைக்கு எப்போது ஸ்வெட்டர் பின்னப் போறீங்க?" என்றதும் அதுக்கு இன்னும் இரண்டு வருடம் ஆகும் சார் முதல்லே வாழ்க்கை. குழந்தை பிறக்கறப்போ அந்த குழந்தைக்குத் தேவையான எல்லா வசதியும் நம்மகிட்டே இருக்கணும். அதுவரைக்கும் ஜாலியா இருப்போம்" என்று வெளிப்படையாகப் பேசும் தேவயானிக்குப் பக்கத்தில், சர்ரென்று பறந்து வந்து மீனாட்சிக்கிளி அமர்கிறது. அதை லாகவமாய்க் கைகளில் தூக்கி... "மீனா குட்டி..." என்று கொஞ்சியபடி கிளியின் அன்பில் மூழ்க, நமது சிறகுகளை அலுவலகம் நோக்கித் திருப்பினோம்.

சந்திப்பு: **விஷ்ணுவல்தாசன்**
படங்கள்: **ஜரிஸ்**

## எஸ்.எம்.எஸ் மொழி அகராதி!

**ஐ**ந்து வருடங்களுக்கு முன்னால் ஒரு செல்ஃபோன் ஒலித்தால், சுற்றியுள்ள தலைகள் திரும்பும் – 'அட யார் அந்தப் பெரும்புள்ளி?' என்று அறிந்துகொள்ள... இன்று பெட்டிக்கடை வியாபாரிக்கும் கூட செல்ஃபோன்கள் வசப்படக் காரணம் ப்ரீபெய்ட் வசதி.



''இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கிய ஹாண்ட் செட் இருந்தால் போதும், பெட்ரோல் பங்கிலோ, மளிகைக் கடையிலோ ப்ரீபெய்ட் அட்டையை வாங்கிச் செருகிக் கொண்ட அடுத்த கணம் பேசத் தொடங்கி விடலாம்'' என்கிறார் ஆர்பிஜி செல்லுலரின் மார்க்கெட்டிங் பிரிவுத் துணைத் தலைவர் பத்மநாபன்.

''வெறும் 299 ரூபாயில் லைப் ஸ்டைல் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். கூடுதலாக ரூபாய் எழுபத்தைந்து செலுத்தி இரவு பத்து மூதல் காலை ஆறு வரை இலவசமாகப் பேசலாம்'' என்கிறார்.

இது தவிர எஸ்.எம்.எஸ் எனப்படும் ஷார்ட் மேசெஜிங் சர்விஸ் மூலம் ஒரு ரூபாய் ஐம்பது பைசா செலவில் உலகின் எந்த மூலைக்கும் செய்தி அனுப்பலாமாம். இதற்கென்றே எஸ்.எம்.எஸ் மொழி அகராதி ஒன்றைப் பதிப்பித்துப் புரட்சி பண்ணியிருக்கிறார்கள். ஹவ் ஆர் யூ என்று மெசேஜ் அடிக்க 'HOWRU' என்று டைப் செய்தால் போதுமாம். ஜஸ்ட் டிமாண்ட் சர்வீஸ் மூலம் எண் 628 டயல் செய்தால் பிட்ஸாவும், 678க்கு டாக்ஸியும், 654க்குச் சினிமா டிக்கெட்டும் வீடு தேடி வரும் என்கிறார்கள். அடுத்து செல்ஃபோன் மூலம் மொபைல் பேங்கிங் வசதியையும் அறிமுகப்படுத்தப் போகிறார்களாம். அதுசரி இந்த பேஜர் பிஸினஸ் என்னாச்சுங்க?

— ஜெ

# அப்போலோவில் கலைஞர்!

அப்போலோ மருத்துவமனை! நான்காவது மாடி. அறை எண் 418. அறையை ஒட்டிய தாழ்வாரத்தில் சிறு பரபரப்பு. சக்கர நாற்காலியில் வெளியே வருகிறார் கலைஞர். மஜந்தா மற்றும் கறுப்பு, கலர்களில் கட்டம் போட்ட லுங்கி. மேலே கட் பனியன். இரண்டு கைகளையும் மறைக்கும் மஞ்சள் சால்வை, முன்னால் டாக்டர் கோபால். நாற்காலியின் பின்னால் தயாளு அம்மையார். வணங்குபவர்களைப் பார்த்து இடது கையைத் தூக்கி ரெஸ்பான்ஸ் கொடுக்கிறார். கலைஞரை நேராக நரம்பியல் துறையின் தலைவரான டாக்டர் ஜாகீர் அப்பாஸின் அறைக்கு அழைத்துச் செல்கிறார்கள். முதல் நாள் எடுத்த எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அலசப்பட்டு, மருந்துகள் எழுதப்படுகின்றன.

''கைது செய்து இழுத்துக் கொண்டு போகும்போது வலது கை தோள்பட்டைக்குக் கீழே முரட்டுத் தனமாக அழுத்திப் பிடித்ததால், அந்த இடம் கூழ்போல் ஆகிவிட்டது. இதன் காரணமாக நாளடைவில் இரத்தக் கசிவு ஏற்பட்டு, இரத்தம் கட்டிவிட்டது. அதனால் வலியில் துடித்தார் கலைஞர். சமாளிக்கவே முடியாத நிலையில் அட்மிட் ஆகிவிட்டார். இப்போது எல்லாவிதமான பரிசோதனைகளையும் செய்து முடித்துவிட்டோம். இன்னும் இரண்டொரு நாளில் டிஸ்சார்ஜ் செய்து விடுவோம். பழையபடி வலது கை செயல்பட இன்னும் சிறிது காலம் ஆகலாம்'' என்கிறார் ஒரு டாக்டர்.

“உடலில் வேறு எந்த இடத்தில் காயம் பட்டாலோ அல்லது செயலாற்ற முடியாமல் இருந்தாலோகூட இந்த அளவுக்குக் கவலைப்பட மாட்டார் கலைஞர். ஆனால் உடன் பிறப்புகளுக்குத் தினசரி கடிதம் எழுதும் வலது கையை உபயோகிக்க முடியாத நிலையில் கலங்கிப் போய்விட்டார். சிறையில் இருந்து வெளி வந்த பின்னர் உடன் பிறப்புகளுக்கு எழுதிய கடிதம் ஆகட்டும்; கவிதை ஆகட்டும்; எல்லாம் அவர் சொல்ல, சொல்ல சண்முகநாதன் எழுதியதுதான். எதையுமே தன் கையால் எழுதிக் கொடுத்து வழக்கப்பட்ட அவருக்கு இது புது அனுபவம். இந்த முறை, அவருக்குத் திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை'' என்கிறார் கூடவே இருக்கும் உடன்பிறப்பு ஒருவர்.

“ஆஸ்பத்திரியில் சேருவதற்கு முதல் நாள் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் முறைகேடாக நடந்த போலீஸ் அதிகாரிகள் டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று சொன்னார் கலைஞர், அது போன்று தாம் கேட்பதற்கு வலுவான காரணம் இருக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சட்டையைக் கழற்றி பாதிக்கப்பட்ட இடத்தைக் காட்டினாராம் கலைஞர். மலிவான விளம்பரத்தால் அனுதாபம் தேடிக் கொள்ளும் அளவுக்குத் தலைவர் சின்னபுத்தி படைத்தவரல்ல.'' என்றார் அறிவாலயத்தில் நாம் சந்தித்த சீனியர் தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

பத்திரிகையாளர் சந்திப்பு நடந்த அன்றே

இரவு வலி காரணமாக கலைஞரின் தூக்கம் பாதிக்கப்பட்டது. உடனடியாக வந்த டாக்டர் கோபால் அட்மிட் ஆகி சிகிச்சை எடுத்துக் கொள்வதே சரியாக இருக்கும் என்று சொல்லிவிட்டார். தமக்கு உடல் நலக் குறைவு எதுவும் ஏற்பட்டால் டாக்டர் தணிகாசலம் மேற்பார்வையில் ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை



எடுத்துக் கொள்ளும் கலைஞர், மாறன் 'மீண்டு' வந்ததற்குப் பிறகு அப்போலோவிற்குப் போவதையே விரும்புகிறார்.

முதலில் கலைஞரை, ஆற்காட்டார் தங்கியிருந்த மூன்றாவது மாடி அறையில் தான் அனுமதித்தார்கள். ஒரு நாள் அங் கிருந்த பிறகு நான்காவது மாடிக்கு மாற்றப் பட்டார். காலையில் ஏழெட்டு தினசரி பத்திரிகைகளைப் படித்து முடிக்கிறார். தொலைக்காட்சிகளில் செய்திகளைப் பார்க்கிறார். வீட்டிலிருந்து உணவு வருகிறது. இப்போதெல்லாம் சைவச் சாப்பாடுதான். உப்பும் எண்ணெயும் குறைவாக உள்ள சமையல். மகள் செல்வி, அவரது கண வர் செல்வம், மேயர் ஸ்டாலின், அவர் மனைவி துர்கா ஆகியோர் தவறாமல் மருத்துவமனைக்கு தினசரி வந்து விடுகிறார்கள். மகள் கனிமொழியும் மருமகன் அரவிந்த னும் ஒரு விஸிட் கொடுக்கிறார்கள். பொன்முடி பெரும்பாலான நேரம் இருக்கிறார். பேராசிரியர் அன்பழகன், துரைமுருகன், முன்னாள் அமைச்சர் சுந்தரம், அறிவாலயத்தில் பணிகளைக் கவனிக்கும் முக்கியப் பிரமுகர்கள் கலைஞரைப் பார்க்க வருகிறார்கள். அட்மிட் ஆன அன்று பிரதமர் வாஜ்பாய், முன்னாள் பிரதமர் வி.பி.சிங் ஆகியோர் தொலைபேசி யில் உடல் நிலைப் பற்றி கலைஞ ரிடம் விசாரித்தனர்.

ஒரு புத்தகத்தைப் பிடித்து நீண்ட நேரம் படிக்க முடியாத நிலையும் கலைஞரை மேலும் வாட்டுகிறது. அதனால் வீட்டு நூலகத்திலிருந்து வந்த பல நூல்கள் கலைஞரால் தொடப் படாமலேயே இருக்கின்றன.

''எழுதுவது என்பது அவருக்கு தினசரி உணவு போன்றது. அது சாத்தியப்படாத பட்சத்தில் அவர் அனுபவிக்கும் அவஸ்தையை சமயத்தில் அவர் அடிக்கும் ஜோக்குகளால்கூட மறைக்க முடியவில்லை'' என்று வருத்தப்படு கிறார் கழகப் பிர முகர் ஒருவர்.

- கௌசி

ஜெஃப்ரி ஆர்சர் ஜெயிலுக்குப் போன கதையை இரண்டு வாரம் முன்பு கல்கியில் படிச்சிருப்பீங்க... லேட்டஸ்ட் நியூஸ் தெரியுமா...? அவர் பையனும் இப்போ ஜெயில்ல இருக்கார்! - லண்டன் ஷேர் மார்க்கெட்ல தகிடுதத்தம் செஞ்சதுக்காக! இன்ஸ்பிரேஷன் ஹர்ஷத் மேத்தா...?

நல்ல இன்ஸ்பிரேஷன் பத்தியும் கொஞ்சம் சொல்லணும் - பழநிபாரதியோட லேட்டஸ்ட் புக் 'காதலின் பின்கதவு' (குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, த.பெ. எண் 6124, தியாகராய நகர், சென்னை - 600 017. விலை ரூ. 60)

தலைப்பும் தலைப்புக் கவிதையும் ரொம்ப சினிகல்தான். மற்ற கவிதைகள்லேயும் அது தொடருது. ஆனா நிறைய இடங்கள்ல அந்த சினிஸிஸத்தை மீறி, கவிதை ஜெயிச்சு நிக்குது. பல கவிதைகளில் ரொம்ப ஆழமான தெறிப்புகள் தனிக் கவிதை அந்தஸ்தோட தென்படுது. ஃபர் எக்ஸாம்பிள்:

*சொந்தச் சாவிகளை*
*உணரும் திறனிழந்து*
*ஏமாற்றப்பட்ட பூட்டுகள்*
*எல்லாச் சாவிகளுக்கும்*
*பழகிப் போயின*
*(- சாவிகள் இல்லாத காலம்)*

*பூச்செடி வளர்க்க முடியாத*
*எங்கள் சிறிய வீட்டில்*
*வளர்ந்து கொண்டிருக்கிறாள்*
*லாவண்யா*
*(செடிமகள்)*

*தாத்தாவின் வேட்டியில்*
*வடகம் காய*
*புகைக்கூண்டில் நின்று*
*உற்றுப் பார்க்கின்றன*
*காகங்கள்*
*(-தாத்தா)*


*வீழ்ந்துவிட்ட நட்சத்திரமாய்*
*என்னைப்*
*பார்த்துக் கொண்டிருக்கும் வானம்*
*(-பெயர் தெரியாத கணம்)*

ஒன் ஆர் டூ சுமார் கவிதைகளையும் பொருந்தாத போட்டோ படங்களையும் மறந்துட்டா இது நல்ல தொகுதி. 'லாலாக்கு டோல் டப்பிமா'வும் 'மச்சினிச்சி வர்ற நேரம்'னும் எழுதற சினிமா உலகத்துல பிழைப்பு நடத்திக்கிட்டு சென்ஸிடிவிடியைத் தொலைக்காம காப்பாத்திக்கற சிலருள் ஒருத்தரா பழநிபாரதி தெரியறார். எந்த வேலி அவரைக் காப்பாத்துதோ அது வாழ்க!

நல்ல படங்களோட வெளியான புத்தகம் ஆங்கில பொன்னியின் செல்வன். (மாக்மில்லன் வெளியீடு; மொழிபெயர்ப்பு கார்த்திக் நாராயணன். ஐந்தாவது பாகம் தயாரிப்பில்...)

இதுக்குப் படங்கள் வரைஞ்ச ஏ.வி. இளங்கோ சமீபத்தில் பொ.செ. படங்களை மட்டும் ஒரு எக்ஸிபிஷன் வைச்சார். கிட்டத்தட்ட எல்லாமே பிளாக் அண்ட் ஒயிட் கோட்டுச் சித்திரம். குறைச்சலான லைன்ஸ், நல்ல ஃப்ளோ. இளங்கோ அத்தனை படங்களையும் வரையப் பயன்படுத்தினது பிரஷ்ஷோ பேனாவோ இல்லை... ஈர்க்குச்சி! தென்னம் ஈர்க்கோட சன்னமான மேடு பள்ளங்களையும் அடி நுனியையும்


• இளங்கோவின் ஓவியம்


• தென்கச்சி


• பழநிபாரதி



## சுமி சூப்பர் மார்க்கெட்

# ஒழிக அந்த ஒலி!

பயன்படுத்தி, கோடுகளைப் பேச வைச்சிருக்கார். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம், இளங்கோவுக்கு சர்க்குச்சியும் ஆயுதம்!

'ஒரு ஷாக்கிங் நியூஸ் தெரியுமா?'ன்னு நான் கேட்டா, 'ஓ தெரியுமே! குன்னக்குடி சுப்ரபாதத்தையும் சஹஸ்ரநாமத்தையும் வயலின்ல வாசிச்சிருக்கார்; அதானே?'ன்னு வீங்க... நான் அதைச் சொல்லலை, காஸெட் போட கம்பெனி தயாராயிருக்கறப்போ அவர் வாசிக்கறதுல என்ன அதிசயமிருக்கு...?

நான் சொல்ல வந்த ஷாக்கிங் நியூஸ் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு உண்டாகற நஷ்டம்- எலக்ட்ரிஸிடி வினியோகத்திலேயும் டிரான்ஸ்மிஷன்லேயும் ஏற்படற நஷ்டம் மட்டும் ரூ. 5200 கோடி பெறுமாம். இதை ஓரளவு குறைக்கறதுக்கு நாலாயிரம் கோடி செலவழிக்க திட்டம் போட்டிருக்காம் தமிழக அரசு. எல்லாம் நம்ம வரிப் பணத்துலேயிருந்துதான். வீட்ல ஃபேன் ஏதாவது அனாவசியமா ஓடிக்கிட்டிருந்தா முதல்ல எழுந்து போய் அணையுங்க!

ஒரு குட்டிக்கதை சொல்லிட்டு சூப்பர் மார்க்கெட்ல ஷட்டரை டவுன் பண்ணலாம்னு நினைக்கிறேன்.

அவர் ஒரு மாபெரும் இசை மேதை.

எவ்வளவோ 'சிம்பொனி'களை உருவாக்கியவர்.

எவ்வளவோ பேரின் செவிகளை இசை மழையால் குளிர வைத்தவர்.

ஒரு கட்டத்தில் அவருடைய செவிகள் கேட்கும் சக்தியை இழந்தன.

அதற்குப் பிறகும்கூட பல புதிய இசைத் தொகுதிகளை உருவாக்கி இந்த உலகத்துக்குக் கொடுத்திருக்கிறார்.

ஒரு தடவை.

அவர் தமது இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்குவதற்காக வெளியூர் சென்றார்.

ஒரு நாள் முன்னதாகவே அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்.

முதல் நாளே ஒத்திகை நடந்தது.

குழுவினரெல்லாம் வந்து கூடினார்கள்.

நாளை நடைபெறப் போகிற கலையரங்கம் இன்றைக்கே களைகட்ட ஆரம்பித்தது.

இவரின் வழிகாட்டுதலில் இசைவெள்ளம் உற்பத்தியாகிறது.

இந்த சமயத்தில்...

எங்கிருந்தோ ஒரு சத்தம்.

தட்...தட்... என்று கேட்க ஆரம்பித்தது.

எங்கேயிருந்து வருகிறது அந்த சத்தம்.... என்று திரும்பிப் பார்த்தார்.

அந்த அரங்கின் ஒரு பகுதியில் தச்சு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

ஆணியைப் பலகையில் நிறுத்தி அதன் தலையில் சுத்தியால் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

இசைக்குழுவில் இருந்தவர்கள் பொறுமை இழந்தார்கள்.

"இப்படி இடைஞ்சல் பண்ணினால் எப்படி ஒத்திகை பார்ப்பது?"

தமது குழுவினரின் தடுமாற்றத்தைக் கவனித்தார் அந்த இசைமேதை.

உடனே ஒத்திகையை நிறுத்தினார்.

தச்சு வேலை செய்கிறவர்கள் பக்கம் தலையைத் திருப்பினார்:

"ஐயா... எங்களின் இசை உங்களுக்குத் தொந்தரவாக இருக்கிறதா?"

ஆணியை அடிக்கக் கையை ஓங்கியவர்கள் அங்கேயே நிறுத்திக் கொண்டார்கள்.

நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை:

நமக்குத் தொந்தரவாகத் தெரிகிறவர்களுக்கு நாம் தொந்தரவாகத் தெரிகிறோம்.!

– கதையைச் சொன்னவர் "இன்று ஒரு தகவல் புகழ் தென்கச்சி சுவாமிநாதன்.

ரீசன்டா ஹ்யூமர் க்ளப் ட்ரிப்ளிகேன் சாப்டர் தென்கச்சியாரைக் கூப்பிட்டு வைச்சுப் பாராட்டு விழா நடத்தினது ஒரு நல்ல காரியம். தகவலாரோட குட்டிக் கதைகளை(மேற்கண்டது உள்பட) தொகுத்துப் புத்தகமா போட்டது இன்னொரு நல்ல காரியம். புத்தகத்தோட பெயர் 'உள்ளமே உலகம்'. புண்ணியத்தைக் கட்டிக் கொண்ட பதிப்பகம்: வானதி. — சுமி

சர்க்கரை நோய்க்கு மட்டுமல்ல, இடுப்பு தேய்மானத்திற்கும் அதிகம் ஆளாவது இந்தியர்கள்தான். இது ஏதோ அனுமானம் அல்ல. உலக சுகாதார நிறுவனம் தரும் புள்ளி விவரம்.

அவாஸ்குலர் நேக்ரோசிஸ் என்று அழைக்கப்படும் இந்த இடுப்பு மூட்டு தேய்மானம், குறிப்பாக இளைஞர்களைத்தான் அதிகம் பாதிக்கிறது. இந்தப் பிரச்னையோடு, நீண்டகாலம் போராடிவிட்டு, நடக்க முடியாத நிலையில் மருத்துவமனையைத் தேடிவரும் இளைஞர்களுக்கு, மருத்துவர்கள் வலி நிவாரணி மாத்திரைகளைக் கொடுத்து விடுவது வழக்கம். காரணம், இயற்கையாக அமைந்த பந்து - கிண்ண மூட்டை (தேய்ந்து போனது) அகற்றிவிட்டு, மெட்டல் மற்றும் பிளாஸ்டிக்கினால் ஆன செயற்கை மூட்டை அறுவை சிகிச்சை மூலம் பொறுத்தும் Total Hip Replacement சிகிச்சையை இளைஞர்களுக்குச் செய்வதில்லை. பொதுவாக இடுப்பு பாதிப்பு ஏற்படும் முதியவர்களுக்கே இந்த மூட்டு நீக்க சிகிச்சை செய்யப்பட்டு வந்தது.

அதற்குக் காரணம், வயதானவர்கள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு அதிகம் செயல்பட மாட்டார்கள். இதனால் பொறுத்தப்படும் செயற்கை பிளாஸ்டிக் மூட்டின் ஆயுட்காலம், குறைந்தபட்சம் பதினைந்து வருடமாக இருந்து வந்தது. ஆனால் இளம் வயதினருக்கு இது பொருத்தப்பட்டால், பிளாஸ்டிக் விரைவாகத் தேய்ந்து, செயற்கை மூட்டு செயல் இழந்து விடுகிறது. எனவே, பாதிக்கப்பட்ட இளம் வயதினரை, அறுபது வயது வரை காத்திருந்து, பின்னர் செயற்கை மூட்டு பொறுத்திக் கொள்ளுமாறு டாக்டர்கள் ஆலோசனை கூறி அனுப்பி விடுகிறார்கள். பாதிக்கப்பட்டவரோ, வலியுடன் வருடக் கணக்கில், நடைபிணமாக வாழ வேண்டிய அவல நிலைதான் நேற்று வரை நீடித்து வந்தது. இந்த நிலையைத் தலைகீழாக மாற்றிக் காட்டியிருக்கிறது Birmigham Hip Resurfacing என்று அழைக்கப்படும் புதிய முறை.

நாற்பது வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் பழைய சிகிச்சைமுறையைக் கண்டுபிடித்த இங்கிலாந்து நாட்டவர்கள் தான் இந்தப் புதிய முறையையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். ராடன் கிரேசிவை, மெக்மென் ஆகிய இரண்டு எலும்பு ஆராய்ச்சியாளர்களின் முப்பது வருட உழைப்பின் பலனாக கிடைத்துள்ள இந்தப் புதிய சிகிச்சைமுறையை, ஆசியாவில், சென்னையில் உள்ள, அப்பல்லோ மருத்துவ மனை டாக்டர், விஜய். சி. போஸ் மட்டும் தான் மேற்கொண்டு வருகிறார். அவரிடம் இடுப்பு மூட்டுக்கள் ஏன் பாதிக்கப்படு கின்றன? என்று பேட்டியைத் தொடங்கினோம்.

• பழையமுறை



# மூட்டைக் மூட்டுப் பிர

"இடுப்பு மூட்டுகள் ஏன் தேய்ந்து போகின்றன என்று தெரிந்து கொள்வதற்கு முன்பு முதலில் இடுப்பு மூட்டு என்றால் என்ன? என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால், இடுப்பு மூட்டுகளில் ஏற்படும் வலியை முதுகுவலி என்று தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். தொடை எலும்பின் முடிவில் பந்து வடிவில், உருண்டையாக ஒரு எலும்பு இருக்கும். பெல்விஸ் என்று அழைக்கப்படும் இடுப்பு எலும்பில், தொடை எலும்புடன் கூடிய பந்தை நழுவ விடாமல் பிடித்துக் கொள்ளும் கிண்ணம் போன்று குழியான மூட்டு இருக்கிறது. இந்த இரண்டு எலும்பு அமைப்புகளையும் சேர்த்துதான், நாம் பந்து-கிண்ண மூட்டு என்று சொல்கிறோம்.



• புதியமுறை

"இந்த மூட்டுக்கள், நமது ஒவ்வொரு செயல்பாட்டின்போதும், இயல்பாகச் இயங்க, இங்கே இரத்த ஓட்டம் ஒரே சீராக இருப்பது அவசியம். இரத்த ஓட்டம் குறைந்து விடும்போது லூப்ரிகேஷன் தன்மை மெல்ல மெல்லக் குறைந்து, பந்து-கிண்ண மூட்டு தேய்ந்து விடுகிறது. இதனால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இடிபோல் கஷ்டமாக இருக்கும். மூட்டுத் தேய்மானத்தை எக்ஸ்ரே மூலமே உறுதி செய்து கொள்ள முடியும்." என்றவரை இடைமறித்து இதை ஆரம்பத்திலேயே தடுத்துவிட முடியாதா? என்றோம்.

"இது ஒரு நோய் அல்ல, நிலை. சிறு

# கட்டுங்க
# ச்னையை!

வயதில் காயம் ஏற்பட்டு முறையான சிகிச்சை பெறாமல் இருந்து விடுவதால் ஏற்படும் இரத்தக்கட்டு ஒரு காரணம். ஆஸ்த்துமா, மற்றும் தோல் நோய்களுக்குக் கொடுக்கப்படும் ஸ்டிராய்டு மருந்து, இடுப்பு மூட்டுப் பிரச்னைக்குக் முக்கிய காரணம். குறிப்பாக, மரபுக் கூறுகள் வழியே இப்பிரச்னை அதிகம் வருகிறது. பெண்களைப் பெரும்பாலும் பிரசவ காலத்தின்போது ஏற்படும் இரத்த ஓட்டக் குறைவு மூலம் பாதிக்கிறது.

"இவ்வாறு பாதிக்கப்படுகிறவர்களுக்கு, முதியவர்கள் என்றால், தொடை எலும்பில் உள்ள பந்து-கிண்ண மூட்டை நீக்கிவிட்டு, ஸ்டீலால் ஆன அமைப்பைப் பொருத்தி கிண்ண அமைப்பில் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட மூட்டை வைத்து அறுவை சிகிச்சை செய்து வந்தோம். இப்படிச் செய்யப்படும் சிகிச்சைக்குப் பிறகு, அவர்கள் தரையில் சம்மணமிட்டு உட்கார முடியாது. இருக்கையில்தான் உட்கார வேண்டும். சைக்கிள் ஓட்டுவது, ஓடுவது, வேகமாக நடப்பது போன்ற கடினமான காரியங்கள் எதுவும் செய்ய முடியாது. இந்தப் பிரச்னையால் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்பட்ட போதும், அவர்களுக்கு சிகிச்சை மறுக்கப்பட்டே வந்திருக்கிறது. நான் மேலே சொன்ன அத்தனை சிரமங்களுக்கும் நிரந்தரத் தீர்வாக வந்திருக்கிறது பர்மிங்காம் மூட்டுச் சீரமைப்பு அறுவை சிகிச்சை.

"முதலில் காரணமில்லாமல் ஒரு எலும்பை நீக்குவதே கிரிமினல் குற்றம் என்று நான் நினைக்கிறேன். புதிய முறையில், பந்து, கிண்ண மூட்டில் உள்ள எந்த பகுதியையும் நீக்காமல் பந்து எலும்பின் மேலேயே பர்மிங்காம் ஸ்டீல் மூட்டும், கிண்ணப்

பகுதியில் ஸ்டீல் இன்னமும் பொருத்தப்படுகிறது. பர்மிங்காமில் உள்ள புகழ் பெற்ற விமான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் உயர்ரக ஸ்டீலால் தயாரிக்கப்படும் இந்த மூட்டு, வாழ்நாளின் இறுதிவரையும் அல்லது ஒருவர் இருநூறு ஆண்டுகள் உயிர் வாழ்ந்தால்கூட சிறு தேய்மானம் இல்லாமல் உழைக்கும்.

இதனால்தான் 'எவர்லாஸ்டிங் மூட்டு' என்று மருத்துவர்கள் இதற்குப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

"பர்மிங்காம் மூட்டு பொருத்த மூன்று மணி நேர அறுவை சிகிச்சையே போதுமானது. அறுவை சிகிச்சை செய்து கொண்ட நான்காவது நாள், வழக்கமான பணிகளில் ஈடுபடலாம். பர்மிங்காம் மூட்டுப் பொருத்திக் கொண்ட நார்வே கால்பந்து வீரர் 1998 உலக கால்பந்து போட்டியில் கலந்து வெற்றி பெற்றது உலக சாதனை என்றே சொல்லலாம். இந்த மூட்டுப் பொருத்திக் கொண்ட பின் இப்பிரச்னையை மூட்டை கட்டி விடலாம். குறிப்பாக இளைஞர்கள் எத்தகைய கடினமான வேலையையும் செய்யலாம். உள்ளே ஸ்டீல் மூட்டு பொருத்தப்பட்ட உணர்வுகூட இருக்காது" என்ற டாக்டர் போஸிடம், இந்தப் புதிய முறையைச் சென்னைக்குக் கொண்டு வர வேண்டும் என்று தோன்றியது ஏன்? என்றோம்.

"நான் சென்னை மருத்துவக் கல்லூரியில் ஆர்த்தோபிடிக்ஸ் பயின்று 1998ல் தங்கப் பதக்கம் பெற்றேன். அதன்பிறகு இங்கிலாந்தில் வேலை கிடைத்தது. எலும்பியல் படித்திருந்தும் பர்மிங்காம் மூட்டுச் சீரமைப்பு பற்றி அங்கே சென்றுதான் அறிந்து கொண்டேன். நான் பயிற்சி டாக்டராக இருந்தபோது, மூட்டுப் பிரச்னையோடு வந்த நம் இளைஞர்களை நினைத்து வேதனைப்பட்டதுண்டு. அவர்களுக்கு இந்த சிகிச்சையை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உறுதியோடு, ஐந்து ஆண்டுகள் பர்மிங்காம் மருத்துவமனையில் பணி புரிந்து புதிய முறையில் தேர்ச்சி பெற்றேன். இதுவரை இருபத்தைந்து அறுவை சிகிச்சைகள் முடித்திருக்கிறேன். பாதிக்கப்பட்டவர்கள், கண் முன்பு நிரந்தர குணம் அடைவது நிறைய மனநிறைவு தருகிறது" என்கிறார்.

- சக்கரத்தாழ்வார்

## நான் தொலைந்து விட்டேன்!

உறங்க மறுத்து
அடம் பிடிக்கும் விழிகள்
வெறுமனே விழித்திருந்தால் பரவாயில்லை
கண்ணீர்ப் பூக்களையல்லவா புஷ்பிக்கின்றன.

மல்லுக்கட்டும்போது
சில சமயங்களில் தூங்கிப் போகும்
என் கண் நிலாக்களை
கனவுராணிகள் அல்லவா களவாடிக் கொள்கிறார்கள்.

கண் விழிப்பும்
கண்ணீர்ப் பூக்களும்
மல்லுக் கட்டலும்
பறி கொடுத்தலும்
அவளுக்கும் இருக்குமா என்ன?

நான் தொலைந்துவிட்டேன்!
அவளும் தொலைந்திருப்பாளா எனக்குள்?

தூதனுப்பி மனசறிய ஆசைதான்
மறுதலித்து விட்டா ளென்றால்
ஓடிவிடுமே என் உயிர்க்குருவி.

அவளது
மின்னல் பார்வையும்
கன்னல் சிரிப்பும்
எனக்கு ஜென்ம சாபல்யம்.

விடை தேட முற்படுகையில்
எனது ஜீவன்
வினாக்குறியாகி விடக் கூடாது.

நான் தொலைந்து விட்டேன்.
அவளும் தொலைந்திருப்பாளா எனக்குள்?

அண்ணாதாசன்

தெய்வ அனுக்கிரகத்துடன் ஆகஸ்ட் இதழ் விற்பனையில்!

# தெய்வம்

பேசுகிறது

பரவசமூட்டும் தெய்விக மாத இதழ்




இந்த இதழில்

ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

துங்கை நதிக்கரையில் துயிலும் மகான்



- பிரணவ வடிவே விநாயகர்
- அருள் மணக்கும் அன்ன லக்ஷ்மி!
- பாலகுமாரனின் கர்ணனின் கதை
- புனித நதிக்கரை ஆலயங்கள் காசி விசுவநாதர் – 6
- மீனைத் தொட்டுச் சேவிப்பாய்
- தேவை பூரண நம்பிக்கை ...
- புற்றும் மண்ணே மருந்தாகும் புனிதத்தலம்!

இந்த இதழுடன்



பத்மவாசன் வரைந்த அஷ்ட ஐஸ்வர்யங்களைத் தரும் வரலக்ஷ்மி தேவியின் வண்ணப் படம் அன்பளிப்பு!

விலை ரூ.10/-

மதி நிலையம் பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ், 4 (39), தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை- 600 017 ✆ 4311 838 e-mail: mathinilayam@eth.net



எங்கு பார்த்தாலும் **தள்ளுபடி விற்பனை** என்ற விளம்பரம். **தள்ளுபடி எப்படி?** **சேலைகளின் தரம் எப்படி?** என்பதை **தெரிந்து** கொள்ளவும், காஞ்சிபுரம் பட்டு சேலைகள் சென்னையில் தறிவிலைக்கே வாங்கவும் மைலாப்பூரில் உள்ள

# B.M SILK SAREES


ஷோரூமுக்கு வாருங்கள்.

தரமான சேலைகளை வாங்கி செல்லுங்கள். எங்களின் தாரக மந்திரம் நயம், நாணயம், நம்பிக்கை. ஏன் என்றால் வியாபாரம் என்பது ஒரு நாள் செயல் அல்ல!

BMSS

# B.M SILK SAREES

Government Approved Shop No. 3148/95-3
Mfrs. of: KANCHEEPURAM SILK SAREES
5, North Mada Street, Mylapore,
Chennai - 600 004. ✆: 4940291







2001 ஆகஸ்ட் 12
விஷு ஆடி 27
மலர் : 60
இதழ் : 2


# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## ராஜினாமா நாடகம்

பி.ஜே.பி நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் நடந்த நாடகம், அக்கட்சிக்கும் இந்திய அரசுக்கும் இந்திய தேசத்துக்கும் ஒருங்கே தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது.


குற்றச்சாட்டுக் கணைகளைத் தாள முடியாமல் ஒரு நாட்டுப் பிரதமர் ராஜினாமா செய்ய முன் வருவதும், அவரது சகாக்கள் காலில் விழாத குறையாகக் கெஞ்ச, அவர் ஒரு சில நிமிடங்களிலேயே மனத்தை மாற்றிக் கொள்வதும்... அப் பதவியையும் அதன் பொறுப்புகளையும் ஒட்டுமொத்தமாகக் கேலிக்குள்ளாக்கும் செயல்கள்.

அமர்நாத் யாத்ரிகர்கள் கொலை, கூட்டணி கசமுசா, யூ.டி.ஐ ஊழல், ஆக்ரா பேச்சு வார்த்தை தோல்வி, மணிப்பூர் விவகாரம், ஒரிஸ்ஸா வெள்ளம், தமிழகம் தரும் தலைவலி என வாஜ்பாய் அரசு சோதனைக்கு மேல் சோதனைகளைச் சந்தித்து வருவது வாஸ்தவம்தான். ஆனால், அவற்றுக்குப் புறமுதுகு காட்டி ஓடுவது எவ்வாறு பிரச்னைகளுக்குத் தீர்வாகும்?

தமக்கு வயதாகிவிட்டதாகவும் உடல்நலம் குன்றி விட்டதாகவும் தம்மால் இனி தேசிய ஜனநாயகக் கூட்டணியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்றும் பிரதமர் கூறியதைக் கேட்க அனுதாபம் மேலிடவே செய்கிறது.

எனினும் பாரத தேசத்தில் அனைவருமே அனுதாபப்பட்டாலும்கூட நிலைமை சீரடையப் போவதில்லை.

நிகழ்ந்துவிட்ட தவறுகள், முளைத்துள்ள பிரச்னைகள், ஏற்படக்கூடிய விளைவுகள் என்று




படிப்படியாக அணுகி ஆராய்ந்து தீர்வு காண்பதுதான் பிரதமரின் செயல்திட்டமாக இருத்தல் வேண்டும்.

பா.ம.க போன்ற தலைவலிகளையும் திரிணமுல் காங்கிரஸ் போன்ற திருகுவலிகளையும் உள்ளடக்கிய ஒரு கூட்டணியைக் கட்டி மேய்ப்பது என்பது சாமானியமான காரியம் அல்ல. அதைச் செயல்படுத்த முதலில் சொந்தக் கட்சி உறுப்பினர்களின் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் வேண்டும்.

ஆக்ரா உச்சி மாநாட்டின்போது பி.ஜே.பி அமைச்சர்கள் நடந்துகொண்டதைப் பார்க்க, அந்த ஒத்துழைப்பைப் பிரதமரால் பெற இயலவில்லை என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது.

கூட்டணி கட்சிகளின் இழுபறி, அமைச்சர்களின் ஒத்துழையாமை போதாதென்று பி.ஜே.பி கட்சியின் குத்தலான விமர்சனங்களையும் அக்கட்சியை இயக்கும் அடிப்படைவாத அமைப்புகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் வேறு பிரதமர் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளைக் காட்டிலும் கடுமையாக அரசை விமர்சித்து வரலாறு படைத்து வருகின்றன ஆர்.எஸ்.எஸ்ஸும், பி.ஜே.பி கட்சித் தலைமையும்!


'அமர்நாத் கொலைகளைத் தடுக்க முடியாத கையாலாகத்தனம்' என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

கூட்டணியை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்று வகுப்பு நடத்துகிறார் ஜனா கிருஷ்ணமூர்த்தி!

கட்சி வேறு ஆட்சி வேறுதான் என்றாலும் ஆட்சியைக் கட்சி விமர்சிப்பதில் சில குறைந்தபட்ச நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஹிந்து அடிப்படைவாத அமைப்புகளின் பிடியிலிருந்து பி.ஜே.பி தன்னை விடுவித்துக் கொள்ளத் தயாராயில்லாதவரை அவ்வமைப்புகளின் இஷ்டப்படி ஆட வேண்டியிருக்கும்; அல்லது அவற்றின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிவரும்.

இத்தனையையும் சமாளித்தபடி இத்தனை நாட்கள் செயலாற்றிய பிரதமர், நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத் தொடரில் எழுந்த ஒரு சிறிய புகாரைச் சகியாமல் தமது ராஜினாமாவை




அறிவித்ததுதான் பரிதாபம்.

ஹிமாசல பிரதேச பி.ஜே.பி எம்.பி ஒருவர், கூட்டணி கட்சி அமைச்சரான ராம்விலாஸ் பாஸ்வானின் அலட்சியப் போக்கு குறித்துப் புகார் செய்ய, பிரதமர் ராஜினாமா செய்ய முன்வந்துவிட்டார்! தம்மால் தேசிய ஜனநாயகக் கூட்டணியை ஒருங்கிணைத்து நடத்த முடியவில்லை என்று ஒப்புதல் வாக்குமூலமும் கொடுத்துவிட்டார்!

யூ.டி.ஐ ஊழலுக்கும் பிரதமர் அலுவலக அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ள வேளையில், பிரதமர் இவ்வாறு உப்புப் பெறாத ஒரு காரணத்தைச் சொல்லி ராஜினாமா பேச்சை எடுத்தது ரசாபாசமாகி விட்டிருக்கிறது. பிரதமர் அலுவலகம் பேரில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லையெனில், அது உடனடியாகத் தெளிவாக்கப்பட வேண்டும். அதை விட்டுவிட்டு, வேறு காரணம் சொல்லி இத் தருணத்தில் ராஜினாமா பேச்சை எடுத்தது, மேலும் சந்தேகங்களுக்கே இடமளிக்கும்.

கூட்டணி, கட்சிக்காரர்களையும் சகாக்களையும் தமது சொந்தச் செல்வாக்கால் கட்டுக்குள் வைக்க, பிரதமர் முதலில் தமது செல்வாக்கை வளர்த்துக் கொண்டாக வேண்டும்.

இந்தியப் பிரதமரின் செல்வாக்கு அவரது கட்சிப் பின்னணியினாலோ தொண்டர் படையினாலோ ஓரளவுதான் உருவாகும். மக்கள் ஆதரவு என்னும் மகத்தான உந்து சக்தியே அந்தச் செல்வாக்கை உச்சத்துக்குக் கொண்டுபோய் நிறுத்தும்.

இந்தியாவில் இதுவரை ஏதேனும் சாதித்த பிரதமர்கள், மக்களின் கண்மணிகளாய்த் திகழ்ந்தவர்கள்தான்!

அடல் பிஹாரி வாஜ்பாயும் நேரடியாக மக்களிடம் பேச வேண்டும். தமது செயல் திட்டங்களை அவர்கள் முன் கடைவிரித்து அவர்களுடைய வாழ்த்துகளையும் நன்மதிப்பையும் பெற வேண்டும். அவர்களுடைய மனத்தைத் தொட்டசைத்து உணர்வு ரீதியான ஆதரவைப் பெற வேண்டும்.

அதைப் பெற்றுவிட்டால் அப்புறம் அரசியல் சூழ்ச்சிகள் என்ன செய்ய முடியும்? ஆர்.எஸ்.எஸ்தான் என்ன செய்ய முடியும்? ○

## காதில் விழுந்தவை:

● ஓர் அரசியல்வாதி சம்பாதிப்பதற்காக இறங்கும் தொழில்கள் மூன்று. மதுக்கடைகள் நடத்துவது, ரியல் எஸ்டேட், அடுத்து ஆற்று மணல் பிசினஸ். இதில் மணல் பிஸினஸ் கோடிகளை அள்ளிக் கொட்டும். முறைப்படி உரிமம் எடுத்த பின்தான் அதிகாரிகள் மற்றும் ஆளும்கட்சி அரசியல் வாதிகள் துணையுடன் இந்தக் கொள்ளை நடக்கும். உரிமப்படி மணல் பிஸினஸில் இறங்கினால் தலையில் துண்டு போட்டுக் கொள்ள வேண்டியதுதானாம். எனவே முறைகேடுகளே மணல் பிஸினஸிற்கு முதலீடு. எதற்கு இவ்வளவு பீடிகை என்றால் கடந்த தி.மு.க. ஆட்சியில் செல்வாக்கோடு இருந்த சென்னை மாவட்டச் செயலாளர் ஒருவர் இந்த மூன்று தொழில்களிலும் இறங்கி 'ஓஹோ வென்று இருந்தார். பலருக்கு உரிமம் கிட்டாத நிலையில் அவருக்கு மட்டும் தொடர்ந்து செங்கல்பட்டு பாலாறு படுகையில் மணல் எடுக்க உரிமம் கிடைத்தது. தேர்தலில் காற்று மாற்றியடிக்கப் போவதை முன் கூட்டியே ஊகித்து விட்டதாலோ என்னவோ கொஞ்சம் அரசியலிலிருந்து விடுவித்துக் கொண்டார். உடல் நிலை வேறு தகராறு செய்தது. இப்போது மீண்டு வந்திருக்கும் அவர் போயஸ் தோட்டத்துடன் நெருங்கிச் செல்ல முயல்கிறாராம். இதற்கு அவருக்கு 'இனப்பற்று' கைகொடுக்கிறதாம். ஆனால் போயஸ் தோட்டம் அவரை முழுமையாக நம்பவில்லை. சேர்த்துக் குவித்திருக்கும் தன் சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் மணல் கொள்ளையில் தொடர்ந்து ஈடுபடவும் அவர் நெருங்கி வருகிறார் என்பது தெரிந்த ரகசியம்தானே! ரமேஷிடம் ஸ்டாலின் பற்றியத் தகவல்களைப் பெற முயன்ற காவல் துறை இப்போது, நெருங்கி வரும் நபரை அந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமா? என்று யோசித்து வருகிறது. ''கட்சியையும் ஆட்சியையும் பயன்படுத்தி சொத்து சேர்த்த இவரைப் போன்றவர்கள் கட்சிக்கு உயிர் கொடுக்க வேண்டும். ஆனால் முதுகில்



• ஜெகத்ரட்சகன்



• மாறன்



• ஜெயலலிதா

# தி.மு.க.-பா.ஜ.க. உறவில் விரிசல்!



• ஃபாத்திமா பீவி

அல்லவா குத்தப் பார்க்கிறார்கள்" என்று வருத்தப்பட்டார் ஒரு சீனியர் தி.மு.க. பிரமுகர்.

● தி.மு.க. பொதுக்குழுவில் வழக்கம் போல மாறன் பட்டாசுகளைக் கொளுத்திப் போட்டிருக்கிறார். "அவர் பேசிய பல விஷயங்களில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது, மத்திய அரசை எதற்கும் நம்பாமல், தி.மு.க. தன் சொந்தக் கால்களில் நின்று ஜெயலலிதா அரசை எதிர்த்துப் போராட வேண்டுமென்பதுதான்" என்று சொல்கிறார்கள் கழகப் பிரமுகர்கள்.

ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக, அராஜக முறையில் செயல்படும் ஜெயலலிதா அரசைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் மத்திய அரசின், முழு உதவியும் கிடைக்குமா? என்பதில் தி.மு.க.வுக்குச் சந்தேகம் இருக்கிறது. அப்படியே சில விஷயங்களில் நடவடிக்கை எடுத்தாலும் அவை முழுமை பெறாமல் அல்லது முழுமை பெற வைக்கும் அரசியல் உறுதி மத்திய அரசுக்கு எதுவும் இல்லாத நிலையில், அரைகுறையாக நிற்கும் என்பது சிலரின் கணிப்பு. "இந்த நிலை காலப் போக்கில் கழகத்திற்கும் பா.ஜ.க.வுக்கும் உரசலில் வந்து நிற்கும் என்று சொல்கிறார்கள்" சில கழகப் பிரமுகர்கள். இதைத் தவிர்க்க என்னதான் வழி? பா.ஜ.க.வின் மேலிடத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும், முழு மூச்சாக தி.மு.கவுக்கு உதவ வேண்டும் என்பதைச் சொல்லில் மட்டும் காட்டாமல், செயலிலும் காட்ட வேண்டுமாம். பா.ஜ.க. அரசியல்வாதிகள் செயல்பாடு இப்படி இருக்க, மத்திய அரசின் உயர்நிலை அதிகாரிகள் சிலரும் உறுதியான நடவடிக்கை எடுக்காத வகையில் பல விவகாரங்களில் ஜெ.வுக்குச் சாதகமாக நீர்க்க விடுகின்றார்களாம்.

● பாத்திமா பீவி கவர்னர் பொறுப்பைவிட்டு போனதில் ஜெ.வுக்கு அளவு கடந்த வருத்தம் என்பது ஒரு பக்கம் இருக்க, அமைச்சர்கள் சந்தோஷத்தில் இருக்கிறார்கள். 1995-96ல் ஏற்பட்டதைப் போன்ற ஒரு நிலை இப்போதும் ஏற்பட்டிருக்கிறது. தற்காலிக கவர்னர் பெரும்பாலும் ஹைதராபாத்திலேயே இருப்பதால், முதல்வரால் நினைத்தபடி இலாகா மாற்றம், அமைச்சர்கள் மாற்றம் செய்ய முடியவில்லை என்கிறார்கள். இதற்கிடையில் கேரளாவுக்குச் சென்ற பீ.வி. தம் பங்குக்கு ஜெ.வுக்கு உதவியாக தில்லியில் பல வேலைகளைச் செய்து கொடுத்து வருகிறாராம்.

● வீர வன்னியப் பேரவை என்ற அமைப்பை நிறுவி மாவட்டம்தோறும் கூட்டம் நடத்தும் எம்.ஜி.ஆர். கழகப் பிரமுகர் ஜெகத்ரட்சகன் ஒரு தினசரி பத்திரிகை துவங்க இருக்கிறார்.

— ப்ரியன்

## திடீர்ப் பரிசுப் போட்டி முடிவு – 16



'அன்பெனும் கூட்டினிலே' என்று முடியுமாறு கவிதை கேட்டிருந்தோம். ஏராளமான கவிதைகளைக் குவித்து பெண்டு நிமிர்த்தி விட்டார்கள் ஆசிரியர் குழுவை. ரூ. 100 பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை, ஆத்தூர் வாசகர் டி.எஸ். ஹரிஹரனுடையது:

**இனிமை மழலைக்கு; வளமை இளமைக்கு,**
**ஒருமை முதுமைக்கு; செம்மை மேன்மைக்கு;**
**பார்த்துப்பசியாற்றி மகிழ்வித்து மகிழ்வதில்**
**சுவர்களும் பங்குபெறும் அன்பெனும் கூட்டினிலே!**

266, காந்திபுரம்,
ஆத்தூர் (அஞ்சல்) – 636102

# வட்ட மேஜை

## பாவம் சார்!

✉ வாராவாரம் பெண்கள் பயன்படுத்தும் பட்டுப் புடைவை பரிசு. ஓ... பாவம் சார் ஆண் வாசகர்கள்!

**சென்னை, அய்யாறு வாசுதேவன்**

✉ 'தேன்கூடு' பகுதியில் வாசகர் அனந்த குமார் 'குமிஸ்' என்பது ஒட்டகப் பாலில் எடுக்கப்பட்ட மோர் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குமிஸ் என்பது குதிரைப் (கழுதைப்) பாலில் இருந்து தயாரிக்கப்படும் பானம் என்று ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சென்னை, கே.எஸ்.நாராயணன்**

✉ அமிதாப்பச்சனின் லேட்டஸ்ட் படமான 'அக்ஸ்'க்கு அட்டகாசமான விமர்சனம் எழுதி 'அபவ் ஆவெரெஜ்' கிரேடு தந்து என்ன பிரயோஜனம்? கல்கி மட்டுமல்ல, ஏறக்குறைய எல்லா பத்திரிகைகளுமே அக்ஸ்-ஐ 'ஆஹா' என்ற பாராட்டியுள்ளன. ஆனால் - 'ஆபரேஷன் சக்ஸஸ், பேஷண்ட் அவுட்' என்ற கதையாக, பாக்ஸ் ஆபீஸில், அக்ஸ் ஃப்ளாப் ஆகி விட்டதாமே.

**சென்னை, தெய்வசிகாமணி**

✉ "இதுக்கு ஒத்துக்கலைனா தூக்கிட்டுப் போற மாதிரி ஆயிடும்" என்று கத்திய கிறிஸ்டோபரிடம் "சும்மா தூக்கிட்டுப் போகாதப்பா. பாடையிலே வச்சி தூக்கிட்டுப் போ" என்று கலைஞர் சொன்னதைக் கேட்டவுடன் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் உசேன் மட்டுமல்ல, மனித நேயம் கொண்ட மனிதர்கள் எல்லாருமே கலங்கி கண்ணீர் வடிப்பர்.

**சேலம், பாவலர் எழுஞாயிறு**

✉ ஆக்ரா உச்சி மாநாடு, மணமகள் இல்லாத திருமணம் போல் அபத்தமாக நடந்து முடிந்த அவலத்தை உணர்த்திய தலையங்கம் ஆக்ரோஷமானது.

**அயன்புரம், த. சத்தியநாராயணன்**

✉ சபதம் சிறுகதையினைப் படித்து முடித்தபோது எங்க வீட்டிலேயும் இது தானோ என நினைக்கும்படி செய்தது.

**இராயபுரம், ரேவதி சங்கர்**

✉ சுமி சூப்பர் மார்க்கெட் என்ற கடலில் மூழ்கினேன். நல்ல செய்தி என்ற முத்தினைப் பொறுக்கி எடுத்தேன். 'காசு'க்காக ஆசிரியர் தொழில் பார்க்கும் ஒவ்வொருவரும் ரமணர் சொன்ன 'குரு' என்ற வார்த்தைக்கான பொருளை உணரும்படி சொன்னது மிகவும் அருமை.

**திருச்சி, உஷா முத்துராமன்**

✉ "படம் எடுக்கிறவர்களும் சரி, பார்க்கிறவர்களும் சரி என்னை ஆக்ஷன் ஹீரோவாகத்தான் பார்க்க விரும்புகிறார்கள் என்கிறபோது நான் என்ன செய்துவிட முடியும்?" என்று விஜயகாந்த் கேட்டிருக்கிறாரே. படம் எடுக்கிறவராக இவரே இருக்கும் போது முற்றிலும் வித்யாசமான படத்தைத் தயாரிக்க இவரே முன் வந்திருக்கலாமே?

**சென்னை, எஸ்.சையது முகமது**




✉ 'சாதனைச் சுரங்கம்' நெய்வேலி பற்றிய கட்டுரை படித்தேன். ஏ.கே. சகாய் போல திறமையான நிர்வாகி கிடைத்தால் சேலம் உருக்காலை, கோலார் தங்க வயல் போன்றவை கடலில் கரைத்த பெருங்காயமாய் மாறியிருக்காது.

**குட்டலாடம்பட்டி, கே. மூர்த்தி**

✉ தற்கொலைகள் பலவித சூழ்நிலைகளுக்காகக் கோழைகளால் பயன்படுத்தப்படும் ஆயுதம். இதனை அரசியலுக்குச் சாதகமாக மாற்ற நினைப்பது கோழைகளின் வேலையற்ற வேலை.

**நாகூர், அப்துல்லா அஹ்மது**

# அந்த பொ.செவும் இந்த பொ.செவும்!

சிற்றுந்திலிருந்து (மினி பஸ்!) இறங்கி எவரிடம் கேட்டாலும் அடையாளம் சொல்கிறார்கள் இந்தப் பொன்னியின் செல்வனை. திருவெறும்பூர், கீழ்க்குமரேசபுரம் பகுதியில் அத்தனைப் பிரபலம்!

செங்கிப்பட்டியில் இருக்கும் ஒரு மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்து வரும் இவர் ஒரு தனித் தமிழ் ஆர்வலர். நல்லாசிரியர் விருது முதல் இலக்கியப் பணிகளுக்காக பல்வேறு விருதுகள் பெற்றிருக்கிறார்.



திராவிட இயக்கத் தாக்கம் கொண்டிருந்த பெற்றோர்கள், இவர் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது பெரியாரிடம் பெயர் வைக்கச் சொன்னார்கள். அவர் வைத்த பெயர் பாரதிதாசன். பள்ளியில் சேர்த்த போது அவரது மாமா இவருக்கு வைத்த பெயர் சு. இராமதாஸ்! 1947ல் பிறந்தவர் எட்டாம் வகுப்பு படித்தபோதே தன் பதின்மூன்று வயதில் தனக்குத் தானே சூட்டிக்கொண்ட பெயர் சு. பொன்னியின் செல்வன்!

"எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது திருவையாறு நூலகங்கள் உதவியால் கல்கியின் படைப்புகள், பாத்திரங்கள் மனசுக்குள் ஏறி அமர்ந்து கொண்டன. அந்த மாணவப் பருவத்திலேயே இப்படியும் கதா பாத்திரங்களின் வார்ப்புகளா? என எண்ணி எண்ணி மாய்ந்து போனேன். பொன்னியின் செல்வன் படித்த போது என்னையறியாமலேயே எனக்குள் ஓர் ஈர்ப்பு இருந்தது. அதனால் அந்த நாவலின் பெயரையே எனக்குச் சூட்டிக் கொண்டேன்'' என்கிறார் இந்த பொ.செ!

பொன்னியின் செல்வன் எனும் பெயரை 'கெஜட்'டிலும் கொண்டு வந்துள்ளார் இவர். அந்தப் பொன்னியின் செல்வனின் சிறு பருவத்தில் நடந்த ஒரு சம்பவம் போலவே தம் மாணவப் பருவத்திலும் நிகழ்ந்து போனதுதான் தன்னால் மறக்க இயலாதது என்கிறார் இவர்.

"1961 என நினைக்கிறேன். காவிரியில் பெரு வெள்ளம். கல்லணைக்கு அடுத்துள்ள சுக்காம்பாள் உடைப்பு எடுத்துக்கொண்டுத் திருக்காட்டுப்பள்ளியிலிருந்து பாபநாசம் வரைக்கும் எல்லா கிராமங்களும் தண்ணீர் வெள்ளத்தில் தத்தளித்தன. எங்கள் கிராமமான திருவேதிகுடி முற்றிலும் மூழ்கிவிட்டது. உயிர் பிழைத்தால் போதுமென வேதபுரீஸ்வரர் கோயிலுக்குள் ஒண்டிக் கொண்டோம். அதனுள்ளும் நுழைந்து வெள்ளம் மிரட்டிப் பார்த்தது. கால்நடைகளும், குடிசைகளும் எங்கள் கண்ணெதிரே வெள்ளத்தில் மிதந்து சென்றன. எங்காவது மேட்டுப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தால் போதும் என்றாகி விட்டது. நெல் வேக வைக்கும் தகரக் கொப்பரைக்குள் என்னையும் இரண்டு தம்பிகளையும் உட்கார வைத்து, இரண்டு பேர் நீந்தியும் நடந்தும் வெள்ளத்துடன் போராடி அந்தத் தற்காலிகப் படகை ஒரு வழியாக கரை சேர்த்தனர். வெட்டாத்தங்கரை மேட்டில் நின்றுகொண்டு அப்பொழுதே ஒருகணம் யோசித்துப் பார்த்தேன். அந்தப் பொன்னியின் செல்வனும் இன்று இந்தப் பொன்னியின் செல்வனும் ஒன்றுதானே என்று!'' என்கிறார் இந்தக் கவிஞர்!

— திருநாவு

# மாபெரும் விலை குறைப்பு
# ஆடி சிறப்பு தள்ளுபடி விற்பனை

காஞ்சிபுரம், ஆரணி, பெங்களூர்,
தர்மாவரம் பட்டு சேலைகள் மற்றும் நூல் சேலைகள்
மிகவும் குறைவான விலையில் விற்பனை

## “நியூ மகாலட்சுமி ஸ்டோர்ஸ்”

இடம்: **முருகன் கல்யாண மண்டபம்,**
**13. தெற்கு போக் ரோட்,**
**தி. நகர், சென்னை – 17**

காலம்: **1.8.2001 முதல் 20.8.2001 வரை**
**காலை 10.00 மணி முதல் 1 மணி வரை**
**மாலை 3.30 மணி முதல் 8 மணி வரை**

போன்: **4341041, 4344664**


# உயிர் காக்க உதவுங்கள்

எனது மகன் K. பிரதாப் (3மாத குழந்தை) பிறப்பு குறைபாடுகளின் காரணமாக **(Multiple Birth Defects)** ஸ்ரீ ராமசந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். அவனுக்கு அவசர அறுவை சிகிச்சை நடைபெற உள்ளது. அதற்கு ரூ. 50,000/- தேவைப்படுகிறது. நான் சிறிய வேலையில் உள்ளதால் என்னால் மேற்கண்ட தொகையை ஏற்பாடு செய்ய முடியவில்லை. தாங்கள் அருள்கூர்ந்து தங்களால் இயன்ற உதவியை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி என்னுடைய மகன் உயிர் பிழைக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**J. KESAVAN**
**2/33, New Street,**
**JAINAGAR II Main Road,**
**Arumbakkam, Chennai - 600 106**

# போர்க்களத்தில் காதல்

அமெரிக்காவின் ஹவாய் பகுதித் துறைமுகமான 'பெர்ல் ஹார்பாரில்' வந்து இறங்குகிறார் ஹாலிவுட் இயக்குனர் மைக்கேல் பே. அமெரிக்க கடற்படையின் அனுமதியோடு சக நண்பர்கள் சிலருடன், ஒரு குட்டி நீர்மூழ்கிப் படகில் கடலின் அடியாழம் நோக்கிப் பயணப்படுகிறார். எல்லோருக்கும் இதயம் படபடக்கிறது. நாற்பதடி ஆழத்திற்குக் கீழே வந்ததும் மூழ்கிக் கிடக்கும் அந்தப் பிரமாண்டம் கண்ணுக்குத் தெரிகிறது. அது அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான 'சன்கென் அரிசோனா' என்ற, ஆயிரத்து நூறு கடற்படை வீரர்களோடு, ஜலசமாதியானப் போர்க்கப்பல். துருப்பிடித்து, பாசிபடிந்து கிடக்கும் அந்த பிரும்மாண்டக் கப்பலிலிருந்து, இன்னும் எண்ணெய் கசிந்து கொண்டிருப்பதைக் கண்டு, இயக்குனர் மைக்கேலுக்கு இதயம் கசிகிறது. இவருக்குமட்டுமல்ல, அத்தனை அமெரிக்கர்களுக்கும் பெர்ல் ஹார்பர் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில் இதயம் வலிக்கும்.


வல்லரசாய் விஸ்வரூபம் எடுப்பதற்கு முன், வேகவேகமாய் வளர்ந்து கொண்டிருந்த அமெரிக்கா, தனக்கும் இரண்டாம் உலகப்போருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இறுமாந்து இருந்தபோதுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது. 1941 டிசம்பர் ஏழாம்தேதி, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை. 'பெர்ல்-ஹார்பரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க போர்க்கப்பல்கள் மீது, ஜப்பானிய போர் விமானங்கள் திடீர்க் குண்டு மழை பொழிந்தன. இநதத் திடீர்த் தாக்குதலில் ஒரு கணம் தடுமாறி, சுதாரித்துக் கொள்வதற்கு முன் 'சன்கென் அரிசோனா' கப்பல் உயிர்களின் கதறலோடு மூழ்கிப் போனது. இன்று அக் கப்பல் நினைவுச் சின்னமாகி விட்டாலும், பெர்ல் ஹார்பாரை ஒரு பரபரப்பான சுற்றுலாத் தலமாக மாற்றிக்காட்டி, அமெரிக்கர்களின் தேசப்பற்றை



• குண்டு மழையில் பியர்ல் ஹார்பர்



• கவிதை எழுதும் கவிதை கேத்



உசுப்பிவிட்டிருக்கிறது ஹாலிவுட் திரைப்படமான பெர்ல் ஹார்பர்.
-இயக்குனர் மைக்கேல் பே.

கந்தக நெடியடிக்கும்-இந்த வரலாற்றுச் சம்பவத்தின் பின்னணியில் இரத்தமும்



• போர்க்களத்தில் காதல்

சதையுமான ஒரு காதலைக் காட்டி, ரசிகர்களை உயிர்வதைச் செய்யும் இந்தப் படத்தை, இரண்டாம் உலகப் போரை நேரில் அனுபவிப்பது போல படமாக்கி, டைட்டானிக் ஜேம்ஸ் கேமரூனுக்குச் சவால் விட்டிருக்கிறார் இதன் டைரக்டர். அமெரிக்கர்களின் தேசப்பற்றையும், அர்ப்பணிப்பையும் ஒவ்வொரு பிரேமிலும் தூக்கி நிறுத்தியிருக்கும் இயக்குனர், ஜப்பானியர்களின் உணர்வுகளைப் பாதிக்காத வண்ணம், அவர்களின் தேசிய உணர்ச்சியையும் மாற்றுக் குறையாமல் காட்டி நடுநிலையை வகித்திருப்பதைக் கண்ணை மூடிக் கொண்டு பாராட்டலாம்.

டாலரை டாலர் என்று பார்க்காமல், அமெரிக்கக் கடற்படை, தரைப்படை, விமானப்படை உதவியுடன், தாக்குதல் நடந்த அதே பெர்ல் ஹார்பரில் படத்தை எடுத்திருக்கிறார்கள். 'சன்கென் அரிசோனா' கப்பல், குண்டுக்கு இரையாகி மூழ்கும் அந்த ஒரு காட்சியில் மட்டும், பன்னிரண்டு பானா விஷன் கேமராக்கள் பார்த்துக் கொண்டிருக்க, வானில் போர் விமானங்கள் காதைக் குடைந்தபடி பறந்து கொண்டிருக்க, ஹாலிவுட் சினிமா வரலாற்றிலேயே மிகப் பெரிய குண்டுவெடிப்பை ஏழு வினாடிகள் நிகழ்த்தி, கின்னஸில் இடம் பிடித்திருக்கிறார்கள்.

பெர்ல் ஹார்பர் தாக்குதலில் பிழைத்து உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் அத்தனை பேரும், பிள்ளைகள், பேரப் பிள்ளைகளோடு, துறைமுகத்தில் இந்தக் காட்சியை மீண்டும் பார்த்து, கதறி அழுததை எழுதாத பத்திரிகைகளே இல்லையாம். படத்தின் நாயகி கேட் பெக்கின்ஸேல் பற்றித்தான் தினமொரு பரபரப்பான செய்தி. படத்தில் மிலிட்டரி நர்ஸாக வாழ்ந்து, இரண்டு இளம் பைலட்டுகளின் காதலை ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் அல்லாடியிருக்கும் இவர், தோற்றத்தில் மட்டும் கவிதையல்ல.

நிஜமாகவே இங்கிலாந்து இலக்கிய உலகம் போற்றும் கான்டெம்ப்ரரி கவிதாயினியாம்! கவிதைக்கான டபிள்யூ.ஹெச்.ஸ்மித் விருதை இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து வாங்கி வருகிறார். ஆங்கில இலக்கியம் தேறிய கையோடு பிரெஞ்சு மற்றும் ரஷ்ய இலக்கியம் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த இவரை, இயக்குனர் மைக்கேல் பே கையைப் பிடித்து பெர்ல் ஹார்பருக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டாராம்.

அம்மணி நர்ஸாக நடிப்பதற்கு முன் என்ன செய்தார் தெரியுமா? லண்டன் மிலிட்டரி ஹாஸ்பிடலில் அங்கிருந்த நர்ஸ்களோடு ஆறுமாதம் பழகி, ஊசி போடுவதிலிருந்து, அத்தனைச் செவிலிப் பணிகளையும் கற்றுக் கொண்டிருக்கிறார். "இரவோடிரவாக உலகம் முழுக்க என்னை பாப்புலராக்கியிருக்கும் சினிமாவுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லும் கேட், "என் லட்சியம் முழுநேர இலக்கியவாதியாக இருப்பதே" என்று பேட்டி கொடுத்திருக்கிறார்.

ரொம்ப தில்லுதான் அம்மணி!

— ஜெயந்தன்

Let us endeavour so to live that when we come to die even the undertaker will be sorry என்றார் ஒரு மகான். பூலான்தேவி அந்த அளவுக்கு உன்னத வாழ்க்கை வாழவில்லை என்றாலும், தோட்டாக்களால் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டு அவரது உடல் கிடந்த பரிதாபத்தைப் பார்த்தபோது யாருக்குமே கண்ணில் நீர் வரத்தான் செய்தது.

ஆனால் தொடர்ந்து வந்த செய்திகளும் நிகழ்ச்சிகளும், படங்களும் அவருடைய மரணத்தை ஒரு திகில் சீரியலாகச் செய்து கொண்டிருக்கின்றன. தலை மொத்தமும் துணி போட்டுச் சுற்றி மறைத்துக்கொண்டு செல்லும் இரண்டு உருவங்கள்; கொலைகாரன் என்று சொல்லப்பட்ட பங்கஜ் அதே தேதியில் வேறு ஊர் சிறையில் இருந்தான் என்ற செய்தி; பூலான்தேவியின் சொத்தை அறக்கட்டளைக்குத் தரப்போவதாகக் கணவன் உமத்சிங் அறிவிப்பு; சொத்துக்காகத்தான் பூலான் தேவியை அவர் மணந்தார் என்று முன்னிதேவி, ருக்மணி குற்றச்சாட்டு; பூலான் தேவியின் வழக்கறிஞர் காமினி ஜெய்ஸ்வாலா, பி.கே. மகேஸ்வரியா –


ஆளை விடப்பா. தலை சுற்றுகிறது.

ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் – இந்தியத் தொலைக்காட்சிகளின் தரத்தை ஸ்டார் நியூஸ் உயர்த்துகிறது என்பதை. இரவு பத்து மணிக்கு அவர்கள் ஆரம்பிக்கும் 'நியூஸ் அவர்' குடைச்சல் கச்சேரிக்கு ஈடு இணை இல்லை. Knowledgeable people நடத்தும் In-depth interviews.

பிரதமர் வாஜ்பாயியின் ராஜினாமா அறிக்கையை வைத்து, சிவசேனை, ஆர்.எஸ்.எஸ், பிஜேபி புள்ளிகளை அவர்கள் துளைத்தெடுத்த விதம் கேட்கக் கோடி காது வேண்டும். Success comes when preparation meets opportunity என்பதை ஸ்டார் நியூஸ் நிரூபிக்கிறது.

'ரிதம்' படத்தின் தீம் தீம் தினா பாட்டைப் பார்த்தபோது (விஜய்) ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. Most ill-timed and very provoking. பின்னே என்ன? மனுஷனும் மனுஷியும் இங்கே குடத்தைத் தூக்கிக்கொண்டு நாயாய்ப் பேயாய்த் தண்ணீருக்காக அலையும்போது, அங்கே அர்ஜுனின் பின்னால் வெள்ளமோ வெள்ளம்! அருவியோ அருவி! நடு நடுவே அல்ல. பாட்டு ஆரம்பித்தது முதல் முடியும்வரை தண்ணீர் தண்ணீர் தண்ணீர் தான்; தண்ணீரைத் தவிர வேறில்லை!

சென்னைவாசிகளின் வயிற்றெரிச்சலை இப்படிக் கொட்டிக் கொண்ட தயாரிப்பாளர், ஒரு டஜன் (தண்ணீர் வருகிற) 'போர்' குழாய்கள் இலவசமாகப் போட்டுக் கொடுத்துப் பிராயச்சித்தம் செய்யட்டும்.




• கங்குலி

Be careful of the words you say
Keep them soft and sweet
You never know from day to day
Which ones you will have to eat

– என்ற இங்கிலாந்து நாட்டுப் பாட்டு நம்ம கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த்துக்காகவே ஏற்பட்டதோ – என்று தோன்றுகிறது ஜெயா டீவியில் அவருடைய 'கிரிக்கெட் டாக்'கைப் பார்த்தபோது. கொழும்புவில் சேர்ந்தாற்போல் மூன்று முறை இந்தியா தோற்றதும் அதை ஏறி மிதித்தார். ('ஏறி மிதித்தார்' என்பது அவருடைய favourite வார்த்தைப் பிரயோகம்) 'டெலிபோனில் ஒரு நேயர் 'இவங்கள்ளாம் பேசாமல் மாடு மேய்க்கப் போகலாம்' என்று சொன்னதை மனமார ஆமோதித்தார். இன்னொரு அன்பர், 'கேப்டனா இந்தக் கங்கூலி? நம்மா பின்னாடி சுத்தத்தான் லாயக்கு' என்ற போது, 'அப்படியெல்லாம் அநாகரிகமாய்ப் பேசாதீங்க' என்று கண்டிக்காமல் ரசித்துச் சிரித்தார்.

**வினோத்**

நாலாவது ஐந்தாவது போட்டிகளில் இந்தியா ஜெயிக்கவே ராகத்தை மாற்றிக் கொள்ள நேர்ந்தது. 'கங்கூலியைப் பார்த்தீங்களா? பிய்ச்சு வாங்கிட்டான்.



* ஸ்ரீகாந்த்

ஜாகிர்கான் இருக்கானே, பிரமாதமாய்ப் போலிங் போட்டான்' என்றார். (ஸ்ரீகாந்த்தின் அகராதியில் 'ர்' கிடையாது என்பது பழைய விஷயம்.) 'யங்ஸ்டர்ஸ் எல்லாரும் அருமையா ஆடறாங்க. இந்தியா ஃபைனல் வரை போகணும். ஜெயிக்கணும். எல்லாரும் பெருமாளை வேண்டிக்குங்கோ' என்று முடிவுரை கூறினார்.

பெருமாள் என்ன செய்தார் என்பது இந்தப் பக்கத்தை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது தெரிந்திருக்கும்.

**'வெ**ள்ளிக்கிழமை வியாதி' என்ற ஒன்று எல்லா டீ.வி தொடர்களிலும் உண்டு. அதாவது வெள்ளிக்கிழமை சாயந்தர வேளை பார்த்து லபோ லபோ ஐயோ ஐயோ என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளும் காட்சி இடம் பெறும்.

டீவி நேயர்கள் ஆர்வத்துடன் பார்த்து வரும் இரண்டாவது சுவையான தொடர் 'கிருஷ்ணதாசி'. மனோன்மணி நளினிக்கும் ருத்ரமூர்த்தி கணேசனுக்கும் உள்ள மாளாப் பகையை மையமாகக் கொண்டு சுவைபடக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள் (இதுவரை.) வெள்ளிக்கிழமை வியாதி இதற்கும் தொற்றிக் கொண்டுவிட்டது.

ருத்ரமூர்த்தியின் மனைவி



# எதிர்பாராத திகில் தொடர்!

தூக்குப் போட்டுக்கொண்டு தொங்கும் காட்சியை ஆடி வெள்ளிக்கிழமையன்று சவிஸ்தாரமாகக் காட்டினார்கள். பாதியில் நிறுத்தும் அளவுக்கு அருவருப்பு ஏற்பட்டது. நாம் என்ன பண்ண முடியும்? They find enjoyment in it.

தலைக்கு
மேலே மின்னும்
கிரீடம். இரண்டு
காது பக்கமிருந்து
கழுத்துவரை வந்து விழும்
நவரத்னப் பட்டைகள்.
கழுத்தை மறைத்து
ஜொலிக்கும் நகைகள். அரசி
உடை... மயக்கும் கண்களில்
பளீரடிக்கும் விஷயங்கள்.
இதழ்களில் மந்தகாசப் புன்னகை...
– பத்து நிமிடம் ஆராய்ச்சி
செய்தபின்தான் யாரென்று
தெரிந்தது. அட இது அரசியல்ல!
பிப்டி கேஜ் தாஜ்மஹால்! யெஸ்.
ஐஸ்வர்யா ராய்தான்.

இவர் எப்படி அரசியானார்?

வந்தே மாதரம் துண்டுப் படங்கள், வந்தே மாதரம், ஜனகணமன ஆல்பங்கள் மூலம் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற பரத்பாலாவின் புரொடக்ஷன்ஸ் நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த இமெக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து 'தாஜ்மஹால்' என்ற படத்தைத் தயாரிக்கிறது. இதில்தான் மும்தாஜ்மஹாலாக(?!) நடிக்கிறார் ஐஸ்!

அதானே பார்த்தோம்!

"இந்தியா என்றவுடன், இன்று உலகத்தில் எந்த மூலையில் இருக்கிற வருக்கும் சட்டென்று நினைவுக்கு வரும் விஷயங்கள் இரண்டுதான். ஒன்று மகாத்மா காந்தி. இரண்டாவது தாஜ்மஹால். மகாத்மா காந்தியைப் பற்றிய சினிமா ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது; எனவே தாஜ்மஹாலின் கதையை நான் படமாக எடுக்க முற்பட்டிருக்கிறேன்" என்கிறார் பரத்பாலா.

"எகிப்தில் உள்ள பிரமிடுகள், பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் மாதிரி, தாஜ்மஹால் வெறும் கட்டடமில்லை. அது காதலின் வெளிப்பாடு. தாஜ்மஹாலுக்குப் பின்னே, உயிரோட்டமான அழியாத காதல் கதை இருக்கிறது. அதைப் படமாக எடுத்து, அகில உலக அளவில் வெளியிட வேண்டும் என்பது என் லட்சியம். ஒரு லைலா-மஜ்னுவுக்கு இணையாக, ரோமியோ-ஜூலியட்டுக்கு இணையாக, ஷாஜகானையும், மும்தாஜையும் உலகின் முன்னே கொண்டுபோய்க் காட்ட வேண்டும் என்பதில் நான் மிகவும் தீவிரமாக இருக்கிறேன்" என்கிறார் பரத்பாலா, ஒரு காதலனைப் போல.

"மும்தாஜ் கதாபாத்திரத்தில் நடிக்க வைக்க ஐஸ் எப்படித் தேர்வானார்?"



# தாஜ்மஹாலில் தாஜ்மஹால்!

"மும்தாஜ் மிக மிக அழகானவர். அவரைத் திரையில் காட்டுகிறபோது, அனைவரையும் சட்டென்று கவரும், மிகப் பொருத்தமான முகமாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் உதவியுடன் (பார்க்க: படம்) ஐஸ்வர்யா ராயை, மும்தாஜ் ஆக மாற்றி, அதனை இமெக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்வாஃபோர்டு என்பவரிடம் காட்டியபோது, சுமார் நாநூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்து மறைந்த மும்தாஜின் ஒரிஜினல் புகைப்படமா இது? மிக அற்புதமான அழகியாக இருந்திருக்கிறாரே மும்தாஜ்! என்று ஆச்சரியப்பட்டுப்போனார். இது ஒரிஜினல் மும்தாஜின் புகைப்படம் இல்லை. உலக அழகி ஐஸ்வர்யா ராய். மும்தாஜ் போல மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்ன போது, ரொம்பவே வியந்து போனார்" என்றார் பரத்பாலா.

இந்தப் படத்துக்கு இன்னொரு சிறப்பு அம்சம் என்னவெனில், இது இமெக்ஸ் முறையில் எடுக்கப்படுகிறது என்பதுதான். இமெக்ஸ் முறையில் எடுக்கப்படும் படங்களைப் பிரத்யேகமான இமெக்ஸ் வசதி கொண்ட திரையரங்குகளில் மட்டுமே திரையிட முடியும். இந்தத் திரை, வழக்கமான முப்பத்தைந்து எம்.எம்.படத்திரையைப் போல பத்து மடங்கு பெரியது. இன்று உள்ள புள்ளி விவரப்படி, உலகம் முழுக்கவே, இமெக்ஸ் ரகத் திரைப்படங்களைத் திரையிட வசதி படைத்த தியேட்டர்கள் ஐந்நூறுக்கு மேல் இல்லை. மும்பையில், சமீபத்தில்தான் இந்தியாவின் முதல் இமெக்ஸ் தியேட்டர் ஐம்பது கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது.





## அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2001

### பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்:

1) அடிமைகள் – சாந்தா தத்
2) கடைசி சிகரெட் – ம.வே. சிவகுமார்
3) பாவம் பிள்ளையார் – கே. சுதர்ஷன்
4) இரண்டாம் பாகம்: மூன்றாவது அத்தியாயம் – ஷாராஜ்
5) மணல்கோட்டை சமத்துவம் – பலராம் செந்தில்நாதன்
6) யார் குற்றவாளி? – ஒப்பிலி அப்பன்
7) கோரோசனை – இரா. தனிக்கொடி
8) பொம்மலாட்டம் – ராஜ்செந்தில்ராகவன்
9) சாப்பாட்டு நேரம் – விருச்சிகன்
10) விடைதெரியாத வினாக்கள் – அரும்பாத்தபுரம் மது
11) ஒரு நிஜம் – யோகி
12) வடக்கயிறும் சல்லை மரமும் – பொன்னுசாமி
13) குழந்தை மட்டும் – பாஸ்கர் எஸ். ஐயர்

மும்தாஜாக, நடிக்க ஐஸ்வர்யா ராய் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள போதிலும், ஷாஜகானாக யார் நடிக்கப் போகிறார் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. அமிதாப்பச்சன் அல்லது ஷாருக்கான் கூட ஷாஜகானாக நடிக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது. படத்துக்கு இசையமைக்கப்போகிறவர்? வேறு யார் ஏ.ஆர். ரஹ்மான்தான்!

இது வரலாற்றுப்படம் என்பதால் மிக நுணுக்கமாக, சின்ன சின்ன விஷயங்களைக்கூட கவனித்துச் செய்கிறோம். படத்தில், மொகலாயர் வரலாற்றுக்குத் தொடர்புடைய விஷயங்களுக்கு ஆலோசகராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர் அமன். இவர், நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஏராளமான பழங்கால பங்களாக்கள், தொல்பொருட்கள் ஆகியவற்றைப் பழமை மாறாமல், அதே நேரம் வலுப்படுத்தும்படியாக புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டு, செம்மையாய்ச் செய்து முடித்து, பலராலும் பாராட்டப் பெற்றவர்.

படத்தின் ஷூட்டிங் இன்னமும் ஆரம்பமாகவில்லை. தாஜ்மஹால், ஆக்ரா, தவிர ராஜஸ்தானின் பாலைவனங்கள், கோட்டைகள், உட்பட பல்வேறு வட இந்திய மாநிலங்களில் படம் பிடிக்கப்படவுள்ளது. இங்கே படப்பிடிப்பு முடிவடைந்தபின், எடிட்டிங், மிக்ஸிங் போன்ற பணிகள் அமெரிக்காவில் தான் செய்யப்படவுள்ளன.

இமெக்ஸ் படப்பிடிப்புக்குப் பயன்படுத்தும் கேமராவும், இதர உபகரணங்களும், பெரும் இரைச்சலை ஏற்படுத்தும் என்பதால், படத்தின் டப்பிங் பணிகள் கூட அமெரிக்காவில்தானாம்.

தாஜ்மஹால் படத்துக்கு ஸ்கிரிப்ட் பரத்பாலா. படத்தின் இயக்குனரும் இவரே! பல்வேறு விருதுகள் பெற்ற ரீட் ஸ்மூத் என்பவர் ஒளிப்பதிவாளராகப் பணி புரியப் போகிறார். படம் சுமார் ஒருமணி நேரம்தான் ஓடும். பட்ஜெட் எவ்வளவு தெரியுமா? முப்பது கோடி ரூபாய்!

வாவ்!

— எஸ். சந்திரமௌலி

★ வித்வான் வே.லெட்சுமணனின் நட்சத்திரப் பலன்கள்!

★ எந்த ராசிக்காரர் எந்த ஷேர் வாங்கலாம்?

★ செல்வந்தர் ஆவதை நிர்ணயிப்பது எது?

★ வீடுவாங்க பார்க்க வேண்டியது எது?

★ நவரத்னக்கல் மோதிரம் ஆபத்தை உண்டாக்கும்?

★ கண்ணன் பட்டாச்சார்யாவின் பதில்கள்

**படித்துவிட்டீர்களா...?**

# இறைஜோதிடம்

A COMPLETE ASTROLOGICAL MONTHLY MAGAZINE

"பதற்றப்பட எதுவுமில்லை. வாசல்படி தடுக்கினதிலே அனு கீழே விழுந்திருக்கா. புருவத்திலேதான் இலேசா சிராய்ப்பு. கண்ணுக்கு எதுவும் ஆகலே."

சிவப்ரியா ராம்ஷேகரை உற்றுப் பார்த்தாள். "இதெல்லாம் எனக்கு ஏற்கெனவே மாமி மூலமா தெரியும். சொல்லப்போனா உங்களுக்குமேகூட இதெல்லாம் இங்கே வரதுக்கு முன்பே தெரியும்."

ராம்ஷேகர் சங்கடத்துடன் தலைகுனிந்தார். பிறகு "நான் ஏன் கவலைப்படறேன்னு உனக்குத் தெரியும்" என்றார்.

மாமிக்கு எதுவும் விளங்கவில்லை. "என்ன மூடுமந்திரமோ? சரி சரி. கத்திரிக்காய்ப் புழுத்தால் தானா கடை வீதிக்கு வந்துதானே ஆகணும். இருங்க, நான் போய் டீ கலந்துண்டு வரேன்."

அனு தூங்கிக் கொண்டிருந்தாள். வலது புருவத்தின் மேற்புறமாகச் சிறிய வட்ட வடிவ பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது. இலேசான டெட்டால் வாசனையை உணர முடிந்தது.

"அனுவுக்கு உண்மையை நீதான் சொல்லணும். அப்பதான் அவ எச்சரிக்கையோட இருப்பா."

"என்ன டாக்டர், தன்னுடைய பலவீனத்தை அவ தெரிஞ்சுக்காம இருப்பான்னா நினைக்கறீங்க?" மேலும் பேச்சைத் தொடர்



முடியாமல் இரண்டு விஷயங்கள் நடந்தன. மிதந்துவந்த வாசனை, மாமி இன்னும் சில கணங்களிலேயே சூடான ஏலக்காய்த் தேனீருடன் வந்துவிடுவாள் என்பதை உணர்த்தியது. அனுவும் பாதித் தூக்கத்தில் திடீரென்று எழுந்துவிட்டாள். ''அக்கா'' என்றபடி எழுந்து வந்து சிவப்ரியாவின் பக்கத்தில் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

சொல்லிவிடுவதுதான் நல்லது. இந்தச் சிறுமிக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தால்கூட, சில விளக்கங்கள் பயன்படும்.

''அனு, நான் ஒண்ணு சொல்லப் போறேன். அதிலே பயப்பட எதுவுமே இல்லை.'' அனு சிரித்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் தேனீர்க் கோப்பைகளோடு வந்து சேர்ந்த மாமியின் கைகள்தான் நடுங்கின. ராம்ஷேகர் அதில் ஒரு கோப்பையை எடுத்துகொண்டு தன் அறைக்குச் சென்றுவிட்டார்.

'தான் விஷயத்தைச் சொல்லும்போது மகள் மற்றும் மனைவியின் ரியாக்ஷனைப் பார்ப்பதைத் தவிர்க்கிறார்.' சிவப்ரியாவுக்குத் தெளிவாகவே புரிந்தது.

''அனு, உனக்கு வலது கண் ரொம்ப பவர்புல்லா இருக்கு.''

"இடது கண்தான் குருடு, இல்லையா அக்கா?" இப்படியொருத் தாக்கும் பதிலை எதிர்ப்பார்க்காது சிவப்ரியா திகைக்க, "என்ன ப்ரியா இவ உளர்றா?" என்று கத்தினாள் கற்பகம். மாமியின் குரல் உயர்வதை மிக அரிதாகத்தான் சிவப்ரியா கேட்டிருக்கிறாள். அதிர்ச்சியில் குரலின் டெசிபல் இரு மடங்காகிவிட்டது இப்போது.

அனுவைவிட மாமிக்கு விளக்கமளிப்பதும், சமாதானப் படுத்துவதும்தான் மிக முக்கியம் என்று உணர்ந்தாள் சிவப்ரியா.

''பிறந்ததிலிருந்தே அனுவுக்கு இடது கண்ணிலே சக்தியில்லாமல் போயிருக்கு மாமி. அவளுடைய வலது கண்ணே ரெண்டு கண்களின் வேலைகளையும் பார்த்து வந்ததாலே, தன் இடது கண்ணின் பலவீனமே அவளுக்குத் தெரியாமப் போயிடுச்சு. ஏன் அனு,

# மனம், மனமறிய ஆவல் 18

சின்ன வயசிலே நீ விளையாட்டுக்குக்கூட ஒரு கண்ணை மூடி, மற்றொரு கண்ணால் மட்டும் பார்த்ததில்லையா?''

இல்லை என்பதுபோல் உதட்டைப் பிதுக்கினாள் அனு. கொஞ்ச மாசத்துக்கு முன்னாலே என்னைக் கண் டாக்டர்கிட்டே அப்பா அழைச்சுட்டுப் போனாங்க இல்லையா? அப்ப அவர் என் வலது கண்ணை மூடிட்டு இடது கண்ணாலே மட்டும் படிக்கச் சொன்னப்ப, எனக்கு எந்த எழுத்துமே தெரியல்லே.''

"தெய்வமே" என்றபடி இரு கைகளாலும் தலையைத் தாங்கியபடி சோபாவில் சரிந்தாள் மாமி. "எனக்கு ஏன் இதையெல்லாம் யாருமே சொல்லல்லே?''

"இவ்வளவு ஷாக் ஆக இதிலே எதுவும் இல்லை மாமி. கடவுள் ரெண்டு ரெண்டா கொடுத்திருக்கிற பாகங்களிலே ஒண்ணிலே பழுது உண்டானாலும் இன்னொண்ணை வச்சு சுலபமா சமாளிச்சுக்கலாம். இப்ப கிட்னியைத் தானமா தரதில்லையா?''

சட்டென்று பதில் கேள்வி கேட்டாள் மாமி. "ஆனா யாரும் உயிரோடு இருக்கும்போதே ஒரு கண்ணைத் தானமா தரதில்லையே. அது ஏன்? பாக்கறதுக்கு இரண்டு கண்ணும் கட்டாயம் வேணும்ங்கிறதாலதானே?''

அடுத்து தான் கூற வந்த விஷயத்தைத்தான் மாமியும் தொடுகிறாள் என்பது புரிந்தது சிவப்ரியாவுக்கு. "த்ரீடின்னு சொல்லுவாங்களே, அந்த மூணாவது பரிமாணத்தை உணர இரண்டு கண்களும் வேணும். ஒரே கண்ணில் பார்த்தால் கூட எந்த உருவமும் தெளிவாத் தெரியும். ஆனால் அது எவ்வளவு தொலைவிலே இருக்குன்றதைச் சரியா நிர்ணயிக்க இரண்டு கண்கள் வேணும்.''

அனுவின் முகத்தில் இலேசான பயம் பரவுவதைப் பார்த்ததும், சிவப்ரியா பேச்சை வேகமாகத் தொடர்ந்தாள். "ஆனா இத்தனை வருஷமும் உனக்குப் பார்ப்பதிலே எந்தக் கஷ்டமும் இருந்ததில்லேன்னு சொல்றே. அதனாலே இனிமேலும் இதனாலே சிக்கல் எதுவும் வந்துடாது. ஆனா ஒண்ணு; வலது கண்ணை அதிக ஜாக்கிரதையுடன் நீ பார்த்துக்கணும், அவ்வளவுதான்.''

"என்னென்னவோ ஆராய்ச்சியெல்லாம் செய்யறாளே, இதுக்கு ஒரு தீர்வு கண்டு பிடிக்கலயா?''

மாமியின் கேள்விக்கு வருத்தத்துடன் இடவலமாகத் தலையசைக்கத்தான் முடிந்தது அவளுக்கு. "கண் டாக்டர் எல்லா வித சோதனைகளையும் செய்துட்டார். ஒரு வேளை ஆறேழு வயசிலேயே இந்தக் குறையைக் கண்டுபிடித்திருந்தால், அந்தக் கண்ணுக்குச் சில பயிற்சிகளைக் கொடுத்து ஓரளவு சரி செய்திருக்கலாம். அல்லது ரொம்ப பவரான காண்டாக்ட் லென்ஸாவது பொருத்தி பார்வைக் குறைவை சரி செஞ்சிருக்கலாம்.''

சிவப்ரியா பேச்சை நிறுத்தியதிலேயே 'இனிமே எதுவும் செய்யமுடியாதுன்னு டாக்டர் சொல்றார்' என்ற செய்தி மறைந்திருந்தது.

இரண்டு நிமிடங்கள் மௌனம். மாமி சுதாரித்துக் கொண்டுவிட்டாள். "டீ சூடு



"நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன்... நான் சம்பளம் வாங்கிட்டு வர்றப்ப மட்டும்தான் என்னை நல்லா கவனிக்கிறே..."

"ஏங்க இப்படி அபாண்டமா பேசுறீங்க... போனஸ் வாங்கிட்டு வர்றப்பவும் நல்லாத் தானே கவனிக்கிறேன்!

— தஞ்சை தாமு

சரியா இருக்காப்பாரு. இல்லேன்னா திரும்ப சுடவச்சுண்டு வரேன்.''

டம்ளரைத் தொடும்முன்பே "சூடாத்தான் இருக்கு'' என்றவள், ஒரே விழுங்கில் மொத்தத்தையும் குடித்துவிட்டு "அனு, கேரம் போர்ட் ஆடலாமா?'' என்றாள்.

கிட்டத்தட்ட அவளை உரசியவாறு நின்றது அந்தக் கார். "இந்தப் போக்குவரத்து நெரிசலில் நடைபாதையும் இல்லையென்றால் எங்கேதான் நடப்பது?'' என்று தனக்குள்ளே சிவப்ரியா கேள்வியை எழுப்பிக்கொண்டபோது காரின் கதவு திறந்தது. "ஹாய் ப்ரியா, எப்படி இருக்கீங்க?'' என்

நான் ஸ்ரீகுமார். அவள் நடித்த ஒரே படத்தின் கதாநாயகன்.

"நல்லாயிருக்கேன்" என்ற சிவப்ரியா "முத்துலட்சுமி எப்படியிருக்கா?" என்றாள். கடைசியாக அவளைப் பார்த்தது ஒரு முறை வெளிப்புறப் படப்பிடிப்புக்கு அவள் வந்தபோதுதான். தனது நெருங்கிய பள்ளித் தோழியைப் பார்க்க வேண்டும் போலிருந்த எண்ணத்தை, அதன் விளைவுகளை யோசித்து டக்கென்று அழித்துக் கொண்டாள்.

"தலைவரோட பையன் பரீட்சை ஹாலில் என்ன தகராறு பண்றான்?"

"குடுத்திருக்கிற கேள்வித்தாளுக்குப் பதில் எழுத மாட்டானாம். தானே கேள்விகளைக் கேட்டுக்கொண்டு அதுக்குத்தான் பதில் எழுதுவானாம்."

— வடுவூர் சிவ. முரளி



"அதை ஏன் கேட்கறீங்க? அவளைப் பத்தி உங்ககிட்டே கொஞ்சம் சொல்லணும்."

வெற்றிடத்தை நோக்கிப் பாய்ந்துவரும் புயல்போல, தங்களுக்கு நன்கு அறிமுகமான ஹீரோவைப் பார்த்ததும் அந்தப் பகுதியிலிருந்தவர்களில் பலரும் அங்கு குவியத் தொடங்கினர்.

"உங்க க்ளினிக்குக்கு எதிரே ஒரு டென்னிஸ் கோர்ட் இருக்கு இல்லையா? அங்கே பிராக்டீஸ் செய்யத்தான் போயிட்டிருக்கேன். வாங்களேன் ட்ராப் செய்யறேன்."

வெறும் நடிகனாக மட்டும் அவன் இருந்திருந்தால் மறுத்திருப்பாளோ என்னவோ, தனது தோழியின் கணவன் என்பதோடு, அவளைப் பற்றிய செய்தி ஒன்றைத் தன்னிடம் பகிர்ந்து கொள்ள அவன் விரும்புகிறான் என்றதும் சேர்ந்து கொள்ள, காரில் ஏறிக்கொண்டாள்.

க்ளினிக்கின் வாசலில் இறங்கிக் கொண்டபோது மனத்தில் ஒரு குறுகுறுப்பு உண்டானது. டாக்டர் ராம்ஷேகரின் அதிருப்திப் பார்வையையோ, ஆனந்தின் அக்னிப் பார்வையையோ சந்திக்க வேண்டியிருக்குமோ? என்ன செய்ய, யுத்தத்தில் கலந்து கொள்ளாவிட்டால் மட்டும் அபாயத்திலிருந்து தப்பிவிட்டதாக அர்த்தமா?

வாசலில் நர்ஸ் கோகிலவாணி மட்டும்தான் தென்பட்டாள். "என்ன கோகிலா, உனக்குப் பிடிச்ச ஹீரோகிட்டே நீ ஆட்டோகிராஃப் வாங்குவேன்னு நினைச்சேன்."

"விடுங்க டாக்டர். நானே என் புருஷன் வேறாருத்தியோட தொடுப்பு வச்சிருக்கானேன்னு கவலையிலே இருக்கேன்" என்றபடி வேகமாக உள்ளே செல்ல, சிவப்ரியாவுக்குப் பாவமாக இருந்தது. இது லோலிடா மூலம் அவள் ஏற்கெனவே அறிந்த தகவல்தான். இப்போது பிரச்னை மேலும் சிக்கலாகியிருக்க வேண்டும்.

க்ளினிக்கில் உள்ள அத்தனை ஊழியர்களின் அந்தரங்க விஷயங்களும் எப்படியோ லோலிடாவுக்குத் தெரிந்துவிடும்.

அடுத்த நாள் காலையில் லோலிடாவின் உதவி இல்லாமலேயே சிவப்ரியா சம்பந்தப்பட்ட ஒரு செய்தியை நாளிதழ் ஒன்று வெளியிட்டிருந்தது.

"திருமகன் நடிகரும், அழிக்கும் கடவுளின் பிரியமான நடிகைக்கும் தொடர்பு நீடிக்கிறது. காரில் உல்லாசம்! ஒரே படத்தோடு நடிகை நிறுத்திக் கொண்டதற்குக்கூட நடிகரின் கண்டிப்புதான் காரணமாம்!"

(தொடரும்)

"தாஜ்மஹால் டைப்புல ஒரு கட்டடம் கட்டணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை!"

"கட்டிட வேண்டியதுதானே!"

"என் மனைவி ஒத்துழைக்க மறுக்கிறாளே!"

— கு. கணேசன்



FOR COMFORTABLE AND
ECONOMICAL STAY AT

**NEW DELHI**

VISIT

# HOTEL DURGA DELUX

(Govt. Approved)

5/40, W.E.A. SARSWATI-MARG
KAROL BAGH, NEW DELHI - 110005
Telephone: 011-5785648
011-5785610, 011-5766243
FAX : 011-5753040

TOUR & TRAVEL FACILITY

STD/ISD FACILITY

FOR LOCAL ENQUIRY AT CHENNAI
CONTACT: 044-4724327
(AFTER 6 PM ONLY)

# நிருபர்கள் தேவை


எமது **உள்ளாட்சித்தகவல்** இதழுக்கு ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியம், நகரம், மாநகரம் வாரியாக ஆண், பெண் நிருபர்கள் தேவை. தங்கள் பகுதியில் இருந்தே பணியாற்றலாம். சிறப்பான ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பம் மற்றும் விபரக் குறிப்புக்களை பெற, கீழ்காணும் முகவரிக்கு ரூ.200/- மணியாடர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

டாக்டர். துரை பெஞ்சமின் B.A.M.S., M.A.,
ஆசிரியர் & வெளியிடுவோர்,
உள்ளாட்சித்தகவல்
5/104, A3, நியூ டவுன், திருவெறும்பூர்,
திருச்சிராப்பள்ளி - 620 013.
செல்போன் : 098424 - 14040

வெற்றிகரமான
15-ஆம் ஆண்டில்

**AJANTHA**
**SCHOOL OF**
**ARTS.**



நேர்முகப் பயிற்சியும் உண்டு.

வீட்டில் இருந்தபடியே
**தபால் மூலம்**
படிக்கலாம்.

# ஓவிய ஆசிரியர் பயிற்சி

கல்வித் தகுதி
SSLC, +2,
PASS / FAIL
ஆண்கள், பெண்கள்.



இலவச
விவரப்புத்தகம்
பெற உங்கள் முகவரியை
ஒரு அஞ்சல் அட்டையில்
எழுதி அனுப்புங்கள்.
அல்லது தொலைபேசியில்
தெரிவியுங்கள்.

AJANTHA SCHOOL OF ARTS
(GOVT. REGD. NO. : 1075/89/MS/RD)
M.M.6, MUTHU NAGAR, POONAMALLEE,
CHENNAI - 600 056
PHONE : 044 - 6490363.

# தேன்கூடு

## கம்ப்யூட்டரில் கேமரா!

தெஹல்கா - விவகாரங்கள் அதிகமாக தலை தூக்கியுள்ள நிலையில், சோனி நிறுவனம் 'லேப்-டாப்' கம்ப்யூட்டரில் 'தம்மாத்துண்டு' கேமரா ஒன்றை வைத்து வடிவமைத்துள்ளது. இதிலுள்ள 'ஐம்பத்தாறு கே' என்ற சிஸ்டம் மூலம் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய செய்தியையும் எதிரே இருக்கும் காட்சியையும் உடனே படம் பிடித்து உலகின் எந்த இடத்திலுமுள்ள மற்ற கம்ப்யூட்டருக்குப் பரிமாறிக் கொள்ள முடியுமாம். இது மாதிரி லேப்-டாப் கம்ப்யூட்டர்களைக் கண்டால் நம்மூர் அரசியல் வாதிகள் கொஞ்சம் உஷாராகிவிடுவது நல்லது.



## அதிக சக்தி விண்கலம்!

அமெரிக்காவின் 'நாஸா' ஆராய்ச்சிக் கழகம் 'ஏரியன் 5' என்ற விண்கலத்தை விண் ஆராய்ச்சிக்காகத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. 2005ம் ஆண்டு விண்ணுக்குப் பறக்க இருக்கும் இந்த விண்கலத்தின் எடை 12 டன்கள். இதன் கட்டுமான பணிக்கு 18 மில்லியன் டாலர் செலவாகிறதாம். உலகின் மிகப் பெரிய அதிக சக்தி கொண்ட விண்கலம் இதுதானாம்.

*– பாரீஸ் பார்த்தசாரதி*



## ஒரே போடு!

திருவனந்தபுரத்தில் டெலிபோன் பில், மின்சார பில், வீட்டு வரி, சாலை வரி, வாகன வரி, இன்ஷூரன்ஸ், கார்பரேஷன் வரி, தண்ணீர் மற்றும் எந்த வரியானாலும் குறைந்த நேரத்தில் மக்கள் பணம் கட்ட வசதி செய்து கொடுத்திருக்கிறது கேரள அரசு. ''பிரெண்ட்ஸ்'' என்ற இந்த அமைப்பு, எந்த விதமான வரியானாலும் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் கட்ட வசதி செய்துள்ளதால் கால் கடுக்க நிற்கவோ, இடம் மாறி மாறி அலையவோ தேவையில்லை. இங்கே கட்டப்படும் ரசீதுகள் அந்தந்தத் துறைக்கு உடனே அனுப்பி வைக்கப்படுகின்றன. நிறைய கவுண்டர்கள், கம்ப்யூட்டர் வசதியுள்ளதால் மக்களால் எளிதில் பணம் கட்ட முடிகிறது. மக்களின் பொன்னான நேரம் வெகுவாக மிச்சப்படுகிறது. இதுபோல பல கிளைகளைக் கேரளா முழுவதும் திறக்க போகிறது கேரள அரசு.



*– சியாமளா சுவாமிநாதன்*

## அழுகின்ற கோபுரம்!

நெதர்லாந்தின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம். அங்கே உள்ள கடற்கரையில் கோபுரம் ஒன்று உள்ளது. அதற்குப் பெயர் 'அழுகின்ற கோபுரம்.'

16ம் நூற்றாண்டில் வணிகர்கள், வணிகத்தின் பொருட்டு கப்பல்களில் புறப்படுவர்.



அவர்களுடைய மனைவியர்கள் வழியனுப்ப அந்தக் கோபுரத்தின் அடியில் கூடியிருப்பர். கணவன்மார்கள் பயணம் தொடங்கியதும், பெண்கள் கண்ணீர் சிந்தி அழுவர். அதனால் அந்தக் கோபுரத்திற்கு அழுகின்ற கோபுரம் என்ற பெயர் ஏற்பட்டது.

- பூபதிராவ், சிதம்பரம்

நாட்டிலே மழையே இல்லாதபோது நபிகள் நாயகத்திற்கு அல்லாவின் குரல் அசரீரியாகக் கேட்டது. "இந்த நாட்டில் கோள் பேசுபவர்கள் நிறைய பேர் இருப்பதே மழை பெய்யாததற்குக் காரணம்" என்றது அல்லாவின் குரல்.

"இறைவா! கோள் பேசுகிறவன் யார், யார் என்று சொல்லுங்கள். நான் அவர்களை திருத்த முயலுகிறேன்" என்றார் நபிகள்.

"நான் அப்படி யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னால் நானும் கோள் பேசியவனாக ஆகிவிடுவேனே" என்றார் அல்லா...!

- க. பூங்கொடி, சித்தோடு

## மூன்று இடத்தில் வெட்டிய கிணறுகள்



ஒரு முறை ஓர் மனிதன் தோட்டம் போட்டான். தோட்டத்திற்குத் தண்ணீர்ப் பாய்ச்சக் கிணறு வெட்டத் தொடங்கினான். தண்ணீர் கிடைக்கவில்லை.

இரண்டாவதாக ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தான். தண்ணீர் இல்லை.

மூன்றாவதாக ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தான். மிகவும் பாடுபட்டு ஐம்பது அடி வரை வெட்டினான். தண்ணீர் வரவில்லை. தோண்டும் எண்ணத்தையே விட்டுவிட்டான். ஒருநாள் அனுபவசாலியான ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

பெரியவர் அவனைக் கேட்டார் ''தம்பி மூன்று இடத்திலும் நீ வெட்டிய மொத்த ஆழம் எவ்வளவு இருக்கும்?''



''நூறு அடி!''

''தம்பி, நீ மீண்டும் மீண்டும் முயற்சி செய்ததில் தவறில்லை. ஆனால் ஒரே இடத்தில் கருத்தைச் செலுத்தி நீ சலிப்பில்லாமல் தோண்டியிருந்தாயானால் நூறு அடி ஆழம் ஆவதற்கு முன்னாலேயேகூட நீர் கிடைத்திருக்கும். எப்போதும் விடா நம்பிக்கையுடன் ஒருமுகப்பட்ட முயற்சியிருந்தால் எடுத்த செயல் வெற்றி பெறும்'' என்றார் அந்தப் பெரியவர்.

பகவான் ராமகிருஷ்ணர் சொன்னது.

- டி.எஸ். சீதாராமன், கும்பகோணம்.

## கட்சியைக் குறிக்க திருஷ்டிப் பொட்டு!

**18**-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உள்ள பெண்கள் அனைவரும் முகத்தில் இடப்பக்கமோ, வலப் பக்கமோ திருஷ்டிப் பொட்டு வைத்திருந்தார்கள். இதை அழகுக்காக மட்டுமல்லாமல் தாங்கள் எந்தக் கட்சியின் அனுதாபி என்பதைக் குறிக்கும் அடையாளமாகவும் வலது - இடது திருஷ்டிப் பொட்டைப் பயன்படுத்தினார்களாம்.

- ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்

தற்போது
விற்பனையில்

# ஆத்ரேயா

**ரெடிமேட் ரவிக்கைகள் பெட்டிகோட்ஸ் மற்றும் நைட்டீஸ்
தயாரிப்பாளர்கள் ஜூலை 2ம் தேதி முதல் உங்களுக்காக
பெருமையுடன் வழங்குகின்றார்கள்**

# ஆத்ரேயா 'ஸ்வாதி'

ரெடிமேட் ரவிக்கைகள் – பெட்டிகோட்ஸ்
'உங்கள் தோற்றத்தில் ஓர் அழகிய மாற்றம்
உடனடியாக
ஆத்ரேயா மற்றும்
ஸ்வாதி ரெடிமேட் ரவிக்கைகள்

| சைஸ் | ஆத்ரேயா விலை | ஸ்வாதி விலை |
|---|---|---|
| 30" | 90 | 70 |
| 32" | 95 | 70 |
| 34" | 105 | 70 |
| 36" | 110 | 75 |
| 38" | 110 | 75 |
| 40" | 115 | 75 |
| 42" | 115 | 75 |



**நைட்டீஸ்,
ரெடிமேட் ரவிக்கைகள்,
பெட்டிகோட்ஸ் –**

# ATHREYA

TM

1. Jambulinga Street, (Entrance from Valluvar Kottam High Road), Nungambakkam,
Chennai - 600 034.
Phone: 822 6586 Fax No. 5360076. Tlx: 041-6753 RAJA IN . E.Mail: ols@md3.vsnl.net.in

ஆத்ரேயா ரெடிமேட் ரவிக்கைகள் கிடைக்கும் இடம்: EVE'S Park, 108, Bharathiyar St, Karaikal. Ph:20288
Ganesa Lakshmi Textiles - 146 - Long bazzar - Vellore

*VISIT US AT www.athreyawoman.com* | **All major credit cards Accepted**

Proprietrix : Mrs. Vasantha Rajagopalan

Sri Ragav

"சார், ரயில் அஞ்சு நிமிஷம் நிற்கும். தண்ணீர் பிடிக்கணும்னு சொன்னீங்களே?"

எதிர் இருக்கைக்காரர் சொன்னதும் தண்ணீர் பாட்டிலுடன் ரயிலைவிட்டு இறங்கினேன்.

புத்தக வண்டி, டீ, காபி ஆட்களைத் தாண்டித் தண்ணீர்க் குழாயில் நீரைப் பிடிக்கும்போது யதேச்சையாகப் பார்வை உயர, ஸ்தம்பித்தேன்!

புவனா! அவள்தானா? அவளேதான்! முன்பை விட கொஞ்சம் பூசிய உடம்பு, பளீரிடும் நிறம், சுருட்டை முடி... அவளேதான்.

அவள் பார்வையும் இப்போது நேர்க்கோட்டில். அவள் முகத்திலும் அதிர்ச்சி.

"சார், தண்ணி வழியுது பாருங்க. நகருங்க."

> எல்லாம் முடிந்து விட்டது. வெறுமை மட்டுமே நிதர்சனம். வெட்கம், அவமானம் எல்லாம் தாண்டிய வெட்டவெளியில் மனது பயணிக்க, ஜடமாய்க் கவனித்தபடி இருந்தேன்.

பக்கத்திலிருந்தவன் சொன்னதும், என் பார்வை அவளிடமிருந்து இடம் பெயர்ந்தது.

நகர்ந்து, என் பெட்டியில் ஏறுவதற்கு முன் திரும்பிப் பார்த்தேன்.

அவள் பார்வை சட்டென என்னிடமிருந்து நகர்ந்தது. அவசரமாய் ரயிலுக்குள் ஏறிக் கொண்டாள்.

என் இருக்கையில் வந்து அமர்ந்த பின்பும் அதிர்வினால் மனத்துக்குள் ஏற்பட்ட அலை அடங்கவில்லை. மெல்ல ரயில் நகரத் தொடங்கியது. என் நினைவுகளும் பின்னோக்கி.

'ஒரு குழந்தைக்கு அப்பா ஆக முடியாத உங்களோட வாழ விரும்பலே.'

இந்த வார்த்தை, உயிர் பிரியும் வரை எனக்குள் ரீங்கரிப்பதை நிறுத்த முடியாது!

உண்மைதான். அன்று அந்த சூழ்நிலையில் அவள் கூறியது முற்றிலும் நிஜம்.

எங்கள் திருமணம்... ஆம், புவனாவுடன்தான்... நடந்த ஒரே மாதத்தில் நிகழ்ந்த விபத்து!

ஸ்கூட்டரில் நான் விரைய, எதிரே வந்த வேன் என் மீது மோத, ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். எல்லாம் நடந்தது இருபது வருடம் முன்பு.

தெய்வாதீனமாய் உயிர் பிழைத்தேன். ஆனால் ஊனமானேன்.

"சாரி சார், உங்களாலே இனி ஒரு குழந்தைக்கு அப்பாவாக முடியாது."

டாக்டர் மென்மையாய், நிறுத்தி, நிதானமாய், வார்த்தைகளுக்கு வலிக்காதபடி கூறினார். ஆனால் வலித்தது எனக்குள்.

அருகில் நின்று கொண்டிருந்த புவனாவைப் பார்த்தேன். அவள் முகம் இறுகிப் போய்க்கிடந்தது. உயிர் இருந்தும் சவமாய் வீடு திரும்பினேன்.

எனக்கு அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாதபடி தாழ்வுணர்ச்சி. மாத்திரை கொடுக்க, உணவு தர புவனா வந்தபோதெல்லாம் குறுக்கிக் கொண்டேன் உடம்பை. முடிந்தவரை என் அம்மாவையே அழைத்தேன் சிசுருஷைகளுக்கு. மெல்ல உடல் தேறி, நான் அலுவலகம் செல்ல ஆரம்பித்த பின்னும் எங்களுக்குள் விழுந்த திரையை விலக்கத் துணிவில்லாமல் கிடந்தேன்.

கிட்டத்தட்ட ஒரு வருடம் இப்படியே அந்நியத்தன்மையுடன் ஓடியது. முதலில் புவனா என் அருகில் வர சில சமயம் முயன்றபோதெல்லாம் விலகி ஓடினேன்.

நான் மனத்தளவில் தேறி புவனாவுடன் பேச முயன்றபோது புரிந்து போனது–

அவள் என்னைவிட்டுத் தொலை தூரம் போய்விட்டது புரிந்தது.

திடீரென ஒருநாள் வெளியே செல்ல அழைத்தாள். கோயிலின் நந்தவனத்தில் அமர்ந்தோம்.


"நான் போகலாம்னு முடிவு பண்ணிட்டேன்."

புவனாவுக்கு அரைத்துப் பேசத் தெரியாது. வெட்டு ஒன்னு துண்டு ரெண்டுதான்.

"எங்க அலுவலகத்திலே வேலை செய்ற முரளியைக் கல்யாணம் பண்ணிக்கறதாய் முடிவு செஞ்சிருக்கேன்."

எனது முகம் வெளுத்துப் போனது.

"இயல்பாய் நிகழ்ந்த மனப் பரிமாற்றம். இது எங்களுக்குள் எப்படி ஆரம்பித்தது


கிருஷ்ணா
ஆண்வலி



''எங்க ஆபீஸிலே குரோர்பதியாக நாலைந்து பேர் முயற்சி எடுத்தாங்க... ஆனா வெற்றி பெற முடியலே!''

''பூ, இவ்ளோதானா? எங்க ஆபீஸிலே 'கொர்'பதி ஆகிறதிலே எல்லாரும் வெற்றி பெற்றுட்டாங்களே!''

– சாயம் வெ. ராஜாராமன்

---

தெரியலே. ஆனால் ஒருவரையொருவர் நேசிக்க ஆரம்பிச்சுட்டது தெரிஞ்சு போச்சு. மனசு விட்டுப் பேசினோம். எனக்கு ஏழெட்டுக் குழந்தைங்க பெத்துக்கிட்டு பெரிய சம்சாரியாய் வாழணும்னு ஆசை. நம்ம முதலிரவில் கூடச் சொன்னேன் இதை."

அவன் முடிவை நியாயப்படுத்துகிறானா, இல்லை, என் மனத்தை சமாதானப்படுத்த முயற்சி செய்கிறானா?

எனக்குள் புழுக்கம். கூடவே இதை எதிர் பார்த்தது போல ஓர் உணர்வு.

"ஒரு குழந்தைக்கு அப்பா ஆக முடியாத உங்களோட... சரி, இதைச் சொல்றதுக்கு? மலடின்னு சொல்லிட்டு கட்டின பொண்டாட்டியை விட்டுட்டு வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கலியா ஆண்கள். உங்க அம்மாவிடம் எப்படிச் சொல்லணுமோ சொல்லிடுங்க. நாங்க பம்பாய்க்கு வேலை மாற்றிப் போறோம்."

சகலமும் ஏற்பாடு செய்து விட்டாள்!

"நீங்க ஏதும் சொல்ல விரும்பறீங்களா?" என்றவளை நிமிர்ந்து பார்த்தேன்.

"சந்தோஷம்! போ!"

நேரே சுவாமி சந்நிதிக்குள் போனேன். அழுகை முட்டிக் கொண்டு வர, கண்ணை மூடி அமர்ந்தேன். கண்ணிலிருந்து நீர் அருவியாய்க் கொட்டியது. அருவி காய்ந்து போகும் வரைக் கண் மூடி அமர்ந்திருந்தேன்.

எல்லாம் முடிந்து விட்டது. வெறுமை மட்டுமே நிதர்சனம். வெட்கம், அவமானம் எல்லாம் தாண்டிய வெட்டவெளியில் மனது பயணிக்க, ஜடமாய்க் கவனித்தபடி இருந்தேன்.

**ம**னவெளிப் பயணத்தில் மயங்கிக் கிடந்தபோது, திடீரென என்னை உலுக்கியது ஒரு குரல்.

கண் விழித்துப் பார்த்தபோது எதுவும் முதலில் புரியவில்லை. மெல்ல, மெல்ல ரயிலின் ஆட்டம், ரயில் இருக்கை, எதிரே உள்ள பயணி, ஜன்னல் வழியே மறையும் மரக்கூட்டம்... அட இது யார், புவனாவா?

எழுந்து விட்டேன் அவளைக் கண்டு.

"கொஞ்சம் என்னோடு வாங்களேன்."

அவள் அழைப்பும், அதில் தென்பட்ட பதற்றமும் ஏதோ அவசரம் எனப் புரிந்தது.

'வெஸ்ட்டிபுல்' வழியே ரயிலின் அடுத்த பெட்டிக்குள் நுழைந்தோம்.

முதல் வகுப்புப் பெட்டி அது. அதன் ஓர் அறைக்குள் நுழைந்தாள். பின் தொடர்ந்தேன்.

அங்கே இருக்கையில் ஒருவர் படுத்திருக்க, இன்னொரு பெண்மணி விசிறிக் கொண்டிருந்தார் பேப்பரை வைத்து.

வழுக்கைத்தலை, ஏறத்தாழ என் வயது, வசீகர முகம்... முரளி?

புவனாவைப் பார்த்தேன்.

"திடீர்னு மயக்கமாயிட்டார் முரளி. கையும் ஓடலே, காலும் ஓடலே. இவங்க அவரோட தங்கை. ப்ளீஸ், என்னன்னு பாருங்களேன்."

நாடி பிடித்துப் பார்ப்பது, ஹோமியோபதி மருந்து தருவது, கூடவே கொஞ்ச நாள் ஒரு டாக்டரிடம் கம்பவுண்டராக வேலை செய்தது... என்று ஓரளவு மருத்துவக் கடலின் ஓரத்தில் நின்றிருக்கிறேன். புவனாவுக்கும் அது தெரியும்.

முரளியின் நாடி பிடித்துப் பார்த்தேன். கண் இமைகளை விரித்துப் பார்த்தேன். நாசியில் கைவைத்து மூச்சைப் பரிசோதித்தேன்.

"பயப்பட ஒண்ணுமில்லே" என்றபடி புவனாவைப் பார்த்தேன்.

"நீண்ட அலைச்சல், ஒழுங்கான சாப்பாடு இல்லாதது, கூடவே பிரஷர், அதான் மயக்கம். ஒரு நிமிஷம்" என்று சொல்லி விட்டு என் பெட்டிக்கு வந்து, என்பேக்கிலிருந்து ஹோமியோபதி மாத்திரைகளை எடுத்துக் கொண்டு முரளியிடம் திரும்பினேன்.

மாத்திரைகளை வாயில் போட்டதும் முரளி மெல்ல எழுந்து பார்த்தார். இரண்டு

தலையணையை எடுத்து அணை வாக வைத்துப் படுக்க வைத்தேன்.

முரளி கண்மூடிக் கொண்டார்.

"பயப்படவேண்டாம். இரண்டு மணி நேரம் கழிச்சு இந்த மாத்திரைகளைக் கொடு" என்று பொட்டலம் மடித்துத் தந்தேன்.

"நன்றி" என்றாள் முரளியின் தங்கை.

"புவனா, இதோ வந்துடறேன்" என்று வெளியே சென்றாள்.

"நான் புவனாவைப் பார்த்தேன்.

"எப்படியிருக்கே?"

"ம்" என்றாள்.

"பம்பாயிலேதானா?"

தலையசைத்தாள்.

"எங்கே பயணம்?"

"இராமேஸ்வரம்" என்றாள்.

கொஞ்ச நேர மௌனத்துக்குப் பிறகு கேட்டேன்.

"குழந்தைங்க...?"

என்னை நிமிர்ந்து பார்த்தவள் கண்களில் தெரிந்த வலி உண்மையைச் சொன்னது.

எனக்குள் துக்கம் பீறிட்டது.

"சாரி" என்றேன்.

அப்போது தடதடவென சப்தத்துடன் உள்ளே நுழைந்தான் அவன்.

"அப்பா, நீங்க இங்கேயா இருக்கீங்க. காப்பி சாப்பிட்டுட்டு வரலாம்னு 'பேன்ட்ரி கார்' வரைக்கும் போயிட்டு வரதுக்குள்ளே காணாமல் போயிட்டீங்களே! எதிர் சீட் அங்கிள் தான் சொன்னார். யார் இவங்க? ஹலோ ஆன்ட்டி."

ஏ.கே. 47 இயக்கம் போல, படபடவென பேசியவனை கையமர்த்தித் தடுத்தேன்.

"ப்ளீஸ், நீ போய் நம்ம பெட்டியிலே இரு. இதோ வந்துடறேன்" என்றேன்.

நகரப் போனவனைத் தடுத்தேன்.

"ஒரு நிமிஷம் சூர்யா. இவன் என் மகன். பி.ஈ. மூன்றாவது வருடம் படிக்கிறான். சூர்யா, இவங்க புவனா. நீ இனி போகலாம்" என்றேன்.

திகைத்துப் போய்ப் பார்த்த புவனாவிடம் சொன்னேன்.

"ஒரு குழந்தைக்கு அப்பா ஆக முடியாதவன்னு எல்லோரும் சொன்னதும் ஒரு மாற்றம் மனசுலே. ஆசிரமத்திலேயிருந்து இவனை தத்தெடுத்தேன். அம்மாவும் எனக்கு உதவியாய் இருந்தாங்க. வாழ்க்கையிலே ஒரு கதவு மூடினபோது, சூர்யா மூலம் இன்னொரு கதவு திறந்தது."

புவனாவின் பார்வை ஜன்னல் வழியே வெறிக்க, எழுந்தேன். ரயில் அதன் போக்கில் ஓடிக் கொண்டிருந்தது. ○

# கல்கி-

# B. M. SILK SAREES

BMSS

## இணைந்து வழங்கும்

## பட்டுப் புடவை

## பரிசுப் போட்டி – 2

**வா**சகர்கள் செய்ய வேண்டியது இதுதான். இந்த இதழில் இடம்பெற்றுள்ள ஒரு கட்டுரையில் 'வைரம்' என்ற வார்த்தை பொருத்தமின்றி இடம்பெற்றுள்ளது. அது எந்தப் பக்கம், எந்த கட்டுரையில் என்பதைக் கண்டுபிடித்து எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு ரூ.**2500/-** மதிப்பிலான பட்டுப் புடவை பரிசு. கூப்பன்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: **20.8.2001.** உறையின் மேல் 'பட்டுப்புடவை பரிசுப் போட்டி' என்று குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

**பட்டுப் புடவை பரிசுப் போட்டி – 2**

பக்கம் : ..........................................

கட்டுரை தலைப்பு: ..................................

என் பெயர் : .......................................

முகவரி : ..........................................

...................................................

...................................................

...................................................

## சென்னை மாநகருக்கு மிகஅருகில்
# சிறந்த வீட்டு மனைகள்
## பிரதான அமைவிடம், வளமான முதலீடு

MMDA அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள் மிக நியாயமான விலையில்



## சக்தி கார்டன்ஸ்

(இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும்
சவீதா பல் மருத்துவக் கல்லூரி சமீபம்)

சென்னை - 600 056

• கிண்டியிலிருந்தும் கோயம்பேட்டிலிருந்தும் வசதியான 100 அடி ரோடு • சென்னையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பஸ் வசதி • உத்தேசிக்கப்பட்டுள்ள பூந்தமல்லி ரயில் நிலையம் ஒரு கூடுதல் வசதி • சுவையான குடிநீருடன் அருகில் வீடுகளுடன் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள இந்த மனையை உடனே வாங்குவீர் • உடனே வீடு கட்டவோ அல்லது முதலீடு செய்வதற்கோ சரியான தேர்வு • சுத்தமான பத்திரம் / [illegible]

☆ சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிட் மூலமாக நிதி உதவியும் உண்டு.

மனையை பார்வையிட தினமும் இலவச வாகன வசதி 7,11 a.m & 3.00 p.m

Ph : 4357721/31 Fax.4353183 . Cell : 98400-44018 E-mail: blbestmail@vsnl.net http://business.vsnl.com/blbestates

**BLB Estates (P) Ltd.**

S-3, "Ramana Flats" 27, Rathna Nagar, Off Anna Salai,
(Behind Apollo Cancer Hospital), Teynampet, Chennai - 18.

நன் மதிப்பில் முதலீடு.





# S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

*முதியோர் சேவை பெரியது!*

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

**S.V. HOME FOR AGED**

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356; 475 5799
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org



### முன்கதை

பரஞ்சோதி என்ற இளம் வாலிபன் காஞ்சி நகருக்கு நாவுக்கரசர் மடத்தில் சேர்ந்து தமிழ் பயிலுவதற்காக வருகிறான். வழியில் ஒரு புத்த பிக்ஷு அவனுக்கு அறிமுகமாகிறார். காஞ்சிக் கோட்டைக் கதவுகள் மூடப்பட்டிருந்த போதிலும் பிக்ஷுவின் உதவியுடன் நகருக்குள் நுழைகிறான். நாவுக்கரசர் மடத்தைத் தேடிப் போகையில் ஒரு பல்லக்கில் மகா சிற்பி ஆயனரும் அவரது மகள் நடனக் கலையரசி சிவகாமியும் வருவதைக் காண்கிறான். மதம் பிடித்த யானை ஒன்று விரைந்து வர, அதன் மீது வேலை எறிந்து ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்றுகிறான். யானை திசை மாறிப் பரஞ்சோதியைத் துரத்திச் செல்கின்றது.

# சிவகாமியின் சபதம்

## மூன்றாம் அத்தியாயம்

## கடவுள் காப்பாற்றினார்!

மதங்கொண்ட யானையின் மீது வேலை எறிந்தால் அதனுடைய விளைவு என்னவாகும் என்பதை அந்த இளம் பிரயாணி நன்கு உணர்ந்திருந்தான். எனவே, யானை தன் பக்கம் திரும்பக் கண்டதும், பல்லக்கு இருந்த திசைக்கு எதிர்த்திசையில் வேகமாக ஓடத் தொடங்கினான். யானை தன்னுடைய பிரம்மாண்டமான தேகத்தை முழுதும் திருப்புவதற்குள்ளே அவன் வெகுதூரம் ஓடி விட்டான். ஓடிய வண்ணமே திரும்பிப் பார்த்தபோது, யானை வீறிட்டுக்கொண்டு தன்னை நோக்கி விரைந்து வருவதைக் கண்டான். உடனே அங்கே காணப்பட்ட ஒரு சந்தில் திரும்பி ஓடத் தொடங்கினான். சற்று நேரம் திரும்பிப் பார்க்காமல் ஓடிய பிறகு மறுபடியும் ஒரு விசாலமான பெரிய வீதியில் தான் வந்திருப்பதைக் கண்டான். தனக்கு எதிரே ஐந்தாறு யானைகள் மாவுத்தர்களால் ஏவப்பட்டு விரைவாக வந்துகொண்டிருப்பதைப் பார்த்துத் தெருவின் ஓரத்தில் ஒதுங்கினான். மதயானையைக் கட்டுக்கு உட்படுத்தி அழைத்துச் செல்வதற்காகவே இந்த யானைகள் போகின்றன என்பதை ஊகித்துணர்ந்ததும் ஓடுவதை நிறுத்தி மெதுவாக நடக்கலானான்.

**அமரர் கல்கி**

பரஞ்சோதிக்கு அப்போதுதான் தன் தேக நிலை பற்றிய நினைவு வந்தது. அவனுடைய நெஞ்சு 'படபட' வென்று அடித்துக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வியர்வையினால் சொட்ட நனைந்து போயிருந்தது.

ஏற்கெனவே, நாளெல்லாம் வழி நடந்ததனால் பரஞ்சோதி களைத்துப் போயிருந்தான். இப்போது அதிவேகமாக ஓடி வந்ததனால் அவனுடைய களைப்பு மிகுதியாகியிருந்தது. கால்கள் தளர்ந்து தடுமாறின. உள்ளத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியினாலும், பரபரப்பினாலும், தேகம் நடுங்கிற்று. சற்று உட்கார்ந்து இளைப்பாறாமல் மேலே நடக்க முடியாது என்று தோன்றியது. வீதி ஓரத்தில் காணப்பட்ட சுமைதாங்கியண்டை சென்று அதன் மேல் உட்கார்ந்தான்.

வானத்தில் பூரண சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. இளந் தென்றல் மெல்ல மெல்ல வந்து களைத்துப் போயிருந்த அவனுடைய தேகத்தின்



மீது வீசி இளைப்பாற்றியது.

உடம்பின் களைப்பு நீங்க நீங்க உள்ளம் சிந்தனை செய்யத் தொடங்கியது. "நாம் வந்த காரியம் என்ன? செய்த காரியம் என்ன?" என்று எண்ணியபோது, பரஞ்சோதிக்கே வியப்பாயிருந்தது. அந்த மத யானையின் மேல் வேலை எறியும்படியாக அந்தச் சமயம் தனக்குத் தோன்றிய காரணம் என்ன? அதனிடம் சிக்கிக் கொண்டிருந்தால், தன்னுடைய கதி என்னவாகியிருக்கும்? – தன்னிடம் உயிரையே வைத்திருக்கும் தன் அருமை அன்னையை மறுபடியும் பார்க்க முடியாமலே போயிருக்குமல்லவா?

சிவிகையில் வீற்றிருந்த இளம் பெண்ணின் முகமும் பெரியவரின் முகமும் பரஞ்சோதியின் மனக்கண் முன்பு தோன்றின. ஆம்; மதயானையினால் அவர்களுக்கு ஆபத்து வராமலிருக்கும் பொருட்டே அந்தச் சமயம் அவன் வேலை எடுத்து வீசினான். அவர்கள் யாராயிருக்கலாம்? ஒருவேளை அரங்கேற்றம் தடைப்பட்டது குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்களே, – அந்தச் சிவகாமி அம்மைதானோ அந்த இளம்பெண்! பெரியவர் அவளுடைய தந்தை ஆயனராயிருக்குமோ?

இவ்விதம் சிந்தித்தவண்ணமாய்ப் பரஞ்சோதி, சுமைதாங்கியின் மேடை மீது சாய்ந்தான். அவனை அறியாமல் அவனுடைய கண்ணிமைகள் மூடிக்கொண்டன. நித்திராதேவி தன் மிருதுவான மந்திரக் கரங்களினால் அவனைத் தழுவலானாள்.

மின்னல் மின்னுகிற நேரத்தில் மத யானையின் மீது ஓர் இளம்பிள்ளை வேலை எறிந்ததையும், யானை திரும்பி அவனைத் துரத்திச் சென்றதையும், 'சிவிகையிலிருந்த பெரியவரும் இளம் பெண்ணும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த வாலிபனின் தீரமும் துணிச்சலும், அவர்களுக்குப் பெரும் வியப்பை உண்டு பண்ணின.

அந்தப் பிள்ளைக்கு அபாயம் நேராமல் இருக்க வேண்டுமேயென்று அவர்களுடைய உள்ளங்கள் துடித்தன.

அவனுக்கு என்ன நேர்ந்தது என்று தெரிந்து கொள்ளும் ஆவலினால் சிவிகைக்குள்ளிருந்து பரபரப்புடன் வெளியே வந்தார்கள்.

அந்தச் சமயம் அவ் விசாலமான வீதி, ஜன சூனியமாகக் காணப்பட்டது. ஓர் ஈ காக்கை அங்கே கிடையாது.

பல்லக்கிலிருந்து இறங்கிய மனிதர் அந்த இளம் பெண்ணின் முதுகில் கையை வைத்து அணைத்துக் கொண்டு அன்பு கனிந்த குரலில், "பயமாயிருக்கிறதா, சிவகாமி?" என்று கேட்டார்.

"இல்லவே இல்லை, அப்பா! பயமில்லை!" என்றாள் சிவகாமி.

பிறகு அவள், "நல்ல சமயத்தில் அந்த வாலிபன் மட்டும் வந்து யானையைத் திருப்பியிராவிட்டால் நம்முடைய கதி என்னவாகியிருக்கும்?" என்றாள்.

"பல்லக்கு சுக்கு நூறாகியிருக்கும்!" என்றார் தந்தை.

"ஐயோ!" என்றாள் அந்த இளம் பெண்.

"அதற்காகத்தான் சிவிகையைக் கீழே வைத்துவிட்டுச் சிவிகை தூக்கிகளை ஓட்டமெடுக்கச் சொன்னேன். நாமும் பக்கத்து வீட்டுக்குள் ஓடித் தப்பியிருக்கலாம். ஆனாலும் வந்த அபாயம் பெரிதுதான்!" என்றார் பெரியவர்.

நாலா புறமும் சிதறி ஓடிய ஜனங்கள் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒவ்வொருவராகத் திரும்பி வர ஆரம்பித்

தார்கள். வந்தவர்கள் எல்லாரும் அங்கு நிகழ்ந்தவைகளைப் பற்றி ஏக காலத்தில் பேச ஆரம்பிக்கவே, சற்று முன் நிசப்தம் குடிகொண்டிருந்த இடத்தில் 'கலகல'வென்ற பேச்சொலி எழுந்தது.

''ஆகா! ஆயனரும் அவர் மகளும் அல்லவா! நல்லவேளையாய்ப் போயிற்று! கடவுள்தான் காப்பாற்றினார்!'' என்று ஜனங்கள் பலவாறாகப் பேசிக் கொண்டு நின்றார்கள்.

கடவுள் காப்பாற்றினார் என்றாலும், அவர் அந்த வீர வாலிபனுடைய உருவத்தில் வந்தல்லவா காப்பாற்றினார்! அந்தப் பிள்ளை யாராயிருக்கும்? அவனுடைய கதி என்னவாயிற்று? - இதைப்



பற்றித்தான் ஆயனரும் அவருடைய மகளும் எண்ணமிட்டுக்கொண்டிருந் தார்கள். ஆனால் அந்த இளம் பிள்ளையைப் பற்றி அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கக்கூடியவர்கள் யாருமில்லை.

ஆயனர், யானை கடைசியாக நின்ற இடத்தின் அருகே சென்றார். அங்கே யானையின் காலில் மிதிபட்டு முறிந்து கிடந்த வேலைக் கையில் எடுத்துக்கொண்டார். இன்னும் சற்றுத் தூரத்தில் அவிழ்ந்து கிடந்த மூட்டையை அவர் கட்டி எடுத்துக் கொண்டு திரும்பிச் சிவிகையண்டை வந்தார். சிவகாமி அந்த முறிந்த வேலை வாங்கி வியப்புடன் நோக்கினாள்.

ஆயனார், ''சிவகாமி! இங்கே வீணாக நின்றுகொண்டிருப்பதில் பயனில்லை. நாம் போகலாம்; எல்லா



விவரங்களும் தானே நாளைக்குத் தெரிந்துவிடுகிறது'' என்றார்.

தந்தையும் மகளும் சிவிகைக்குள் ஏற உத்தேசித்த சமயத்தில், சற்றுத் தூரத்தில் குதிரைகள் அதிவேகமாக வரும் சப்தம் கேட்டுத் தயங்கி நின்றார்கள்.

நிலா வெளிச்சத்தில், முன்னால் இரண்டு வெண்புரவிகள் பாய்ந்து வருவதும், பின்னால் ஐந்தாறு குதிரைகள் தொடர்ந்து வருவதும் தெரிந்தன. முன்னால் வந்த குதிரைகளில் இரண்டு கம்பீர புருஷர்கள் ஏறி வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து குதிரைகளின் மீது வேல் பிடித்த வீரர்கள் காணப்பட்டனர்.

குதிரைகள் சிவிகைக்குப் பக்கத்தில் வந்து நின்றதும் ஜனங்கள் பயபக்தியுடன் சிறிது விலகிக் கொண்டார்கள்.

"மகேந்திர மகா பல்லவர் வாழ்க!'' "திரிபுவன சக்கரவர்த்தி வாழ்க!'' "குணபுர மகாராஜா வாழ்க!'' "குமார சக்கரவர்த்தி மாமல்லர் வாழ்க!'' என்ற கோஷங்கள் நாற்புறமும் எழுந்தன.

வெண் புரவிகளில் முன்னால் வந்தவர்கள் மகேந்திர சக்கரவர்த்தியும், அவருடைய ஏக புதல்வர் நரசிம்ம பல்லவருந்தான் என்பதை ஆயனரும், சிவகாமியும் உணர்ந்ததும் அவர்களுக்குப் பெரிதும் வியப்பு உண்டாயிற்று.

சிவகாமி ஆயனருக்குப் பின்னால் ஒதுங்கி நாணத்துடன் நின்றாள். அவளுடைய விசாலமான கரிய கண்கள் மகேந்திர சக்கரவர்த்திக்குப் பின்னால் குதிரை மீது வீற்றிருந்த குமார சக்கரவர்த்தியை நோக்கின.

மகேந்திர சக்கரவர்த்தி, "ஆயனரே! இது என்ன? நான் கேள்விப்பட்டது விபரீதமாக அல்லவா இருக்கிறது?'' என்று சொல்லிக் கொண்டே குதிரை மீதிருந்து இறங்கினார்.

"ஏகாம்பரர் அருளால் அபாயம் ஒன்றும் நேரவில்லை, பிரபு!'' என்றார் ஆயனார்.

"சிவகாமி ரொம்பவும் பயந்து போய்விட்டாளா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"சிவகாமி பயப்படவில்லை. இதையெல்லாம் அவள் ஏதோ வேடிக்கையென்று எண்ணிக்கொண்டிருக்கிறாள்!'' என்று ஆயனர் கூறி, அன்பு நிறைந்த கண்களால் தமக்குப் பின்னால் அடக்கத்துடன் நின்ற சிவகாமியைப் பார்த்தார்.

அப்போது சக்கரவர்த்தியும் அவளைப் பரிவுடன் நோக்கி, "சிவகாமி! ஏன் தலை குனிந்துகொண்டிருக்கிறாய்? அரங்கேற்றத்தின்போது நடுவில் போய்விட்டேனே என்று என் பேரில் மனஸ்தாபமா?'' என்றார்.

சிவகாமியின் முகத்தில் நாணத்துடன் கூடிய புன்னகை மலர்ந்தது. அவள் மௌனமாயிருந்தாள்.

அப்போது ஆயனர், "பல்லவேந்திரா! சிவகாமிக்கு அவ்வளவு தெரியாதா? ஏதோ மிகவும் முக்கியமான காரியமாதலால்தான் தாங்கள் நடுவில் எழுந்து போயிருக்க வேண்டும்...'' என்றார்.

"ஆமாம், ஆயனரே! ரொம்பவும் முக்கியமான காரியந்தான். எல்லாம் பிறகு விவரமாகச் சொல்லுகிறேன். மந்திராலோசனை முடிந்து வெளியில் வந்ததும் உங்களைப் பற்றி விசாரித்தேன். நீங்கள் புறப்பட்டு விட்டதாகத் தெரிந்தது. ஏன் இவ்வளவு அவசரமாகக் கிளம்பினீர்கள்?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"இராத்திரி வீடு போய்ச் சேர்ந்தால்தானே காலையில் என் வேலையைத் தொடங்கலாம்? ஒருநாள் என்றால், ஒருநாள் வீணாகப் போக வேண்டாமென்றுதான் இன்றே புறப்பட்டேன், பிரபு!''

"ஆமாம்; உமது தெய்வீகச் சிற்பக்

கலையை விட்டுவிட்டு உம்மால் ஒரு நாள் கூட இருக்க முடியாதுதான். இப்போதும் இராத்திரியே போவதாகத்தான் உத்தேசமா?''

''ஆம், பல்லவேந்திரா! பட்டப் பகலைப் போல் நிலா எரிகிறது. இரவு போய்விடுவதே சௌகரியம்.''

''இந்த வெண்ணிலாவைப் பார்த்தால் எனக்குக் கூட உம்முடன் வர வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் அது முடியாத காரியம். நாளை அல்லது மறுநாள் வருகிறேன்'' என்று கூறிச் சக்கரவர்த்தி திரும்பிப் பார்த்தார்.

அப்போது சக்கரவர்த்திக்குப் பின்னால் இன்னொரு வெண்புரவியின் மேலிருந்த நரசிம்மவர்மர் வெகு லாகவத்துடன் குதிரை மேலிருந்து கீழே குதித்துச் சக்கரவர்த்தியின் பக்கத்தில் வந்து, ''அப்பா! யானை மீது வேல் எறிந்த வாலிபனைப் பற்றி விசாரிக்கவில்லையே?'' என்று கூறிவிட்டு, ஆயனரைப் பார்த்து, ''அந்த வாலிபன் யார்? அவன் எங்கே சென்றான்? உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டார்.

''அதுதான் தெரியவில்லை. வேலை எறிந்ததும் அவன் மின்னலைப் போல் மறைந்துவிட்டான். ஆனால், அப்படி மறைந்ததனாலேயே உயிர் தப்பிப் பிழைத்தான். தேசாந்தரம் வந்த பிள்ளையாகத் தோன்றியது'' என்றார் ஆயனர்.

குமார சக்கரவர்த்தி, ஆயனருடன் பேசிக்கொண்டிருக்கையில் அவருடைய கண்கள் மட்டும் ஆயனருக்குப் பின்னால் இருந்த சிவகாமியின் மீது நின்றன.

நரசிம்மவர்மர் சற்றுத் தூரத்தில் குதிரை மீதிருந்தபோது அவரை ஏறிட்டுத் தீவிர நோக்குடன் பார்த்த சிவகாமியோ இப்போது அவர் பக்கமே பார்க்காமல் பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தரையில் அவள் அருகில், சற்று முன்னால் அவள் கையிலிருந்து நழுவிய முறிந்த வேல் கிடந்தது.

அதைப் பார்த்த நரசிம்மவர்மர், ''சிவகாமி! இது என்ன?'' என்று கேட்டுக்கொண்டே அவள் அருகில் சென்றார். சிவகாமி சிறிது பின்வாங்கி, முறிந்த வேலைத் தரையிலிருந்து எடுத்து அவர் பக்கம் நீட்டினாள். அதை நரசிம்மவர்மர் வாங்கிக் கொண்டபோது, அவருடைய கை விரல்கள் சிவகாமியின் விரல்களைத் தீண்டியிருக்க வேண்டும். தேள் கொட்டியவர்களைப் போல் அவர்கள் அவசரமாக விலகிக் கொண்டதிலிருந்து இதை ஊகிக்கக் கூடியதாயிருந்தது.

நரசிம்மவர்மர் தம் தேகத்தில் ஏற்பட்ட படபடப்பை ஒருவாறு சமாளித்து அடக்கிக்கொண்டு, ஆயனரைப் பார்த்து, ''உங்களை மத யானையின் கோபத்திலிருந்து காப்பாற்றியது இந்த வேல்தானா, ஆயனரே?'' என்று கேட்டார்.

''ஆமாம், பல்லவ குமாரா!'' என்று ஆயனர் மேலும் ஏதோ சொல்லுவதற்குள் மாமல்லர் தந்தையைப் பார்த்து, ''அப்பா! இந்த வேலுக்கு உடையவனைக் கட்டாயம் கண்டுபிடிக்க வேண்டும். அவன் நல்லசமயத்தில் இத்தகைய வீரச் செயலைப் புரிந்திராவிட்டால், பல்லவ சாம்ராஜ்யத்தின் மகா சிற்பியை அல்லவா இந்நேரம் இழந்திருப்போம்?'' என்றார்.

அதற்குச் சக்கரவர்த்தி, ''மகா சிற்பியை மட்டும்தானா? பல்லவ ராஜ்யத்தின் தலை சிறந்த கலைவாணியையும் இழந்திருப்போம்! அந்த வீரனைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியந்தான். இவர்கள் இப்போது புறப்பட்டுச் செல்லட்டும். ஏற்கெனவே நேரம் அதிகமாகி விட்டது!'' என்று சொல்லி விட்டுச் சிவகாமியைப் பார்த்து, ''குழந்தாய்! உன்னுடைய ஆட்டம் இன்று அற்புதமா

யிருந்தது. முழுமையும் பார்க்கத்தான் முடியாமல் போயிற்று" என்றார்.

பின்னர் அவள் தந்தையை நோக்கி, "ஆயனரே! உம்முடன் பேச வேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. சீக்கிரத்தில் மாமல்ல புரம் வருகிறேன். இப்போது ஜாக்கிர தையாய்ப் போய்ச் சேருங்கள்" என்று சொன்னார்.

அங்கே தாம் நிற்கும் வரையில் ஆயனரும் அவர் மகளும் பல்லக்கில் ஏற மாட்டார்கள் என்பதை அறிந்த சக்கரவர்த்தி விரைந்து சென்று குதிரையின் மேல் ஏறினார். நரசிம்ம வர்மரும் தம் குதிரை மீது ஏறிக் கொண்டார்.

குதிரைகள் புறப்படு முன் மகேந் திர பல்லவர் தமக்குப் பின்னால் நின்ற வீரர்களில் ஒருவனைக் சைகை யினால் கூப்பிட்டு, "அயலூரிலிருந்து புதிதாக வந்த இளைஞன் யாரா யிருந்தாலும் இன்றிரவு அவனைப் பிடித்து வைத்திருந்து நாளைக்கு அரண்மனைக்கு அழைத்து வர வேண்டும்; நகர்க்காப்புத் தலை வனுக்கு இந்தக் கட்டளையை உடனே தெரியப்படுத்து!" என்று ஆக்ஞாபித்தார்.

சக்கரவர்த்தியும் குமாரரும் அங் கிருந்து போனதும், ஆயனரும் சிவ காமியும் தங்கள் சிவிகையில் அமர்ந் தார்கள். காவலர் புடை சூழ, சிவிகை காஞ்சிக் கோட்டையின் கீழ் வாசலை நோக்கிச் சென்றது.

## நான்காம் அத்தியாயம்

# துர்ச்சகுனம்!

வீதி ஓரத்திலிருந்த சுமை தாங்கியின் மீது பரஞ் சோதி சாய்ந்து கண்ணை மூடிக் கால்நாழிகைகூட இராது. ஏதோ பேச்சுக் குரலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு கண் விழித்தான். தெருவல் யாரோ இவ்விதம் பேசிக்கொண்டு போனார்கள்:

"கோயில் யானைக்கு மதம் பிடித் தால் துர்ச்சகுனம் என்று சொல்லு கிறார்களே?"

"ஆமாம்; நாட்டுக்கு ஏதோ பெரிய விபரீதம் வரப் போகிறது!"

"யானைக்கு எப்படி மதம் பிடித்த தாம்?"

"யாருக்குத் தெரியும்? யாரோ அச லூரான் ஒருவன் யானையின் மேல் வேலை வீசி எறிந்தானாம். அதனால் யானைக்கு வெறிபிடித்து விட்டது என்று சொல்கிறார்கள்."

"ஆயனச் சிற்பியும் அவருடைய மகளும் பிழைத்தது புனர்ஜன்மம் என்கிறார்களே?"

"அப்படித்தான்; அரங்கேற்றம் நடு வில் நின்றது போதாதென்று இந்த ஆபத்து வேறே அவர்களுக்கு நேர்ந்தது."

அதற்கு மேல் பரஞ்சோதிக்கு அவர்கள் பேசியது கேட்கவில்லை. "வேலை எறிந்ததனால் யானைக்கு வெறி பிடித்து விட்டதாம்!" என்னும் பேச்சுக் காதில் விழுந்ததும், பரஞ் சோதியின் உள்ளம் திடுக்கிட்டது. அப்போது அவனுக்கு இன்னொரு விஷயமும் ஞாபகம் வந்தது. அவன் கொண்டு வந்திருந்த மூட்டையை நடுத்தெருவிலேயே போட்டு விட்டு அவன் ஓடி வந்துவிட்டான். நாவுக்கர சருக்கும் ஆயனச் சிற்பிக்கும் அவன் கொண்டு வந்திருந்த ஓலைகள் அந்த மூட்டையில் இருந்தன. இன்னும் அவனுடைய துணிமணிகளும், அவன் கொண்டு வந்திருந்த சொற்பப் பண



மும் மூட்டைக்குள்ளேதான் இருந்தன. அதை அவசியம் கண்டுபிடித்தாக வேண்டும். போட்ட இடத்திலேயே மூட்டை கிடைக்குமா? திக்குத் திசை புரியாத இந்தப் பெரிய நகரத்தில் அந்த இடத்தை மறுபடியும் கண்டுபிடிப்பது எப்படி?

பரஞ்சோதி சுமைதாங்கியிலிருந்து இறங்கி, தான் ஓடி வந்த வழி எது வாயிருக்குமென்று ஒருவாறு ஊகித்துக்கொண்டு, அந்தத் திசையை நோக்கி நடக்கத் தொடங்கினான். இதற்குள் வீதிகளில் ஜன நடமாட்டம் வெகுவாகக் குறைந்துபோயிருந்தது. வீட்டுக் கதவுகளையெல்லாம் சாத்தியாகிவிட்டது. வீதி விளக்குகளை அணைத்துவிட்டார்கள். நல்லவேளையாகப் பூரண சந்திரன் பால் போன்ற வெண்ணிலாவைப் பொழிந்து கொண்டிருந்தான். நிலா வெளிச்சத்தில் நாற்புறமும் கூர்மையாகப் பார்த்துக் கொண்டு பரஞ்சோதி வெகுநேரம் நடந்தான். எவ்வளவு நடந்தும், யானையைச் சந்தித்த இடத்தை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. மூட்டையையும் அவன் எங்கும் காணவில்லை.

நேரமாக ஆக, வீதிகளில் நிசப்தம் குடி கொண்டது. உச்சி வானத்தில் சந்திரனைப் பார்த்து அர்த்தராத்திரியாகி விட்டது என்பதைப் பரஞ்சோதி தெரிந்து கொண்டான். கால்கள் இனி நடக்க முடியாதபடி சோர்ந்து போயின. உடம்பை எங்கேயாவது கீழே போட்டால் போதும் என்று அவனுக்கு ஆகிவிட்டது. இனிமேல் மூட்டையைத் தேடுவதில் பயனில்லை. நாவுக்கரசர் மடத்துக்கு எப்படியாவது போய்ச் சேர்ந்தால் போதும்.

ஆனால், எப்படிப் போவது? வழி கேட்பதற்குக் கூட வீதிகளில் யாரையும் காணோம். லட்சக்கணக்கான ஜனங்கள் வாழ்ந்த அந்தப் பெரிய நகரத்தில் தான் மட்டும் தன்னந்தனியாக அலைவதை நினைத்தபோது பரஞ்சோதிக்கு எப்படியோ இருந்தது. இராத்திரியெல்லாம் இப்படியே அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதானோ? ஆயிரக்கணக்கான மாளிகைகளும், மண்டபங்களும், வீடுகளும் நிறைந்துள்ள இந்த நகரில் தனக்கு இரவில் தங்குவதற்கு இடம் கிடையாதா? - நல்லவேளையாக இதோ யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. பேச்சுக் குரல் கேட்கிறது. அவர்களை விசாரித்துப் பார்க்கலாம்.

ஒரு வீதியின் முடுக்கில் இரண்டு பேர் பேசிக்கொண்டு வந்தார்கள். அவர்களைப் பார்த்தால் நகர்க் காவலர்கள் என்று தோன்றியது. பரஞ்சோதியைப் பார்த்ததும் அவர்களே நின்றார்கள்.

"யாரப்பா நீ? நடுராத்திரியில் எங்கே கிளம்பினாய்?'' என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

''நான் அயலூர், ஐயா...'' என்று பரஞ்சோதி சொல்ல அரம்பிப்பதற்குள், முதலில் பேசியவன், "அயலூர் என்றால், எந்த ஊர்?" என்றான்.

"சோழ தேசம்..."

"ஓகோ! உறையூரா?"

"இல்லை, ஐயா! கீழைச் சோழ நாட்டில் செங்காட்டங்குடி கிராமம். இன்று மாலைதான் காஞ்சிக்கு வந்து சேர்ந்தேன்."

"அப்படியா? இங்கு எதற்கு வந்தாய்?"

"நாவுக்கரசர் மடத்தில் தமிழ் பயில்வதற்காக வந்தேன்!"

"அப்படியானால், நள்ளிரவில் தெரு வீதியில் ஏன் அலைகிறாய்?"

"மடம் இருக்குமிடம் தெரியவில்லை. சாயங்காலத்திலிருந்து தேடிக் கொண்



டிருக்கிறேன்."

அந்தக் காவலர்கள் இருவரும் இலேசாகச் சிரித்த சிரிப்பில் பரிகாசம் தொனித்தது. அவர்களில் ஒருவன், "நாவுக்கரசர் மடத்துக்கு நீ கட்டாயம் போக வேண்டுமா?" என்று கேட்டான்.

"ஆம், ஐயா!"

"நாங்கள் அந்தப் பக்கந்தான் போகிறோம். நீ வந்தால் அழைத்துக் கொண்டு போய் விடுகிறோம்."

பரஞ்சோதி காவலர்களுக்கு வந்தனம் சொல்லிவிட்டு அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான். சற்று நேரத்துக்கெல்லாம் அவர்கள் உயரமான மதில் சுவர்களையுடைய ஒரு கட்டடத்தின் வாசலில் வந்து நின்றார்கள்.

"இதுதான் மடமா?" என்று கேட்டான் பரஞ்சோதி.

"ஆமாம்; பார்த்தால் இது மடமாகத் தோன்றவில்லையா?"

உண்மையில் பரஞ்சோதிக்கு அது மடமாகத் தோன்றவில்லை. அருகில் கோயில் எதையும் காணவில்லை. கட்டடத்தின் உயரமான சுவர்களும், வாசற் கதவில் பூட்டியிருந்த பெரிய பூட்டும் அவனுக்கு இன்னதென்று தெரியாத சந்தேகத்தை உண்டாக்கின.

அவனை அழைத்துப் போனவர்களில் ஒருவன் வாசற் கதவண்டை சென்று அங்கேயிருந்த காவலாளியிடம் ஏதோ சொன்னான்.

உடனே பூட்டு திறக்கப்பட்டது; கதவும் திறந்தது.

"வா தம்பி!"

நெஞ்சு 'திக் திக்'கென்று அடித்துக் கொள்ள, பரஞ்சோதி வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றான்.

இருபுறமும் உயரமான சுவர் எழுப்பிய குறுகிய சந்தின் வழியாக அவனை அழைத்துப் போனார்கள். ஓரிடத்தில் நின்றார்கள். அங்கிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது.

"இங்கே படுத்திரு. மடத்தில் எல்லோரும் தூங்குகிறார்கள். பொழுது விடிந்து பார்த்துக் கொள்ளலாம்" என்றான் ஒருவன்.

பரஞ்சோதி அந்த இருட்டறைக்குள் எட்டிப் பார்த்தான். கொஞ்சம் வைக்கோலும் ஒரு கோரைப் பாயும் கிடந்தன. ஒரு மூலையில் சட்டியில் தண்ணீர் வைத்திருந்தது.

திரும்பித் தன்னுடன் வந்த காவலர்களைப் பார்த்து, "இது மடந்தானா?" என்று கேட்டான்.

"ஆமாம், தம்பி! உனக்கு என்ன சந்தேகம்?" என்றான் காவலர்களில் ஒருவன்.

"இங்கிருக்க விருப்பம் இல்லாவிட்டால் வெளியே போய் விடு!" என்றான் இன்னொருவன்.

பரஞ்சோதிக்கு இருந்த களைப்பில் எப்படியாவது இராத்திரி படுத்துத் தூங்க இடம் கிடைத்தால் போதும் என்று இருந்தது.

"இல்லை, இங்கேயே நான் படுத்திருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அறைக்குள் நுழைந்தான்.

அப்போது அவனை அழைத்து வந்தவர்களில் ஒருவன், "தம்பி! இது மடந்தான். ஆனால், நாவுக்கரசர் மடமல்ல. மன்னர் மன்னரான மகேந்திர சக்கரவர்த்தியின் மடம்!" என்று சொல்லிக் கொண்டே கதவைச் சாத்தினான்.

அடுத்த கணம் அறைக்கதவைப் பூட்டும் சப்தம் கேட்டது!

(தொடரும்)



# ஜே ஜே

இந்த ஆண்டில் ஜனவரி மாதம் புதிதாகத் துவங்கப்பட்டது அரியலூர் மாவட்டம். பரப்பளவில் மிகச் சிறிய மாவட்டங்களில் இதுவும் ஒன்று. இதனை ஒரு மாவட்டமாக உருவாக்குவதற்கு முன்னர் அதற்கான ஆயத்தப்பணிகளுக்குத் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஐஏ.எஸ். அதிகாரியான ராகேஷ் குமார் யாதவ்தான் இப்பொழுது அரியலூர் மாவட்ட கலெக்டர். மக்களெல்லாம் 'ஜே' போடும் பாசத்துக்குரிய கலெக்டராக மாறியிருக்கிறார் இவர்... மக்களுக்கு அப்படியென்ன செய்திருக்கிறார்? என்பதை அறிய அரியலூர் மாவட்டத்தில் ரவுண்ட் விட்டோம்.



• ராகேஷ்குமார் யாதவ்

அரியலூரைச் சுற்றிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றது. முக்கிய சாலைகளும், வீதிகளும் விஸ்தாரமாகக் காட்சியளிக்கின்றது. பாதிக்கப்பட்டோர் தவிர ஏனைய பொதுமக்கள் அனைவருக்கும் கலெக்டரின் செயல்பாடுகளில் மிகுந்த திருப்தி!

அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு சிறிய கிராமம் கடுகூர். இந்தக் கிராமத்தின் ஏரிப் புறம்போக்கு நிலத்தில் சமுதாயக்கூடம் ஒன்று கட்டுவதற்கு முந்தைய ஆட்சியில், த.மா.கா எம்.எல்.ஏ ஏற்பாடுகள் செய்துவிட்டார். ஏரியைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அப்பொழுதே அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எதிர்ப்பை ஒதுக்கிவிட்டுக் கட்டடப் பணிகள் நடந்தன. தேர்தல் வரவும் பாதியில் நிறுத்தப்பட்டது. ஆட்சி மாறியவுடன் மீண்டும் அங்கு கட்டட வேலைகள் துவங்க, கடுகூர் கிராம மக்கள் கலெக்டரிடம் முறையிட்டனர்.

'ஏரிப் புறம்போக்கு நிலத்தில் அரசாங்கமே கட்டடம் கட்டினால், பொதுமக்கள் ஆக்கிரமிப்புச் செய்வதை எப்படித் தடுக்க முடியும்? அரசு எவ்வழியோ அவ்வழியே மக்கள் ஆகிவிடமாட்டார்களா?' என எண்ணிய கலெக்டர், கட்டிக் கொண்டிருந்த சமுதாயக்கூடத்தை இடித்துத் தள்ளிவிட்டு, வேறு இடத்தில் அதனைக் கட்ட உத்தரவிட்டார். அது விஷயமாக இதுவரை செலவாகியிருந்த இரண்டரை லட்ச ரூபாயை கட்டடம் கட்ட அனுமதி வழங்கிய பி.டி.ஓ.விடமிருந்து வசூல் பண்ணவும் உத்தரவிட்டதுடன், 'மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் கட்டடம் கட்ட ஏன் அனுமதி வழங்கினீர்கள்?' என ஆர்.டி.ஓ.க்கும் நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்டுள்ளார். கலெக்டரால் காப்பாற்றப்பட்டுள்ளது கடுகூர் கிராமத்து ஏரி!

கடந்த சட்டமன்றத் தேர்தலில் இந்த மாவட்டத்தின் மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழ்நாட்டிலேயே அதிகமான சதவிகிதத்தில் வாக்குப்பதிவு நடைபெற்றிருந்தது. அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் எழுபது சதவிகிதத்துக்கும் மேலே வாக்குகள் பதிவாகியிருந்தன. இத்தனைக்கும் ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் ஆகிய தொகுதிகளில் தேர்தல் வன்முறைகள் நடக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. தீவிரவாதக் குழுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்ற ஏரியா. மாவட்டக் கலெக்டரே பல இடங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு நடத்தி தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்ததால் எந்த பயமுமின்றி வாக்காளர்கள் பெருமளவில்

# கலெக்டர்!

திரண்டு வந்து வாக்களிக்க முடிந்ததாகப் பொதுமக்கள் இப்பொழுதும் நம்மிடம் சொல்கிறார்கள்.

மாவட்டம் முழுவதும் கடந்த ஆறு மாதங்களாக கள்ளச் சாராய விற்பனை அதிக அளவில் இருப்பதாகக் காவல் நிலையங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளன. நடவடிக்கைகள் சற்று மந்தமாக இருக்கவே, மாவட்டத்தின் பல இடங்களிலும் பொதுமக்கள் பல போராட்டங்களை நடத்தி இருக்கின்றார்கள். அதில் ஒரு கட்டமாக விக்கிரமங்கலம் காவல் நிலையத்தின் முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தி அதில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கைதாயினர். அதன் பின்னர் மேலப்பழலூரில் முந்நூறு பெண்கள் உட்பட ஐந்நூறு பேர் அந்தப் பகுதியில் நடைபெறும் கள்ளச் சாராய விற்பனையைக் கண்டித்துச் சாலை மறியல் செய்துள்ளார்கள். இந்த மறியல் போராட்டம் திருச்சி – அரியலூர் முக்கியச் சாலையில் நடைபெற்றதால் தொடர்ந்து இரண்டு மணி நேரம் போக்கு வரத்து பாதிக்கப்பட்டிருந்தது.



* மனுக்களுடன் பொதுமக்கள்



* அகற்றப்படும் ஆக்கிரமிப்புகள்

இவை அனைத்தும் கலெக்டரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அன்று மாலை தளவாய் கிராமத்தில் எரிந்து போன எண்பத்தைந்து வீடுகளைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லச் சென்றிருந்தார் கலெக்டர். திரும்பி வரும்போது தன்னுடன் வந்திருந்த அனைத்து அதிகாரிகள், காவல் துறையினரைப் போகச் சொல்லி விட்டுத் தனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த நிருபர்கள் காரை மட்டும் பின் தொடரச் சொல்லியுள்ளார். அங்கிருந்த எவருக்குமே கலெக்டர் எங்கு செல்கிறார்? எதற்குச் செல்கிறார்? என்பது தெரியவில்லை.

தமது காரை நேரே சிலுப்பனூர் கிராமத்திற்கு விடச் சொல்லிவிட்டு, அங்குச் சென்றவுடன் கிராம மக்களிடம் ஒரு முகவரியை விசாரித்துள்ளார். அந்த வீட்டின் முன் கார் போய் நின்றது. நேரே காரை விட்டிறங்கி அந்த வீட்டில் உள்ள இளவரசன் என்பவரை அழைத்து விசாரித்துள்ளார் கலெக்டர். அப்போது அவர் கள்ளச்சாராயம் விற்று வருவது தெரியவந்துள்ளது. அங்கு



" 'ஆக்ரா பேச்சு வார்த்தை' ஒரு டஜன் கொடுப்பா!"

"புரியலையே!"

"அதாம்ப்பா! புஸ் வாணம்! ஒரு டஜன் கொடு!"


- *தஞ்சை தாமு*

---

"உங்க மனைவிதான் சீரியல் பார்க்கறாங்க. கூடவே உன்னையும் எதுக்குப் பக்கத்துல உட்காரச் சொல்றாங்க?"

"அழும்போது ஆறுதல் சொல்லணுமாம்!"

- *கள்ளக்குறிச்சி வே.ஆறுமுகம்*



---

"சம்பந்தப்பட்ட துறை மினிஸ்டருக்கு 'டஸ்ட் அலர்ஜி' இருக்கிறது தெரிஞ்சதும், எதிர்க்கட்சித் தலைவரான எங்க தலைவருக்கு ஒரே குஷி..."

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"பழைய கேஸை எல்லாம் "தூசு தட்டி" எடுக்க மாட்டாரில்லே?"

- *புதுவண்டி ரவீந்திரன்*



கேன்களில் இருந்த சாராயத்தைக் கலெக்டர் பறிமுதல் செய்து, எங்கு தயாரிக்கப்படுகின்றன, விற்பனைக்கு எங்கெங்கு அனுப்பப்படுகின்றன போன்றவற்றை விசாரித்து அவற்றைத் தடுத்து நிறுத்த கடும் நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் திங்கட்கிழமை மட்டும் பொதுமக்கள் மனுநீதி நாள். இங்கு அப்படி இல்லை. கலெக்டர் தமது அலுவலக அறைக்கு வந்து அமரும் நாட்கள் எல்லாம் மனுநீதி நாளாக மாறியுள்ளன என்கிறார்கள் பொதுமக்கள். அவர்கள் தரும் புகார்கள் மற்றும் மனுக்கள் அடிப்படையில் அதன் உண்மைகளை உணர்ந்துகொண்டு உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் கலெக்டர். அதனால் காவல் நிலையம் சென்று தங்களது பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் பொதுமக்கள் பெரும்பாலோர் தற்போது கலெக்டர் அலுவலக அறையின் முன்பு புகார் மனுவுடன் நின்று கொண்டிருக்கிறார்கள்! பைசா செலவில்லாமல் சட்டத்திற்கு உட்பட்டும் முறையாகவும் நியாயமாகவும் தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைப்பதாகக் கூறுகிறார்கள்.

இத்தனை நிறைகளுடனும், சீரமைக்கப் பட வேண்டிய பேருந்து நிலையம் மற்றும் அரியலூர் மாவட்ட வளர்ச்சித் தேக்கம் போன்ற குறைகளுடனும் கலெக்டர் ராகேஷ் குமார் யாதவைச் சந்தித்தோம். "இங்கு இன்னும் நிர்வாக அளவில் பல அலுவலகங்கள் வர வேண்டி உள்ளது. குறிப்பாக மாவட்ட காவல்துறை அலுவலகம் இங்கு கொண்டு வரப்படவில்லை. மேலும் அரியலூர் தேர்வு நிலை பேரூராட்சியாக இருப்பதால் நிதித் தட்டுப்பாடும் இருந்து வருகின்றது. அரசிடமிருந்து மாவட்ட வளர்ச்சி நிதியைப் பெறுவதைப் பொறுத்தே மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும். நான் பொறுப்பு ஏற்றிருக்கும் கலெக்டர் பணி மீது நம்பிக்கை வைத்து பொதுமக்கள் என்னிடம் அளிக்கும் மனுக்களில் இருக்கும் உண்மை நிலையை ஆய்வு செய்து நியாயமாகவும் நேர்மையாகவும் பணிபுரிந்து வருகிறேன். அவ்வளவுதான்!" என்று மிகவும் அடக்கத்துடன் சொல்கிறார்.

கட்டுரை, படங்கள்:
**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**



# குதிரைக் கொடுமை!

பிராணிகள் விஷயம் என்றால் எத்தனை தீவிரமான அக்கறை காட்டுவார் மேனகா காந்தி என்பது தெரிந்த விஷயம்தான். அவர் அண்மையில் சாட்டையை எடுத்துக் கொண்டிருப்பது ரேஸ் குதிரைகளுக்காக. நம் நாட்டில், ரேஸ் குதிரைகளை மனிதாபிமானமில்லாமல் மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள் என்பது இவரது வாதம். இதற்கு ரேஸ் கிளப்கள், ரேஸ் குதிரை உரிமையாளர்கள், ஓட்டும் ஜாக்கிகள், பயிற்சியாளர்கள் என்று அனைத்து தரப்பினரையும் குற்றம் சாட்டுகிறார்.

அண்மையில், மேனகா காந்தி, ரேஸ் குதிரைகள் பற்றி ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டார். அதில் கண்டறியப்பட்ட விஷயங்கள் அவரைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டன. குதிரை ரேஸ்களில் ஏராளமான பணம் புழங்குவதால், பணம் சம்பாதிக்கும் நோக்கத்திலேயே அவர்கள் செயல்படுகின்றனர். வரி ஏய்ப்பு, பல வருடங்களுக்கு ரேஸ் கிளப்களுக்கு இலவசமாகத் தரப்பட்ட நிலங்களை முறைகேடாகப் பயன்படுத்துவது என்று ஆரம்பித்து, ஜெயிக்க வேண்டும் என்ற ஒரே வெறியுடன் ஜாக்கிகள், சாட்டையால் அடித்துக் குதிரைகளை விரட்டுவது, வயதாகிவிட்ட குதிரைகளைப் புறக்கணிப்பது வரை ஏகப்பட்ட விஷயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

குதிரைகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவது பற்றிய விஷயங்களை மட்டும் தானே கவனிக்க முடிவு செய்து, மற்ற விஷயங்களை சி.பி.ஐ. வசம் ஒப்படைத்துவிட்டார் மேனகா.

ரேஸில் ஓடி முடித்தவுடன் குதிரையின் உடலை எக்ஸ்ரே எடுத்தபோது, உடல் முழுக்க ஆங்காங்கே ரத்தம் கட்டிக் கொண்டிருப்பதும், சில மணி நேரத்தில் அந்தப் பகுதிகள் வீங்குவதும் கண்டறியப்பட்டுள்ளது. ஜாக்கிகள் குதிரைகளை வேகமாக ஓடச் செய்வதற்காக, மிருகத்தனமாக சாட்டையால் அடிக்கிறார்களாம். அவர்கள் பயன்படுத்தும் சாட்டைக்குள்ளே எலும்புகள் வைத்துத் தைக்கப்பட்டிருப்பதால், குதிரைகளுக்கு வெறும் சாட்டையால் அடிப்பதைவிட, இதில் வலி அதிகம் ஏற்படுகிறதாம்.



ஸ்டீராய்டுகள் ரேஸ் குதிரைகளுக்கு மருந்து என்ற அளவில் தேவைப்பட்டால் மட்டுமே தரப்பட வேண்டும். அதையும் பிராணிகள் நல மருத்துவர் மட்டுமே தரலாம். ஆனால் நடைமுறையில், கொட்டில் பராமரிப்பவர்கள் தொடங்கி ஜாக்கிகள் வரை அனைவரும் சர்வ சகஜமாக ஸ்டீராய்டுகளை அளவுக்கு மீறிக் கொடுத்து விடுகிறார்கள் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ரேஸ்களில் ஓடி ஓய்ந்துபோன வயசான குதிரைகள் விஷயம் இன்னும் பரிதாபமானது. அவற்றால் வருமானம் இனி கிடையாது என்பதால், அவற்றை மனிதாபிமானம் இல்லாமல் கட்டுத் தள்ளி விடுகிறார்கள். ரேஸில் ஏற்படும் விபத்துக்களால் ஊனமாகிவிடும் குதிரைகளுக்கும் இதே கதிதான். இதைவிடக் கொடூரமான விஷயம் ஒன்று உண்டு. வயதான ரேஸ் குதிரைகளை, கொட்டிலில் தனியாக அடைத்து, தீ வைத்து விடுவார்களாம். அது தீயில் கருகி செத்தவுடன், தீ விபத்தில் குதிரை இறந்துவிட்டதாகச் சொல்லி இன்ஷூரன்ஸிலிருந்து பணம் பெற்று விடுவார்களாம்.

அடக் கடவுளே!

- கௌதம் ராம்

**நவீன தமிழ்க் கவிதையுலகில், தனித்துவத்துடன் எழுதி வரும் கவிஞரும், காலச்சுவடு இலக்கிய இதழின் ஆசிரியருமான மனுஷ்யபுத்திரன், தமது வாழ்க்கை அனுபவங்களையொட்டிச் சந்தித்த சோதனைகளை, எப்படிச் சாதனைகளாய் மாற்றி அமைத்துக்கொண்டார் என்பதை மனம் விட்டுப் பகிர்ந்து கொள்கிறார்...**

நமது வெற்றியின் பின்னணியில் கைகொடுத்த பலரும், நம் வாழ்க்கையில் எங்கேயும் இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் இல்லாமல் நம் வாழ்க்கையில்லை. வாழ்க்கையை நான் இப்படித்தான் பார்க்கிறேன்.

ஒருமுறை என் கவிதை ஒன்றில் இவ்வாறு எழுதினேன்:

*"ஊழி வந்து குலைய வைக்கும்*
*என்று நாம் காத்திருப்போம்*
*புரட்டிப் போடுமே நம்மை*
*நம் காலடி மண்ணின்*
*பூகம்பங்கள்"*

இதைப் போன்றே என் வாழ்க்கைப் போக்கில் நிகழ்ந்த சிறு மாறுதல்கள்தான், என்னை

# காலடி மண்ணின் பூகம்



உருவாக்கியவையாக, சோதித்துப் பார்த்தவையாக இருந்திருக்கின்றன.

எவ்வளவோ வருடங்களுக்கு முன்னால் நிகழ்ந்தது என்றாலும், இப்போது நினைத்தாலும் அந்தச் சித்திரம் என் மனத்தில் வருகிறது : போலியோவின் பிடியில் சிக்கி, நடக்க முடியாமல் போன ஒரு சிறுவன், அந்தப் பழங்கால கிராமத்து வீட்டின் திண்ணையில் அமர்ந்திருக்கிறான். அவன் புழுதி பறக்க விளையாடும் குழந்தைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டும், சாலையைக் கடந்து செல்லும் மனிதர்களை எண்ணிக் கொண்டும் இருக்கிறான். அவனுக்கு எப்போதும் ஒரே சிந்தனைதான். இந்த வீதிக்கு அப்பால் என்ன இருக்கிறது? அங்கே ஊர் என்று சொல்லப்படுவதுதான் என்ன? கட்டடங்களுக்குப் பின்னால் சிறு கீற்றெனத் தெரியும் மலைகளின் முழுத் தோற்றம் எப்படியிருக்கும்? அவனது மனத்தில் கேள்விகள் இருந்தன. துயரம் இல்லை. தோழர்களை எப்படித் தன்னிடம் வரவழைக்க வேண்டுமென்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

போலியோ பாதிப்பை மீறி ஏழு வயதில் நான் பள்ளிக்குப் போனேன். எனது ஆசையாலும் பிடிவாதத்தாலும்தான் பள்ளியில் சேர்த்தார்கள். படிப்பின் மேல் உள்ள ஆசை என்பதைக் காட்டிலும், வேறு வீதிகளை, பள்ளிக்குச் செல்லும் பாதைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைதான் பிரதானமாக இருந்தது!

அப்பா தன்னுடைய சைக்கிளில் அழைத்துப் போய், பிறகு அழைத்து வருவார். அவர் வராத நாட்களில் சக வகுப்புத் தோழர்கள், என்னை முதுகில் சுமந்து கொண்டு வருவார்கள்.

ஐந்தாம் வகுப்பு வரைதான் பள்ளிக்குப் போனேன். பிறகு போகப் பிடிக்கவில்லை. காரணம், நான் மனரீதியான தொந்தரவுக்கு ஆளானேன். மற்றவர்களிடமிருந்து நாம் தனித்துத் தெரிகிறோம் என்பதை உணர்ந்து கொண்டதால் ஏற்பட்ட மனச்சிக்கல். இதற்கு ஒத்தடம் கொடுக்கும் மருந்தாக, புத்தகங்கள் எனக்குப் புதிய திசை வழிகளைத் திறந்து விட்டன. அப்போதே புத்தகம் படிக்கும் பழக்கம் என்னை வரித்துக் கொண்டது.

நிறைய துப்பறியும் கதைகள், மாயாஜாலக் கதைகள் படிப்பேன். சாகசங்களைப் பற்றிய ஆசை, தீமைகளைப் பற்றிய ஆர்வம் மனசு முழுக்க நிறைந்திருந்தது. சிறுவர் இதழ்களைத் தவிர, குமுதம், விகடன், கல்கி போன்ற வார இதழ்களையும் அப்பா எனக்காக வாங்கி வந்து குவிப்பார். புற உலகம் எனக்கு முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டவுடன், படிப்பது, சிந்திப்பது குறித்த, அக உலகத்தை நானே கட்டமைத்துக் கொண்டேன். அப்போதுதான் எழுதும் ஆசையும் வந்தது. எழுத்தாளனாவதுதான் என் பால்ய காலத்திலிருந்து தொடர்ந்து வரும் கனவு.

படிப்பு, எழுத்து சார்ந்து, உள்ளூர ஒரு பெரிய உலகத்தை நான் விரித்துக் கொண்

# வைரமுடைய நெஞ்சு வேண்டும்!

டாலும், புறஉலகில் மிகவும் நான் ஒடுங்கிப் போயிருந்ததால், தாழ்வுணர்ச்சி எனக்குள் ஏற்பட்டது. எல்லோரும் நம்மை விட மேலானவர்களாக இருக்கிறார்கள் என்றொரு நினைப்பு. வீட்டிற்கு அன்னியர்கள் வரும்போது அவர்கள் முன் வர மாட்டேன்.

• மனுஷ்யபுத்திரன்



# பங்கள்!

அவர்கள் எப்போது போவார்கள் என்று பதற்றத்துடன் காத்திருப்பேன். என்னுடைய உலகத்தைச் சேர்ந்த ஓரிருவர் தவிர யாரோடும் உறவுகள் இருந்ததில்லை.

**ப**த்தாண்டுகளுக்கு முன்பு என் சிநேகிதி லல்லியைச் சந்தித்தேன். அச் சந்திப்பே வெளி உலகத்திற்கான என் கதவுகளைத் திறந்து விட்டது. அவள்தான் என்னைக் கடலுக்கும், நதிகளுக்கும் அழைத்துச் செல்லும் வழிகளைக் கண்டுபிடித்தாள். பயணம் என்ற ஒன்று முதன் முதலாக வாழ்வில் சாத்தியப்பட்டது. நிறைய மனிதர்களைச் சந்தித்தேன். மனிதர்களைப் பற்றிய தயக்கமும் கூச்சமும் விலகத் தொடங்கியது. இங்கே மனிதர்கள் என்று குறிப்பிடும் போது, பெண்களை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். எனது தாழ்வுணர்ச்சி, பெண்களைக் கண்டதும் உச்சத்திற்குச் சென்று விடும். காரணம் பெண்களால், நேசிக்கப்படாதவனாக, நட்பு கொள்ளப்படாதவனாக இருப்பேன் என்ற கற்பனையால் அவர்களிடம் சகஜமாய்ப் பழக முடியாதவனாக இருந்திருக்கிறேன். எல்லாம் தெளிவற்ற மனத்தின், வீணான கற்பனைகள்.

பின்னர் வேறொரு காலம் வந்தது. சிநேகிதிகளோடு மட்டும்தான் இயல்பாக இருக்க முடியுமோ என்று எண்ணும்படியான காலம்! அவ்வளவு அருமையான பெண்களைச் சந்தித்தேன். நான் வருந்தும்படியாகவோ, இழக்கும்படியாகவோ எதுவும் நடந்து விடவில்லை என அவர்கள் உணர்த்தினர். நண்பர்களின் பொறாமையினைப் பெற்ற தருணங்களும் இதில் இருக்கின்றன!

**எ**னது கல்வியைப் பற்றி முன்னே குறிப்பிட்டேன் அல்லவா, பள்ளிப் படிப்பை, பாதியில் விட்டு விட்டாலும், தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்திருக்கிறது. பத்திரிகைகளில் வந்த விளம்பரம் பார்த்து, எட்டாம், பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகளைத் தனியே எழுதினேன்.



"என்ன உங்க சொந்த மாமாவைத் தூரத்துச் சொந்தம்னு சொல்றீங்க?"
"பின்னே, அமெரிக்கால இருக்காரே..."
— வந்தவாசி பா. ஜெயக்குமார்

தனியே முயன்றபோது, எனக்குக் 'கணிதம்' பெரும் சவாலாக இருந்தது. அன்று டியூஷன் வைத்துக் கொள்வது எல்லாம் நினைத்துக் கூட பார்க்க முடியாத விஷயம். மூன்று சக்கர சைக்கிள் ஓட்டிப் போகவும் மிகவும் கூச்சமாக இருக்கும். படிப்பில் எப்படியும் வென்று விடுவது என்ற வெறியில், கணிதம், ஆங்கில இலக்கணம் போன்ற பாடங்களை அஞ்சல் வழியில் கற்றுக் கொண்டேன்.

வெற்றி கிடைத்தது. பின்னர் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் மூலம் எம்.ஏ. வரலாறு எழுதித் தேர்ச்சி பெற்றேன். ஆனால் அதெல்லாம் ஒரு படிப்பாகவே எனக்குத் தோன்றவில்லை. கல்லூரிக்குச் சென்று வரும் எங்கள் ஊர்ப் பையன்களைப் பார்க்கும்போதெல்லாம், ஒரு பருவத்தை இழந்து விட்டது போலிருக்கும். திருநெல்வேலியில் நான் இருந்த நாட்களில் பல்கலைக் கழகத்தில் நேரடியாகச் சேர்ந்து படித்தால் என்னவென்று தோன்றியது. திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் படித்த என்னை, முறையான படிப்பில் சேர்த்துக் கொள்வார்களா? என்பதும் கேள்விக் குறியாக இருந்தது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. தொடர்பியல் படிப்பதற்காக விண்ணப்பித்தேன். நுழைவுத் தேர்வில் நானும், பின்னர் எனது நெருங்கிய நண்பனாகி விட்ட செந்தில்குமாரும் முதலாவதாக வந்தோம். அந்த இரண்டாண்டுகள் என் வாழ்வில் பல அடிப்படையான மாறுதல்களைக் கொண்டு வந்தன. அதுவரை வெளியே செல்வதற்கு, யாரையேனும் சார்ந்திருந்த நான், முதன் முதலாகத் தனியே எனது வண்டியில் சென்று வர ஆரம்பித்தேன்.

பல்கலைக் கழகத்தில் நான் அதுவரை சந்தித்திராத உறவுச் சிக்கல்கள் இருந்தன. என்னைவிட வயதில் குறைந்த மாணவர்கள் எனக்கு நண்பர்கள் ஆனார்கள். பருவ கால விளையாட்டுத்தனங்களை இழந்து விட்ட நான், கல்லூரியில் இருபது வயது இளைஞனாய், முழு உற்சாகத்தோடு வலம்வர காரணமாக இருந்தது இந்த நண்பர்கள்தான்.

கல்லூரியில் சேர்ந்து படிக்கச் சென்ற போது ('97) காலச்சுவடு ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனது புத்தகங்கள் வெளிவந்திருந்தன. பிரபல பத்திரிகைகளில் புகைப்படத்தோடு எனது படைப்புகள் இடம் பெற்று வந்தன. இதெல்லாம் எனது தகுதிகள் என்று நினைத்துக் கொண்டேன். அல்லது இதன் காரணமாக எனக்கு ஒரு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று உள்ளூர எதிர்பார்த்தேன். ஆனால் எனது எதிர்பார்ப்புக்கு மாறான சூழலைக் கண்டேன். நான் காலச்சுவடு ஆசிரியர் என்பதோ, கவிதை எழுதுவேன் என்பதோ சக மாணவர்களுக்கு முக்கியமாக இருக்கவில்லை. படிப்பிலும் நான் புத்திசாலியான ஆள் இல்லை! ஆனால் அவர்களிடமிருந்து நான் விலகி வெளியே இருக்கிறேன் என்ற உணர்வு அவர்களைத் துன்புறுத்தியது. அந்த வட்டத்துக்குள் ஏற்கப்படாததால், மிகுந்த பதற்றமும், சோர்வுமாக எத்தனையோ நாட்கள் வீடு திரும்பியிருக்கிறேன்.

பல்கலைக் கழகத்தை விட்டு வரும் போது கசப்பும், ஏமாற்றமும் கவிந்திருந்தன. ஆனால் இந்த மூன்றாண்டு இடைவெளியில் யோசிக்கும் போது, அங்கே கிடைத்த நண்பர்கள், என்பொருட்டு அவர்கள் மேற்கொண்ட சிரமங்கள், நட்பின் இதம் கவிந்த தருணங்களாக நினைவுக்கு வருகின்றன. ஆசிரியர்களைப் பற்றிய கசப்புகள் கூட கரைந்து அவர்கள் என்னைப் பெருந்தன்மையுடன் சகித்துக் கொண்ட தருணங்களும், எனது வசதி கருதி அவர்கள் அளித்த சிறு சலுகைகளும் முக்கியமாக இருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் தன்னை முக்கியமானவனாக நினைத்துக் கொள்வது எவ்வளவு பெரிய அபத்தம் என்பதைக் கற்றுக் கொண்டேன்.

அதுவரை என்னுள் அத்தகைய பிம்பத்தை உருவாக்கிய நண்பர்களை மட்டுமே சந்தித்திருந்தேன். ஆனால் கல்லூரி உலகில் வேறு மதிப்பீடுகளோடு மோதி எனது எல்லா சுய பிம்பங்களும் கலைந்து விட்டன. அது எனக்கு மிகப் பெரிய விடுதலையும் கூட.

இந்த வகையில் கல்லூரி வாழ்க்கை எனக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. அங்கே நான் பயின்ற துறை, மேல்தளத்தில் இருந்தது. தினமும் இருபத்தைந்து படிகள் மெதுவாக ஏறி இறங்குவேன். அது எனது உடல்சார்ந்த எல்லாத் தயக்கங்களையும் போக்கடித்து விட்டது. மறைக்க இடமில்லாத போது மறைக்க ஒன்றுமில்லாமலும் போகிறது அல்லவா!

தொகுப்பு : **ஜெயந்தன்**
படங்கள் : **ஜரிஸ்**

எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

# P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017. PH: 4344442, 4327764

TUESDAY HOLIDAY (10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

**P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-**

| நட்சத்திரம் | ராசி | ராசிக்கேற்றகல் | கல்லின் எடை | வெள்ளி மோதிரம் விலை | இன்சூர் தபால் செலவு |
|---|---|---|---|---|---|
| அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம் முடிய | மேஷம் | பவழம் | 2 CARAT | 400/- | 50/- |
| கார்த்திகை 2-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 2ம் பாதம் முடிய | ரிஷபம் | வைரம் | 5 CENT | 2250/- | 200/- |
| மிருகசீரிசம் 3-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் முடிய | மிதுனம் | மரகதபச்சை | 20 CENT | 400/- | 50/- |
| புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய | கடகம் | முத்து | 2 CARAT | 400/- | 50/- |
| மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய | சிம்மம் | மாணிக்கம் | 20 CENT | 400/- | 50/- |
| உத்திரம் 2ம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய | கன்னி | மரகத பச்சை | 20 CENT | 400/- | 50/- |
| சித்திரை 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ம் பாதம் முடிய | துலாம் | வைரம் | 5 CENT | 2250/- | 200/- |
| விசாகம் 4ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய | விருச்சிகம் | பவழம் | 2 CARAT | 400/- | 50/- |
| மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய | தனுசு | புஷ்பராகம் | 1 CARAT | 400/- | 50/- |
| உத்திராடம் 2ம் பாதம், திருவோணம் அவிட்டம் 2-ம் பாதம் முடிய | மகரம் | நீலம் | 20 CENT | 400/- | 50/- |
| அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ம் பாதம் முடிய | கும்பம் | நீலம் | 20 CENT | 400/- | 50/- |
| பூரட்டாதி 4ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய | மீனம் | புஷ்பராகம் | 1 CARAT | 400/- | 50/- |
| தனுசு, மீன ராசிக்காரர்கள் கனக புஷ்பராக மோதிரமும் அணியலாம் | | | 50 CENT | 1000/- | 100/- |
| ராகு, கோமேதகம் | | | 50 CENT | 400/- | 50/- |
| கேது, வைடூரியம் | | | 20 CENT | 400/- | 50/- |
| அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் | | | 2 CARAT | 400/- | 50/- |

* நவரத்தினம் மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது. * WE ACCEPT MASTER CARD/VISA CARDS

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் மோதிரம் ரூ. 400/- கார்னெட் மோதிரம் அணிந்தால் செல்வ வளம் பெருகும். வியாபாரம், படிப்பு, ஞாபக சக்தி அதிகரிக்கும்.

குறிப்பு : புஷ்பராகம், வைரம், நவரத்தினம், ஆகிய மோதிரங்கள் வெள்ளியிலும், தங்கத்திலும் அணியலாம்.

மீதி அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் வெள்ளியில் அணிய வேண்டும். வெள்ளியில் அணிந்தால் பலன் அதிகம். மேற்படி ராசிக்கல் மோதிரம் நம்பிக்கையுடன் அணிந்து முயற்சி செய்தால், கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, வியாபாரம், அனைத்திலும் 100 சதவீத வெற்றி கிடைக்கும்.

* எங்களிடம் நியூமராலஜி படியும் கல் மோதிரங்கள் கிடைக்கும் * திருக்கணித பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் ரூ. 50/-

**குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.**

முகவரி தெளிவாக எழுதவும். (எமது சிறப்புப் பேட்டியை விஜய் டி.வி.யில் சனிக்கிழமைதோறும் காலை 8.00 மணிக்கு, ஜெயா டிவியில்வியாழக்கிழமை 5.30 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

ADVT

# பாஸ்கர் சக்தி

சரவணனும், சகாக்களும் மீண்டும் ஒருமுறை அந்த வீட்டை ஒரு புதிய பார்வையுடன் பார்த்தனர். ஒரு கோணத்தில் அது கைவிடப்பட்ட குழந்தைபோல் காட்சி தந்தது. இற்றுப் போன தாழ்ப்பாள்களும், வெளிறிப்போனச் சுவர்களுமாய்ச் சில ஓடுகள் உதிர்ந்து வீட்டின் முன்பு கிடந்தன. அணில்கள் ஏகத்துக்கும் 'இந்த வீடு எங்களுடையது' என்பது போல் சர்வ சுதந்திரத்துடன் அங்குமிங்கும் திரிந்தன. முன்தினம் பெய்திருந்த மழையின் ஈர வாசனை அந்த வீட்டின் சுற்றுச் சுவரைப் பிடித்து எட்டிப் பார்க்கையில் சற்று வித்தியாசமாக மூக்கில் நிரடியது.

“பூட்டியே கிடந்தா வீட்ல இப்படித்தான் வாடை அடிக்குமோ?” என்று கேட்டான் மணி. சரவணன் பதில் சொல்லவில்லை. இந்த வீட்டைப் பார்க்கையில் பயமாயில்லை. பாவமாய்த்தானிருக்கிறது. ஏன் அப்படிச் சொன்னான் அந்தக் குறிகாரன்?

“என்னடா சரவணா, அந்தாளு சொன்னதைக் கேட்டு ஒரு மாதிரி ஆயிட்ட” என்றான் மணி.

‘‘ஆமா... என்னமோ சாபம் அது இதுன்னு பயமுறுத்துறானே....”

‘‘அது அவன் தொழில் சரவணா... அவனைப் பாத்து நீ பயந்தியானாத்தான் அவன் தொழில் நடக்கும்...’’

அவர்கள் திரும்பி நடந்தார்கள். இருட்டு அதிகமாகி விட்டது. சரவணன் திரும்பிப் பார்த்தான்.. மைதானம். அதனைத் தாண்டி ஒரு பழைய ஓவியம் போன்ற அழகுடன் தெரிந்தது வீடு. இரவின் விளிம்பு பூசியிருந்த சாம்பல் வர்ணத்தால் பீடிக்கப்பட்டு, பார்த்தவுடன் மனதிலொரு வெறுமையை நிரப்புவதாக அந்த வீட்டின் தோற்றம் இருந்தது. ஏதோ ஒரு சங்கடம் சரவணனிடத்தில் தோன்றியது.

வீரையன் சைக்கிளில் வந்தான். எதிர்த்தாற்போல் மணியும், சரவணனும் மட்டும் வந்தார்கள்.

“என்னங்கடா? மத்த ரெண்டுபேத்தையும் காணோம்?”

மணி, “அவங்க ரெண்டு பேரும் ஓடைப் பக்கம் போயிட்டு லேட்டா வர்றோம்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க” என்றான்.

வீரையன், ‘‘அப்படியா?’’ என்று சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு, சுருட்டிய வேட்டியை நிரடி பிடி எடுத்து பற்ற வைத்துக் கொண்டான்.

‘‘கொஞ்ச நேரம் பாலத்துல உக்காரலாமா?’’ பதிலை எதிர்பாராமல் பாலத்தினை அணுகி அதில் அமர்ந்து கொண்டான் வீரையன்.

வீரையன் இந்த இளைஞர்களுக்கு எல்லாம் மிகவும் சீனியர். ஏழெட்டு வயது பெரியவன். பந்தல் காண்ட்ராக்ட், டிராக்டரில் மண் லோடு அடிப்பது என்று குழப்பமாக பலப் பல தொழில்களைச் செய்து வந்தான். இப்போது அவன் பார்ப்



# புறம் வீடு

பது எத்தனையாவதோ ஒரு தொழில்! முதன்முதலில் டெய்லராக அறிமுகமானான். பலவித துணிகளைத் தனக்குத் தைக்கத் தெரியும் என்று சொல்லியபடி ஊரில் கடை திறந்தான். அவன் கடை திறந்த வைபவம் மிகவும் அமர்க்களமானது. அந்தச் சமயத்தில் சரவணன் அண்ட் கோ ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தார்கள். ப்ளஸ் டூ. வீரையன் சின்ன வயசில் வீட்டை விட்டு ஓடிப்போய்த் திரும்பி வந்து, கையில் சற்றே சில்லரையுடன் சிங்கப்பூர் கைலியுடன் ஊருக்குள் உலாத்தினான்.

அப்போதுதான் பம்பாயிலிருந்து வந்திருக்கிறான். "பம்பாயில் ஒரு மிகப் பெரிய டெய்லர். அவரிடம்தான் அமிதாப்பச்சனும், ரிஷிகபூரும் துணி தைப்பார்களாம். எந்த ரிஷிகபூர்? அட சின்னப் பயல்களா... நீங்க 'பாபி' படம் பாக்கலையா! முயல்காதுக் காலர் வச்சுக்கிட்டு டிம்பிள் கபாடியாவோட 'ஹம் தும்'னு பாடுவாரே அந்தாளுதான். அந்த ரிஷி கபூர் எல்லாம் பேண்ட் சட்டை தைச்சுக்கிற டெய்லர்தான் வீரையனாகிய எனக்கும் டெய்லரிங் சொல்லிக் கொடுத்த குரு."

சரவணன் அண்ட் பார்ட்டி இதைக் கேட்டு புல்லரித்துப் போனார்கள்... வீரையன் மேலும் சொன்னான்.

"பம்பாய்ல ஏகப்பட்ட சம்பாத்யம். செல 'வழிச்சுத் தீராது. அம்புட்டுச் செலவழிச்சை சும்மாயிருக்குமா? வசமா ஒரு தொழில் பண்ணனுமே... என்று சொல்லியபடியே கோவிந்தசாமியின் வீட்டை ஒட்டிய திண்ணை ரூமை ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து வாங்கி, டெய்லர் கடையாக மாற்றினான். 'சூட்லுக் டெய்லர்ஸ்'னு பேரு வக்கிறதா, 'பாம்பே டெய்லரா?' என்று இரு நாட்கள் தீவிர நள்ளிரவு யோசனைக்குப் பிறகு தொழில் கற்ற மண்ணை விட்டுத் தராமல் 'பாம்பே டெய்லர்ஸ்' என்றே பெயர் சூட்டினான். சின்னப் பட்டியும், பாம்பேயும் இவ்வாறு வீரையன் புண்ணியத்தால் ஒரு புள்ளியில் இணைந்தன.



டெய்லர் கடை போட்டவன் முதலில் தையல் மிஷின் வாங்குவதுதானே இயல்பு? ஆனால் வீரையன் வாங்கியது முதலில் ஒரு டேப் ரிக்கார்டர். அதிலிருந்து வெளிவரும் இசை, தெருக்களில் அதிர வேண்டும் என்பதற்காக ஆசாரியிடம் சொல்லி பலா மரப் பலகையில் இடுப்புயரத்துக்கு இரண்டு ஸ்பீக்கர்களைச் செய்தான். டவுனுக்கு சரவணன் கோஷ்டியைக் கூட்டிப்போய் எல்லோருமாக முட்டை புரோட்டா தின்று விட்டு கேஸட்டுகளும், கூட்டிங் டேபிளு மாகத் திரும்பி வந்தார்கள்.

பம்பாயிலிருந்து வந்த வசீகரமான இளைஞன், நட்சத்திர தையல்காரரின் சீடன், தொழிலுக்கும் முன்னதாக இசை யெனும் இன்ப வெள்ளத்தில் நீந்த எண்ணி இடது கையால் காசை விட்டெறிந்து கேஸட்டுகளை வாங்குகிற வீரையனுக்குச் சரவணன் வகையறா மயங்கிப் போனதில் ஆச்சர்யமில்லை. அவர்கள் இவனது டெய்லர் கடைதான் இனி நமது வேடந் தாங்கல் என்று முடிவெடுத்து விட்டார்கள்.

கடை திறப்பதற்கு நாலு நாட்களுக்கு முன்னாலிருந்தே வீரையனின் கடையில் பாட்டுக் கேட்க ஆரம்பித்து விட்டது.

ஒரு நாள் பெருமாயிப் பாட்டி சரவண னைத் தேடி வந்து விட்டாள். இடி இடிக்கிற மாதிரி ஸ்பீக்கர்கள் அலறிக் கொண்டி ருந்தன.

''ஏண்டா ராக மகனே(வீரையன்) மொதல்ல இந்தச் சனியனை நிப்பாட்றா.''

வீரையன் டேப்ரிகார்டரை அணைத் தான். "என்ன பாட்டி?"

''ஏண்டா துணி தைக்கிற கடை வச்சிருக்கியா? இல்ல சடங்கு, காதுகுத்துக்கு ரேடியோப் போடற செட்டு வச்சிருக்கியா?"

"டெய்லர் கடை பாட்டி.''

''பின்ன என்னத்துக்குக் கழுதைய இப்படிக் கத்த விடறே'' என்றவள் சரவண னைப் பார்த்து "ஏண்டா மதியக் கஞ்சி கூடக் குடியாம இங்க உக்காந்து என்னடா பண்ணிக்கிட்டிருக்க?" என்று கத்தி இழுத் துக் கொண்டு போனாள்.

ஒரு வழியாக கடைதிறந்து சில தினங் கள் கழித்து தையல்மிஷினை எங்கிருந்தோ கொண்டு வந்தான். பழசாக இருந்தது மிஷின்.

"என்னண்ணே புது மிஷின் வாங்க வேண்டியதுதானே?"

"போங்கடா... நீங்க வேற... இது பெல்ட் குவாலிட்டி. ஜெர்மனி மிஷின். பழசா

''தலைவர், தாம் ஆட்சிக்கு வந்தா கட்டாயமா திருட்டு விசிடியை ஒழிச்சுடு வேன்னு சபதம் செய்திருக்கிறாரே...''
''பின்ன சும்மாவா? தமிழ்நாட்டில் தலைவருக்கு இருபது சினிமா தியேட்டர்கள் சொந்தமா இருக்கே!
– வெ. நாராயணன்

இருக்குன்னுதான நினைக்கிறீங்க... இதோட வெலை என்ன தெரியுமா?"

"தெரியாதேண்ணே."

"புது மிஷினை விட ரெண்டு மடங்கு ஜாஸ்தி. இந்த மாடல்ல மொத்தமே முப்பத்தியேழு மிஷின்தான் கம்பெனி தயார் பண்ணுச்சாம். அதோட இந்த மாடலை நிறுத்திட்டாங்களாம். இந்த மாடல் வேணும் வேணும்னு பம்பாய்ல எங்க மாஸ்டர் லட்ச ரூபாயைக் கைல வச்சுக்கிட்டு மூணு தடவை சிங்கப்பூரெல்லாம் போயி விசாரிச்சுட்டு வந்தாரு... கெடைக்கவே இல்லையே."

"ம்..." விழிகள் இதற்கு மேல் முடியாது எனும் எல்லை வரை விரிந்தன. வாய் திறந்த படியே இருந்தது. பயல்கள் கண்களில் பக்தியுடன்... "உங்களுக்கு மட்டும் எப்படி அண்ணே கெடைச்சுச்சு இது?"

"நான் மூணான்டிபட்டியில தெரிஞ்ச ஒருத்தர் மூலமா சொல்லி வாங்கிட்டேன்."

"ஏண்ணே சிங்கப்பூர்லயே கெடைக் காதுன்னு சொன்னீங்க...! இங்க எப்படி கிடைச்சுச்சு?''

"பரவால்லையே. சின்னப் பயகன்னா லும் வெவரமா கேள்வி கேக்கிறீங்களே..." இது கடத்தல்ல வந்து இங்கு யாரார் கையோ மாறி ஒரு எடத்துல இருந்துச்சு...பம்பாய் மாஸ்டர்கிட்ட தொழில் பழகினவன்னு சொன்னதும் உடனே குடுத்திட்டாங்க..''

வீரையன் அரசியலுக்கோ, சினி மாவுக்கோ போயிருந்தால் அளப்பரிய சாத னைகள் செய்திருக்கக் கூடும். அவ்வளவு அளப்பு அவனுடையது.

**ப**யல்கள் நால்வரும் முதல் வாடிக்கை யாளர்களாக அவனிடம் பேண்ட் தைக்க எத் தனித்து, வீட்டில் ஒரு சிறிய சச்சரவு ஏற் படுத்தி, தலா ஒரு 'பேண்ட் பிட்'டுக்கான காசைப் போராடி வாங்கினார்கள். 'பேண்ட்' எடுக்க வீரையனும் உடன் வந்தான். துணி யெடுத்து வந்ததும் இவர்கள் தங்கள் வழக் கமான 'பேண்ட்'களை அணிந்து அளவு கொடுக்கச் சென்றபோது, ஏற இறங்கப்

பார்த்தான்.

"அண்ணே இதே மாதிரி தைச்சுக் குடுங்கண்ணே."

"என்னது? இதே மாதிரியா! இப்ப நீ போட்ருக்க மாதிரியா?"

"ஆமாண்ணே."


"ஏண்டா பயல்களா! இதுக்கு நான் பம்பாய் போயி தொழில் கத்துக்கிட்டு வராட்டி என்னடா?"

"என்னண்ணே சொல்றீங்க?" பயல்கள் புரியாது விழித்தனர்.

"பம்பாயில தொழில் பழகி, ஜெர்மன் மிஷினை வாங்கி வச்சு உக்காந்திருக்கேன்... இந்த... இந்த..." வீரையனது குரலில் அதை 'பேண்ட்' என்று சொல்லக் கூசுகிற அருவை.... "இது மாதிரி போய்த் தைக்கச் சொல்றிங்களேப்பா...ம் நம்மூர்ல, படிக்கிற பசங்க நீங்க தான். ஆனா வெவரம் பத்தாம இருக்கீங்களே!"

இவர்கள் அனைவரும் தமக்குள் பார்த்துக் கொண்டனர். "சரிண்ணே. நீங்களே நல்லதா பாம்பே மாடல்ல தச்சுக் குடுங்க." கடை நிலைபெறும் முன்னே ஒரு பையனை வேலைக்குப் போட்டிருந்தான் வீரையன். அதாவது வீரையன் துணிகளைக் 'கட்டிங்' மட்டுமே செய்வதாகவும், அந்தப் பையன்தான் மேற்படி பம்பாய் மாடலில் வெட்டப்பட்டத் துணியை வடிவமாக ஒருங்கிணைப்பதாகவும் ஏற்பாடு. அந்த 'வடிவ ஒருங்கிணைப்பாளர்' பையனுக்கான தகுதி, டவுனில் சில காலம் பித்தான் தைத்து காஜா கட்டியதும், திரைத்துணியின் ஓரம், தலையணை உறை, வயதானவர்களுக்கான அன்டர்வேர் என்கிற சிக்கலற்ற துணிகளைத் தைத்ததும் மாத்திரமே.

துணியை வெட்டிப் போட்டுவிட்டு டவுனுக்குப் பயல்களை அழைத்துக் கொண்டு சினிமா போய் விட்டான் வீரையன். அடுத்த நாள் இரவு நால்வரும் அணிந்த பேண்ட் வெகு வினோதமாயிருந்தது. பேண்ட்டின் இரண்டு கால்களும் இணைந்த விதம் அரசியல் கூட்டணிகளைப் போல ஏறுமாறாக இருந்தது.



"யண்ணே! இதை எப்படின்னே போடு றது?" பையன்களது கண்ணில் கண்ணீரே வந்து விட்டது. "ரொம்ப டைட்டா வேற இருக்கு."

"இப்ப பாம்பேல 'டைட்ஸ்'தாண்டா ஃபேஷன். நம்மூர்லதான் அகலமாப் பேண்ட் போடுறானுக."

"டைட்டா இருந்தாக் கூடப் பரவா யில்லை. அசிங்கமா வேற இருக்கண்ணே."

சரவணன், "யண்ணே எங்க பாட்டி சண்டைக்கே வந்துரும்ணே" என்றான்.

பயல்களின் முகம் வாடுவதையும், 'பேண்ட்' குறித்து எவ்வித அறிவுமற்ற பெரு மாயி போன்ற கிழவிகள் பேண்ட் தைப்பது பற்றித் தன்னிடம் சர்ச்சிக்க வந்து விடக் கூடிய சிக்கல் பற்றியும் யோசித்தான் வீரை யன். நாலு பேரையும் டவுனுக்குக் கூட்டிப் போனான். தன் சொந்த செலவில் நாலு பேருக்கும் 'பேண்ட்' எடுத்து டவுனிலேயே, தைத்து வாங்கிக் கொடுத்து விட்டான். "யாருகிட்டயும் சொல்லீராதீங்கடா" எனும் சத்தியத்தோடு.

ஊரின் நாகரிக இளைஞர்களான சரவ ணன் வகையறாவுக்கே வீரையனின் 'நவீன பம்பாய்த் தையல்' ஒத்து வராத போது என்ன செய்ய? இரண்டு, மூன்று மாதம் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு தொழிலைக் கைவிட்டான் வீரையன். அந்த ஜெர்மன் மிஷினை வாங்க யாரும் தயாராக இல்லை. மதுரைக்குப் போய் சிரமப்பட்டு ஆயிரத்துச் சில்லறைக்கு அதை விற்றான். ஆனால் கடையைக் காலி செய்யவில்லை. தனது நிரந்தர ஆஃபிஸாக அதனை வைத்துக் கொண்டான். தையலுக்குப் பின்னர் கொஞ்ச நாள் தவணை முறை டேபிள், சேர் விற்றான். பிறகு லாட்டரி சீட்டு என்று விதவிதமாக முயன்று கொண்டேயிருக்கிறான். எல்லாமே ஓர ளவுக்குத்தான் ஒத்து வருகின்றன. எதுவும் சிறப்பாக இல்லை. சமீப காலமாக டிராக்டர் ஒன்றை வாங்கி மணல் லோடு அடித்து வருகிறான். இத்துடன் பந்தல் காண்ட்ராக்ட் மற்றும் சமையல் பாத்திரங்களை வாட கைக்கு விடுகிறான். வீடுகளுக்கு ஆள் வைத்து வெள்ளையடிக்கிறான்.

"நம்ம ஊரு, தொழிலுக்கு லாயக்கே இல்லைடா" என்றான் மூன்றாவது பீடியை இழுத்தபடி... இரண்டு வருடங்களாக சிக

ரெட்டை நிறுத்தி விட்டு பீடி குடிக்கிறான் வீரையன்.

"ஏண்ணே அப்படிச் சொல்றீங்க" என்றான் மணி.

"ஆமா... இதே தொழில்களை நான் மதுரையிலயோ, மெட்ராஸ்லயோ, பாம்பேலயோ பண்ணியிருந்தா இன்னேரம் ரெண்டு காரு வாங்கியிருப்பேன். இது தரித்திரம் பிடிச்ச ஊரு... இங்க இருக்கிறவன்களும் தரித்திரம் பிடிச்ச பசங்க.." நாலாவது பீடியைப் பற்ற வைத்தான்.

மணி அதையே பார்த்தபடி கேட்டான், "ஊருக்கு வந்த ஆரம்பத்துல சிகரெட்டா குடிப்பீங்க... அப்புறம் ஏண்ணே பீடி குடிக்க ஆரம்பிச்சிட்டீங்க?"

பொருளாதாரம்தான் என்கிற எளிமைக் காரணத்தை வேறு யாரேனுமாயிருந்தால் சொல்லுவார்கள். ஆனால் வீரையன் அப்படிச் சொல்லுவானா?

"எனக்குப் புடிச்சதே கேரளா கல்ச்சர் தாண்டா... அங்க பாரு, மம்மூட்டி, ஈ.கே. நாயனார் எல்லாரும் பீடிதான் குடிக்கிறாங்க.. அதான் நானும் பீடி குடிக்க ஆரம்பிச்சிட்டேன்.."

பீடியை அணைத்த பின்பு "போலாமா?" என்று எழுந்தான் வீரையன்.

மூவரும் மெதுவாக நடந்தார்கள்.

இந்த நாலைந்து வருடங்களில் வீரையனின் புளுகுகள் பற்றி ஓரளவு



உணர்ந்து விட்டபோதும் அவன் மீது இந்த நண்பர்களுக்கு ஓரளவு மதிப்பு இருக்கத்தான் செய்தது. ராமலட்சுமணர்கள் போல இவர்கள் வீரையனோடு ஐவராக ஆனார்கள். சமய சமயங்களில் கைமாத்தாக சில்லறை... ஏதேனும் பிரச்னைகளில் மனக் கஷ்டத்தைப் போக்க மருந்து.. சந்தேகங்களுக்குத் தெளிவு என்று வீரையன் ஒரு முக்கிய நபராகவே இந்தப் பசங்களிடத்தில் இயங்கி வந்தான். ஊரில் பொதுவாக வீரையன் பற்றி, "அவன் வாய் ஜாலக்காரன், ஆனால் வெத்து வேட்டு" எனும் அபிப்ராயம் நிலவி வந்தது.

மணிதான் சொன்னான். "அண்ணே, கொஞ்சம் முன்னால ஒரு குறிகாரன் வந்தான். கிரவுண்டை ஒட்டி பூவரச மரமிருக்க வீடு இருக்கில்லே, அதைப் பாத்தான்..." எனத் துவங்கி நடந்ததை விவரித்தான்.

"அப்படியாக்கும்... சரவணா அது உங்க வீடுதானே... அதான் பயந்துட்டியாக்கும்."

"பயமில்லைண்ணே. அவம்பாட்டுக்குச் சாபமிருக்கு; அது இதுங்கறான்... சங்கடமாயிருக்கில்ல..."

"குறிகாரனை விடு... ரொம்ப ஜாலியான ஒரு விஷயமிருக்கு நம்ம கிட்ட... அந்த வீட்டுக்கு ஆளு குடிவரப் போறாங்க... அழகழகா மூணு பொம்பளைப் பிள்ளைகளோட அழகா ஒரு அம்மா குடிவரப் போறாங்க."

சரவணனும், மணியும் ஆச்சர்யமானார்கள்.

"அது யூஸ் பண்ணாம பூட்டியே கிடக்கே?"

"ஆமாடா... அதை மராமத்துப் பண்ணி வெள்ளையடிக்கிற பொறுப்பை காண்ட்ராக்ட் பேசி எங்கிட்ட விட்ருக்காரு சரவணனோட அப்பா. காலைலதான் அட்வான்ஸ் குடுத்தாரு. அந்தக் குடும்பத்துல மூணு பொண்ணுகளாம். ரம்பை, ஊர்வசி, மேனகை மாதிரி அம்புட்டு அழகாம்."

"அண்ணே இப்படித்தான்டா பொய் சொல்வாரு."

"சரவணா உந்தலைமேல சத்தியம்... அந்தம்மா ஒரு விதவை... ஆரம்ப சுகாதார நிலையத்துல நர்ஸ் வேலை... இங்க குடிவரப் போறாங்க... இனிமே நமக்கு ஜாலிதான்... நம்ம ஊர்ல பாக்கிற மாதிரி பொண்ணுகளே இல்லை... மீறி இருந்தாலும் நாம பாத்தோம்னா வந்து சட்டையப் புடிக்கிறானுக... இந்தப் பொண்ணுக சூப்பர் பொண்ணுகளாம்."

சரவணனுக்கும், மணிக்கும் கூட உற்சாகம் அடிவயிற்றில் புரண்டது.

ஆனாலும் சரவணனின் மனது ஓரத்தில் ஒரு நெருடல். 'அது சாபம் வாங்கின வீடாமே... அங்க போய்க் குடி வர்றாங்களே பாவம்...' என்று தோன்றியது.

(தொடரும்)

சிக்கல் - 65

# அஸ்திவாரம் அவசியம்!



சென்னைக்கு அருகே கோடிக் கணக்கான ரூபாய் செலவில் ஒரு கிரானைட் தொழிற்சாலையை நிர்டாணித்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் அனைத்தும் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் கருங்கற்களை வெட்டிப் பாலிஷ் போடும் இயந்திரம்தான் மிக முக்கியமானது. மிகவும் விலை உயர்ந்தது. அது மிகவும் கனமானதும்கூட. எனவே அதனை வைக்கும் இடத்தில் மிக வலுவான அஸ்திவாரம் போட வேண்டியிருந்தது. அந்த இயந்திரத்தின் அளவுக்கும் எடைக்கும் ஏற்ப அஸ்திவாரம் அமைக்கும் பணியைத் தொடங்கினார்கள். அஸ்திவாரம் அமைக்கும் பணியே பல இலட்சங்களை முழுங்கியது.

குறிப்பிட்ட சுபயோக சுபதினத்தில் அந்த இயந்திரம் சென்னை வந்து சேர்ந்தது. பல இலட்சங்கள் செலவில் அமைக்கப்பட்ட அஸ்திவாரத்தில் அந்த இயந்திரம் சரியாக அமைந்து 'உட்காரவில்லை'. யாரோ அளவுகளில் சொதப்பியிருந்தார்கள். எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

கடைசி முயற்சியாக அந்த இயந்திரத்தைத் தயாரித்த ஜப்பான் கம்பெனியின் தலைசிறந்த பொறியாளரைச் சென்னைக்குத் தருவித்து ஆலோசனை கேட்டார்கள். அவர் அஸ்திவாரத்தைப் பார்வையிட்டார். பின் இயந்திரத்தின் அளவுகளை ஆராய்ந்தார். சுமார் இரண்டு மணி நேரப் பரிசோதனைக்குப் பின் அவர் சொன்ன வார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"ஒரு சக்தி வாய்ந்த வெடிகுண்டை வைத்து நீங்கள் கட்டிய அஸ்திவாரத்தைத் தகர்த்துவிட்டு ஒரு புது அஸ்திவாரம் போடுங்கள். அப்படிச் செய்யும் போது இந்தத் தவறுகளைப் பண்ணாதீர்கள்" - பழைய அஸ்திவாரத்திலிருந்த தவறுகளைப் பட்டியலிட்டார்.

"அஸ்திவாரத்தை இடிக்காமல் எதுவும் பண்ண முடியாதா?" இந்திய கம்பெனியின் எம்.டி ஆதங்கத்துடன் கேட்டார்.

"அடிப்படையில் தவறு இருந்தால் அதை மேலிருந்து சரி செய்ய முடியாது. அடிப்படையே சரியில்லை என்றால் அதனை முழுமையாகத் தகர்த்து எறிந்துவிட்டுச் சரியான அடிப்படையை அமைத்துக்கொள்வதுதான் முறை. அஸ்திவாரத்தில் ஏற்படும் பிழைகளை மேற்கட்டடம் கட்டும் போது ஈடு கட்ட முடியாது." வெடி குண்டுகளைப் போல் வந்து விழுந்தன வார்த்தைகள்!

எவ்வளவு சத்தியமான வார்த்தைகள்! இந்த சமுதாயத்தை அமைக்குப் பணியில் நாம் அடிப்படையில் செய்த தவறுகளை மேற்கட்டடத்தில் இருந்துகொண்டு சரி செய்ய முயல்கிறோம். முடியவில்லை. குழந்தைகள் கல்வியில் அடிப்படையில் அமைய வேண்டிய நாணயம், நேர்மை, நன்னடத்தைப் போன்ற கோட்பாடுகள் அமையாததால் அதனை மேற்படிப்பின் மூலம் சரி செய்யப் பார்க்கிறோம். முடிகிறதா? அஸ்திவாரங்கள் சரியாக அமைக்கப்படாவிட்டால் அவற்றைத் தகர்த்தெறியும் துணிவு வேண்டும். நம் தவறை நாமே ஒப்புக்கொள்ளும் இச்செயலுக்கு மனப்பக்குவமும் வேண்டும். இதற்கு உதவ ஜப்பானிய இஞ்சினியர் தேவையில்லை. மனச்சாட்சிகளுக்குக் காது கொடுத்தால் போதும்.



**வரலொட்டி ரெங்கசாமி**



* மாணவிகளில் ஒரு பகுதியினர்



* ரவி



* பெஞ்சமின்

# "காசு கொடுத்து நோட்டு வாங்கவே இல்லை!"

திருச்சியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கீழ முல்லக்குடி கிராமம். அதனுள்ளே ஒட்டக்குடி பகுதியில் அமைந்துள்ள துவக்கப் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் வரையிலான பள்ளியில் மொத்தம் எண்பத்தியொரு மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். கீழ முல்லக்குடியில் இருப்பது ஒருநடுநிலைப் பள்ளி. ஒன்று முதல் எட்டு வகுப்புகள் வரையிலான இந்தப்பள்ளியில் மொத்தம் நூற்றிப்பத்து மாணவ, மாணவிகள்.

அவர்களில் ஒருவர் கூட பாட சம்பந்தப்பட்ட நோட்டுகள் எதுவும் கடைக்குச் சென்று காசு கொடுத்து வாங்கியதே இல்லை. 'ஒரு குயர் நோட்டு என்ன விலை?' என்று நம்மிடம் கேட்கிறார்கள். முதல் வகுப்பு மாணவ, மாணவிகளுக்குத் தேவைப்படும் சிலேட்டுகள், பென்சில்கள், வாய்ப்பாடுகள், எட்டாம் வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் பயன்படும் ஒரு குயர் நோட்டுகள், கட்டுரை நோட்டுகள், அவர்களின் அந்தந்த ஒரு வருடத் தேவைகளுக்கு உரிய பாட நோட்டுகள் முழுவதும் அன்பளிப்பாகத் தந்து கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது 'மக்கள் தொண்டன் சமுதாய சீர்திருத்தக் கழகம்' என்கிற அமைப்பு.

"இந்தக் கிராமத்துல இருக்கற இந்த இரண்டு பள்ளிக்கூட மாணவ மாணவிகளுக்கு மட்டும்தான் தொடர்ந்து பன்னிரண்டு வருஷமா எங்க அமைப்பு சார்பா எல்லா நோட்டுகளும் தந்து வர்றோம். இதுல இந்தக் கிராமத்துலேந்து எட்டாவதுக்கு மேலே மத்த ஊர்கள்ல போய்ப் படிச்சுட்டு வர்ற பிள்ளைகளுக்கும் அடுத்த வருசத்துலேந்து பாட நோட்டுகள் வாங்கித் தரணும்ங்கிற எண்ணமும் எங்கள்ட்ட இருக்குது!'' என்கிறார் இக் கழகத்தின் கௌரவ ஆலோசகரான ஆர்.ரவி.

"இக் காலத்தில் நகர்ப்புற மாணவ மாணவிகளுக்குக் கல்வி உதவிகள் எப்படியும் ஏதேனும் வழிகளில் கிடைத்து விடுகின்றது. கிராமப்புற ஏழை எளிய குடும்பத்து மாணவர்களுக்குச் சரியான உதவிகளோ வழிகாட்டுதலோ கிடைப்பதில்லை. அதனால்தான் இந்தக் கிராமத்து மாணவ, மாணவிகளுக்கு உதவிகளைச் செய்து வருகிறோம்!'' எனக் கூறுகிறார் தலைவர் டாக்டர் துரை பெஞ்சமின்!

- திருநாவுக்கரசு

# வாங்கிவிட்டீர்களா?

# இலவசம்! மூன்று இலவசம்!

ஓம் சரவணபவ

மாதமிருமுறை வெளிவரும் ஒரே ஆன்மீக இதழ்!

**1** கடன் தொல்லையை விரட்டியடிக்க **சாந்திதுர்கா செப்பு யந்திரம்**

**2** **ஸ்ரீ ரிண லிங்கேஸ்வரர்** லேமினேட் செய்த வண்ணப்படம்

**3** **ஊதுபத்தி ஸ்டாண்ட்** பூஜை அறைக்கு புதிய வடிவத்துடன்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :-

105, ஜானி ஜான்கான் சாலை, சென்னை - 600 014.

போன் : 8420658, 8554242

# அமிதாபுக்குக் கோயில்

• ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்.

? பூலான் தேவி டெல்லியில் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து...?

! இளம் வயதிலேயே துப்பாக்கித் தூக்க வேண்டிய நிர்ப்பந்தம். அதே துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியானது ஒரு பக்கம் சங்கடம் என்றாலும் கத்தியெடுத்தவன் கத்தியால் வீழ்வான் என்பதற்கு உதாரணமாகிவிட்டது வேதனை.

• ப. இராம் முருகன், சென்னை – 68.

? கோல்கத்தா ரசிகர்கள் அமிதாப் பச்சனுக்குக் கோயில் கட்டியுள்ளது பற்றி...?

! அவர்கள் கட்ட முன்வந்தது அறியாமை; ஏற்றது ஆணவம்!

• எஸ். அப்துல்லா அஹ்மது, நாகூர்.

? காலத்தால் அழியாத இலக்கியங்களை இன்றைய அறிவியல் அழித்து விடுகிறதே..?

! நவீன விஞ்ஞானம் பாதுகாக்கிறதே தவிர, அழிப்பதில்லை. பழைய ஓலைச் சுவடிகளைக் கூட சி.டியில் பாதுகாக்கிறார்கள்.

• அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் உடலை அரசு மரியாதையுடன் தகனம் செய்ய அனுமதித்த முதல்வரின் பெருந்தன்மை குறித்து...?

! வஞ்சனை இல்லாமல் பாராட்டலாம். அவரும் திரையுலகில் ஒரு வெற்றிகரமான நட்சத்திரமாய் வலம் வந்தவர். அவருக்குச் சிவாஜியின் தகுதியும் திறமையும் தெரிந்திருக்கிறது. அந்த வகையில் 'ஜெ'வுக்கு ஜே!



• வேதனை முடிவு!



• கோல்கத்தா கோலம்!

• எஸ்.ஈ.தாஸ், சென்னை-12. ❑

? 'தே.ஜ. கூட்டணியில் இருக்கிறோம், ஆனால் தி.மு.கவுடன் இல்லை' என்கிறார் வைகோ; 'தி.மு.கவுடன்தான் உறவு, தே.ஜ. கூட்டணியில் இல்லை' என்கிறார் திருமாவளவன்... ஏன் இப்படிக் குழப்புகிறார்கள்?

! தங்கள் சௌகரியத்துக்காகத்தான். மக்கள் குழம்பித் தலையைப் பிய்த்துக் கொண்டால் அவர்களுக்கு என்ன...?!

• எஸ். திருமலை, மதுரை – 7.

? கல்கி இதழ், ரா. கிருஷ்ணமூர்த்தியின் வாரிக பத்திரிகையா? அல்லது கலைஞர் கருணாநிதிக்குச் சொந்தமாகிவிட்டதா...?

! உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம் சுவாமி! 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி வகுத்த பாதையில்தான் கல்கி இன்று நடக்கிறது; என்றும் நடக்கும்! கல்கி நிறுவனத்தின் சொந்தக்காரர்களாகப் பல முதலீட்டாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் கருணாநிதி பெயர் இல்லை. நீங்கள்

❑ ரூ. 100 பரிசு பெறுபவர் :
எஸ். ஈ. தாஸ்,
19, புதுக்குளக்கரை சாலை,
ஓட்டேரி,
சென்னை– 600 012.

* ரூ. 50 பரிசு பெறுபவர் :
சா. சாமியப்பன்,
காளிபாளையம்,
வெள்ளமடை அஞ்சல்,
கோவை – 641 110

கலர் கண்ணாடி அணிந்து பார்த்தால் உங்களுக்குக் கல்வி வித்தியாசமாகத்தான் தெரியும்.

● எம். ரேவதி, மன்னார்குடி.

*? கோபம், சந்தேகம்-இரண்டில் அதிக பாதிப்பை ஏற்படுத்துவது எது...?*

! கொட்டித் தீர்க்கும் கோபத்தைக் காட்டிலும் பொத்தி வைக்கும் சந்தேகம்தான் பொல்லாதது.

● டி.எஸ். பாலு, கௌரிவாக்கம்.

*? சுதந்தரப் போராட்டத்தில் சிறை சென்றவர், 26 ஆண்டுகள் 'ஜகன் மோகினி' பத்திரிகையை நடத்தியவர்- வை.மு. கோதைநாயகியை இன்றைய அரசியல்வாதிகள் மறந்துவிட்டார்களே...?*

! நல்ல காலம்! ஓர் உயர்ந்த மனுஷி தியாகி, இன்றைய சுயநல அரசியல்வாதிகள் பேச்சில் அடிபடாமல் இருப்பதே நல்லது!

● சா. சாமியப்பன், வெள்ள மடை அஞ்சல். ●

# கட்டியகது பற்றி..?

*? முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி மாதவனின் கருத்துப்படிப் பார்த்தால் மேம்பால ஊழல் வழக்கில் ஜெ.வுக்கு மேலும் மேலும் நெருக்கடி வாய்ப்பு உள்ளதே?*

! 'நீதிபதி அசோக் குமாரின் பல சொத்துகளைப் பதிவேடுகளிலிருந்து நீக்க வேண்டும்' என்ற வழக்கில் அசோக் குமார் வாதாடியிருப்பதைப் பார்த்தால் மேலும் மேலும் என்ன, அதற்கு மேலும் மேலும் மேலும் நெருக்கடிதான்.

● சு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

*? 'உணவுக் கிடங்குகளில் தானியங்கள் தேங்கிக் கிடக்கும்போது நாட்டில் பசியும் பட்டினியும் ஏன் தாண்டவமாடுகின்றன...?' என்று உச்சநீதிமன்றம், ஆட்சியாளர்களைக் கேட்டுள்ளதே?*

! ஆட்சியாளர்களிடம் பதில் இராது. ஆனால், பல உழைப்புப் பணிகளுக்குக் காசுக்குப் பதில் உணவு தானியம் கொடுத்தால் பிரச்னை தீரும்.

● இரா. பொன்னப்பன், வயலூர்.

*? சச்சின் டெண்டுல்கர் பற்றி...?*

! அவர் இல்லாவிட்டால் இந்திய கிரிக்கெட்டே இல்லை என்று கூறுமளவுக்கு உயர்ந்துவிட்ட ஒருவருக்கு கிரிக்கெட் உலகின் பைபிள் என்று கருதப்படும் விஸ்டெனில் உரிய இடம் இல்லாமல் போனது வியப்பும் வருத்தமும் தருகிறது. நஷ்டம் அவருக்கல்ல...

● ஐ. இராமதாஸ், சென்னை -23.

*? ஏழை எளிய மக்கள், ஓய்வு ஊதியம் பெறுவோர் யூ.டி.ஐயிடம் வைத்திருந்த நம்பிக்கை நாசமாகிவிட்டதே!...*

! யூ டி ஐ (UTI) என்பது United misTrust of India ஆகிவிடாமல் இருக்க வேண்டுமானால், "சட்டத்தின் ஓட்டைகள் வழியே ஊழல் பூதங்கள் நழுவி விடுவதை ஒழித்துக் கட்டுவேன்" என்ற ஊழல் தடுப்புக் கமிஷனர் விட்டலின் கனவு நனவாக வேண்டும். *(விட்டல் வாசகம் அனுப்பி வைத்தவர் திருவண்ணாமலை ஆர்.ஆர்.சாமி)*

● தெ.ச. சேகர், மோரகனியனூர்.

*? பச்சோந்தி படம் போட்ட வாழ்த்து அட்டை ஒன்று உள்ளது - எந்த அரசியல்வாதிக்கு அனுப்பி வைக்கலாம்...?*

! லேட்டஸ்டாக வாழப்பாடி!

● எஸ். சையது முகமது, சென்னை - 93.

*? தரமான கல்வியும் கூட வாரம் ஒரு பட்டுப் புடைவை பரிசு தர முன்வந்திருப்பது நியாயமா?*

! தரமான வாசர்களுக்காக,
தரமான கல்வி
தரமான போட்டி
தரமான பட்டுப்
புடைவை! ○





• ஜே போடலாம்!



• ...குழப்பம்!



• தப்பிய நாயகி!





• கல்லாறு கடந்து

செலம்பை. மின்சாரம், மினிபஸ் உட்பட, நவீன நாகரிகத்தின் அடையாளங்கள் எதுவும் பரிச்சயப்படாத, குக்கூ ஓசை கேட்கும் குக்கிராமம். எம்.டீ.வி. பார்த்து, ஃபாஸ்ட்புட் அவுட்லெட்டில் பிட்ஸா சாப்பிட்டு, மாலையானால் நண்பர்களோடு அவுட்டிங் கிளம்புகிற வயதில், ஒரு இளைஞர் மட்டும், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருக்கும் இந்தத் தொலைதூர கிராமத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார்.



• அரிக்கேன் விளக்கு உபயத்தில்

# மலை கிராமத்தில் ஒரு மாலைப் பள்ளி

சென்னையிலிருந்து புறப்பட்ட பேருந்தில் இரவு முழுவதும் பயணம். பேருந்து தர்மபுரியை அடைந்தபோது அதிகாலை ஆறுமணி. அங்கிருந்து கொட்டப்பட்டி என்கிற சிறு நகருக்கு மேலும் ஒரு மணி நேரம். இதன் பிறகுதான் செலம்பை நோக்கிய கரடு முரடான காட்டுப் பயணம் தொடங்குகிறது.

கால்களை நம்பி நடக்கத் தொடங்கிய அந்த இளைஞரின் எதிரே, சைக்கிளில் வருகிறார் ஒரு பழங்குடி மனிதர்.

"என்ன வாத்தியாரய்யா... ஊர்லே அய்யன், ஆத்தாளெல்லாம் சொகம்தானுங்களா?"

இவரது பதிலுக்குக் காத்திராமல், சைக்கிளை மிதித்தபடியே இன்னொரு தகவலையும் தந்துவிட்டுப் போகிறார்.

"ஒரு வாரம் லீவுல போனாலும் போனீக, குட்டிப்பாளையத்துக்கு ஒரே கொண்டாட்டம் தான் போங்க!"

இன்னும் சிறிது தூரம் நடந்தவர், அந்த வண்டிச்சாலையை ஒட்டியக் கேழ்வரகு வயல்களைக் கவனிக்கிறார். அங்கே முற்றிய கதிர்களைக் கொய்தபடி கூலி வேலை செய்து கொண்டிருந்தனர் பத்துக்கும் அதிகமானச் சிறுவர்கள். இவரைக் கண்ட அடுத்த விநாடி, "ஹேய்ய்ய்... சாரு வந்தாச்சிடோய்..." என்று உற்சாகமாய்க் கூவியபடி ஓடி வந்தனர்.

"சாயங்காலம் க்ளாஸ் இருக்கு வேலையை முடிச்சுட்டு எல்லோரும் வந்துடுங்க" சொல்லியபடியே சிறுவர்களின் கேசங்களை அன்பாய்க் கோதியும், முதுகுகளில் தட்டிக் கொடுத்தும் விடைபெற்று நடக்கிறார். காட்டாறு ஒன்று குறுக்கிடுகிறது. இடுப்பளவு தண்ணீரில் இறங்கி நடந்த இளைஞரின் பார்வையில் குடிசைகள் தென்படுகின்றன.

ஐம்பத்தியொரு கூட்டுக்குடும்பங்கள் வசித்து வரும், அந்தக் கிராமத்தின் ஒட்டு மொத்த மக்கள் தொகையே இருநூற்று முப்பத்தியொன்றுதான். அதில் பதினைந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் மட்டும் தொண்ணூற்று ஐந்து பேர். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்புவரை எழுதப் படிக்கத் தெரிந்தவர் யாருமில்லாத இந்தக் கிராமத்தில் இன்று ஐந்து பேர், எஸ்.எஸ்.எல்.சி. படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணமான அந்த இருபத்தெட்டு வயது இளைஞர் சென்னையைச் சேர்ந்த செந்தில்.

ஊரின் முகப்பிலேயே இருக்கும் சமுதாயக் கூடம்தான் செந்திலின் வகுப்பறை. அவர்





தங்கியிருக்கும் வீடு எல்லாம். மாலை ஆறு மணிக்கு அரிக்கேன் விளக்கின் வெளிச்சத்தில் வகுப்பு தொடங்கிவிடும். வயது வாரியாக அவர்களைத் தனித் தனிக் குழுவாகப் பிரித்து, பாடம் நடத்தத் தொடங்குகிறார், அல்லது கதை சொல்லத் தொடங்குகிறார்.

எந்தப் பாடம் என்றாலும் எல்லாவற்றுக்கும் இவரிடம் கதைகள் இருக்கின்றன. செய்தித் தாள் மற்றும் இதர வெளியீடுகளில் இருந்து கத்தரித்து எடுத்து வரப்பட்ட படங்களை வியப்பாய்ப் பார்க்கிறார்கள். கதை கேட்டு, படம் பார்த்துப் பாடம் படிக்கும் இவர்களில் அத்தனை பேருமே பள்ளிக் கூடத்திலிருந்து 'டிராப்அவுட்' ஆனவர்கள். பதினைந்து கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் பள்ளிக் கூடத்துக்குக் கால்நடையாகப் போய் வர முடியாதது முதல் காரணம். வயல் வேலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுவது இரண்டாவது காரணம். இன்று வேலையும் செய்து முடித்தபிறகு பள்ளிக்கூடம். அதுவும் அருகிலேயே.

“இந்த மாலை நேரப் பள்ளி கொடுத்த உற்சாகத்தில், பத்தாம் வகுப்பு வரை சென்று படிக்கிற மாணவர்கள் உருவாகியிருக்கிறார்கள். இவர்களில் இரண்டு பேரை இங்கே ஆசிரியர்களாக அமர்த்திவிட்டு வந்துவிடுவேன். என் கிராமம் என் மக்கள், அவர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற உணர்வு இவர்களுக்கு இருக்கிறது. எனக்கு அது போதும். நான் இது போன்ற இன்னொரு கிராமத்தைத் தேடிச் செல்ல வேண்டும்" - என்று சொல்கிற செந்தில், அரசாங்கத்திடம் கைநீட்டிச் சம்பளம் வாங்குகிற ஆசிரியர் அல்ல.

எதையும் எதிர்பார்க்காமல், இத்தனை நூறு மைல்களுக்கு அப்பால்வந்து கல்விப் பணி செய்ய வேண்டிய அவசியமும் ஆர்வமும் இவருக்கு ஏன் ஏற்பட்டது?

“சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து இளங்கலை தத்துவம் படித்துக் கொண்டிருந்தேன். முதலாண்டின்போது கல்லூரியில் ஒரு டாகுமெண்டரி பெஸ்டிவல் நடந்தது. தமிழகத்தில் உள்ள ஆதிவாசிகள், பழங்குடி மக்களின் இன்றைய வாழ்க்கையைப் பார்த்து உறைந்து போனேன். அடிப்படை வசதிகளுக்கே அல்லாடும் அவர்களுக்கு, கல்வி என்பது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று தெரிந்து கொண்டபோது மனம் கனத்துக் கொண்டது.

“இவர்களுக்காக நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் வந்துவிட்டது. படித்துக் கொண்டிருக்கும்போது கிராமங்களைத் தேடிப் போக முடியாது என்ற முடிவுவோடு, தாம்பரத்துக்குப் பக்கத்திலிருக்கும் திருப்போரூர் என்ற கிராமத்துக்குச் சென்று நண்பர்களோடு மாலை நேரப் பள்ளிக்கூடம் நடத்தினோம்.

மூன்றாண்டு படிப்பு முடிந்தபிறகு, சென்னையிலிருந்து புறப்பட்டுவிட வேண்டும் என்ற வெறி அதிகரிக்க, எந்த ஊருக்குப் போவது என்ற குழப்பம். உடன் டோபோகிராபி வரை படத்தை வாங்கிவந்து, அதில் தேடி, சாலைகள் கூட இல்லாத இந்த செலம்பைக் கிராமத்திற்கு வந்தேன். 1999 அக்டோபரில், நண்பர்கள் சேர்ந்து இங்கு வகுப்புகளைத் தொடங்கினோம். கிராம மக்களும் நன்கு ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். ஏழு வயதிற்கு உட்பட்டச் சிறார்கள் இருபது பேரும், பத்து வயதிற்கு உட்பட்டச் சிறுவர்கள் பதினேழு பேரும், இருபது வயதிற்கு உட்பட்டவர்கள் ஏழு பேரும் இங்கே படிக்கிறார்கள். வகுப்புகள் மாலை நேரம்தான் என்றாலும், சிறுவர்களுக்கு வயல் வேலை இல்லாதபோது, காடு, மலையென்று கேழ்வரகு கூழ் உணவுடன் கிளம்பி விடுவோம். இயற்கையோடு இணைந்து பாடம் படித்துவிட்டு மாலைதான் திரும்புவோம்.

“முந்நூறு புத்தகங்கள் கொண்ட ஒரு சிறு நூலகத்தையும் இங்கே உருவாக்கியிருக்கிறோம். ஒரு மூலிகைப் பண்ணையும், விதை வங்கியையும் இங்கே உருவாக்க வேண்டும் என்பதையும் இலட்சியமாக வைத்திருக்கிறோம்" என்று சொல்லும் செந்தில், குடும்பத்திற்கு மூத்த பிள்ளை.

“அப்பா ஒரு வங்கி ஊழியர். என்னிடமிருந்து குடும்பத்தினர் எதையும் எதிர்பார்க்கவில்லை. அதனால் தடையில்லாமல் என் பயணத்தைத் தொடர முடியும். மக்கள் வரிப்பணத்தில் படித்த நாம் அவர்களுக்காக ஏதாவது செய்வதே நியாயம்" என்கிறார் இந்த இளைஞர்.

**- ஜெயந்தன்**

# சான்றிதழ்கள்

அந்தப் பெரிய ஹாலை நான்காகப் பிரித்திருந்தார்கள். நான்கு ஆர்.ஐக்கள் அமர்ந்திருந்தார்கள். மத்திய சென்னையின் நான்கு பகுதிகளுக்கும் அவர்கள்தான் பொறுப்பு. அவர்களைச் சுற்றிலும் ஏகப்பட்ட கூட்டம். ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு கையிலிருந்த பேப்பர்களை நீட்டினார்கள். நானும் கூட்டத்தோடு கூட்டமாய் முன்னால் சென்றேன்.

"ஸார்... உங்களுக்கு என்ன, வேணும்?"

"நேட்டிவிட்டி சர்டிபிகேட் ஸார்."

"என்ன பர்பஸுக்கு?"

"வொய்ஃப் எம்ப்ளாய்மெண்ட் நம்பரை திருச்சியிலேர்ந்து சென்னைக்கு மாத்தணும்."

"அப்ளிகேஷன் எழுதித்தாங்க... ரெண்டு ரூபாய்க்குக் கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டிக் கொடுங்க... ரேஷன் கார்டு வச்சிருக்கீங்களா?"

"வச்சிருக்கேன்."

"ஒரு ஜெராக்ஸ் காப்பி அப்ளிகேஷனோட என்க்ளோஸ் பண்ணிக் கொடுங்க."

நகர்ந்து வந்தேன். அந்தப் பெரிய டேபிள் முன்னே அமர்ந்தேன். கொண்டு போயிருந்த ஃபைல் பிரித்தேன். வெள்ளைப் பேப்பரை எடுத்து எழுதத் தொடங்கினேன்.

"ஸார்... இப்படியெல்லாம் கொடுக்கக்கூடாது. வெளியில பிரிண்டட் அப்ளிகேஷன் ஃபார்ம் கிடைக்கும். அதை வாங்கி ஃபில்லப் பண்ணிக் கொடுங்க" என்றார் அருகில் அமர்ந்திருந்த ஒருவர்.

வெளியில் வந்தேன். வெயில் சுள்ளென்று அடித்தது. மதியம் மூன்று மணி வெயில். தாசில்தார் அலுவலகத்தில் ஏகப்பட்ட கூட்டம். சாதிச் சான்று, வருமானச் சான்று வாங்க மக்கள் அலைமோதிக் கொண்டிருந்தார்கள்.

எதிரே இருந்த ஜெராக்ஸ் கடையை நோக்கி நடந்தேன்.

**திருவாரூர் பாபு**

"என்ன ஸார் வேணும்?"

"நேட்டிவிட்டி சர்டிபிகேட் அப்ளிகேஷன் வேணும்."

கேட்காமலேயே கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டிக் கொடுத்தாள் அந்தப் பெண். ரேஷன் கார்டு ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டேன். "எட்டு ரூபாய்" என்றாள். கொடுத்தேன். அங்கேயே அமர்ந்து அப்ளிகேஷனைப் ஃபில்லப் செய்யத் தொடங்கினேன். இரண்டு வரிகள் எழுதியிருப்பேன். "தம்பி"- மிக அருகில் குரல் கேட்டது.

நிமிர்ந்தேன். நாற்பது வயதிருக்கும். ஏழைமைத் தோற்றம். அழுக்குப் புடைவை. ஒட்டிய கன்னங்கள். வற்றிய உடம்பு. அவள் கையைப் பிடித்தபடி அந்தச் சிறுவன்...

"இதுல எழுதித் தர முடியுமா?"

அவள் கையில் நிரப்பப்படாத அப்ளிகேஷன்.

"கொஞ்சம் இரும்மா..." என்றேன்.

"சரி தம்பி" என்றவள் வேகமாக பின்னால் நகர்ந்து நின்று கொண்டாள். எனது அப்ளிகேஷனைப் ஃபில்லப் செய்து கவரில் போட்டேன். தன்னுடைய அப்ளிகேஷனை நீட்டினாள்.

இரண்டு விண்ணப்பங்கள் இருந்தன.

"எதுக்கும்மா ரெண்டு?"

"ஒண்ணு சாதிக்கு... இன்னொண்ணு வருமானத்துக்கு."

அவளிடம் கேட்டுகேட்டு விண்ணப்பத்தை நிரப்பினேன்.

"பேரு?"

"தாமிரபரணி."

"புருஷன் பேரு என்னம்மா?"

"தம்பி... அப்பா பேரு சொல்லுடா?"

"கனகசபை."

"என்ன பண்றாரு?"

"உயிரோட இல்லங்க... செத்துப் போயிட்டாரு..."

சிறிது தடுமாறினேன். விண்ணப்பத்தை நிரப்பி முடித்தேன். "இந்த இடத்துல கையெழுத்துப் போடும்மா."

"கையெழுத்து வராதுங்க."

ஜெராக்ஸ் கடைக்காரர் ஸ்டாம்ப் பேடை எடுத்து வைத்தார். இடது கையைத் தேய்த்து ரேகை பதித்தாள்.

"இதுலயும் வச்சிக்கிறேங்க..." என்றவள் கையில் வைத்திருந்த இன்னொரு பேப்பரிலும் கைநாட்டுப் பதித்தாள்.

"உள்ள கொண்டு போய்க் கொடும்மா" என்று கூறிவிட்டு நகர்ந்தேன்.

"**கோ**பிநாத்... யாருங்க...?" என்றார் ஆர்.ஐ.

முன்னால் சென்றேன். "ஸார்" என்றேன்.

"என்னங்க அப்ளிகேஷனை நேரா இ[illegible] கொண்டு வந்து கொடுத்திருக்கீங்க.. வெளியில என்டார்ஸ்மெண்ட ஒனார்க் இருப்பாரு... அவர்கிட்ட ஃபார்வர்டு பண்ணி வாங்கிட்டு வ[illegible] [illegible]டேட்மெண்ட் ஃபாரம் இணைக்கலை[illegible]?" என்றார்.



தயக்கமாக நின்றேன்.

"அப்ளிகேஷன் வாங்குனிங்க பாருங்க... அங்கேயும் கிடைக்கும். வாங்கி இதோட சேர்த்திடுங்க."

மறுபடியும் வெளியில் வந்து ஸ்டேட்மெண்ட் பார்ம் வாங்கினேன். விண்ணப்பத்தோடு சேர்த்தேன். விசாரித்துத் தெரிந்து கொண்டு என்டார்ஸ்மெண்ட் கிளார்க்கிடம் வந்தேன்.

"என்ன?"

"ஆர்.ஐ. பார்வர்டு பண்ணி வாங்கிட்டு வரச் சொன்னாரு."

"இதெல்லாம் மூணு மணிக்குள்ள வரணும் ஸார். மூணரை மணிக்கு வந்து கேட்கறீங்களே... ஆபீஸா சத்திரமா இது?" முணு முணுத்துக் கொண்டே ஸீல் வைத்துக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். நான் அப்ளிகேஷன் நிரப்பிக் கொடுத்த பெண் பேப்பரை நீட்ட... "உனக்கெல்லாம் அறிவிருக்கா? மணி ஆயிட்டு... நாளைக்கு வா."

அந்தப் பெண் கெஞ்சினாள். மறுபடியும் முணுமுணுப்பு. பிறகு கையெழுத்து. ஆர்.ஐயிடம் வந்தேன். விண்ணப்பத்தைப் படித்தார். "ஸார், நேட்டிவிட்டி சர்டிபிகேட் எதுக்கு?"

"ஒய்ஃப் எம்ப்ளாய்மெண்ட் நம்பரை திருச்சியிலேர்ந்து சென்னைக்கு மாத்தணும்."

"நேட்டிவிட்டி சர்டிபிகேட் கொடுக்கணும்னா... பத்து வருஷம் நீங்க இங்க இருந்திருக்கணும். அஞ்சு வருஷம்தான் இருந்திருக்கிங்க... ஸோ, உங்களுக்கு நேட்டிவிட்டி தர முடியாது. ரெஸிடென்ஸியல் சர்டிபிகேட் தரலாம்" என்றார்.

"அது போதுமா ஸார்?" என்றேன்.

"அதை நீங்க திருச்சியிலதான் கேட்கணும். எம்ப்ளாய்மெண்ட் நம்பர் சேஞ்ச் பண்ற பர்பஸுக்காக ரெஸிடென்ஷியல் சர்டிபிகேட் தரவேணாமின்னு எங்களுக்கு ஆர்டர்."

"சரி கொடுங்க ஸார்."

அப்ளிகேஷனைப் படித்தார்.

பின்னால் உட்கார்ந்திருந்த ஆர்.ஐ. சத்தம் போட்டார்.

"யாரும்மா தாமிரபரணி?"

அந்தப் பெண் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு ஆர்.ஐயை நோக்கி முன்னேறுவது தெரிந்தது.

"நான்தாங்க."

"சாதிச் சான்றும், வருமானச் சான்றும் கேட்டிருக்கே. இந்த அப்ளிகேஷன் எதுக்கு?"

"விதவைங்களுக்கு அரசாங்கத்துல

"உங்க வீட்லே நம் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தவுடன் நீங்க கடற்கரைக்கு ஓடினீங்களாமே, தற்கொலை செய்து கொள்ளவா?"

"நம் காதலுக்கு முழுக்குப்போட...!"

– கு. ராஜவேணி

பென்ஷன் கொடுப்பாங்களாமே... அதுக்கு எழுதியிருக்கேன்."

"புருஷன் இல்லேன்னு எழுதியிருக்கே... டெத் சர்டிபிகேட் எங்கே?"

"அது... இல்லங்க..."

"அது இருந்தாத்தான் இந்த அப்ளிகேஷன் செல்லும். போய் வாங்கிட்டு வா" என்றார்.

"யாரும்மா... அஞ்சலை..."

ஆர்.ஐ. அடுத்த நபருக்குத் தாவினார்.

"ஸார்... இதுல ஒரு கையெழுத்துப் போடுங்க" எனது ஆர்.ஐ... போட்டேன்.

"ரெண்டு நாள் கழிச்சு வாங்க ஸார். வர்றப்ப ரேஷன் கார்டு ஒரிஜினல்... உங்க வொய்ஃபோட டி.சி. ஒரிஜினல் கொண்டு வாங்க. இதைக் கொண்டு அந்த ரூம்ல எக்ஸிக்யூட்டிவ் டெபுடி தாசில்தார் இருக்காங்க அங்க கொண்டு போய்க் கொடுத்திடுங்க." அப்ளிகேஷனை வாங்கிக் கொண்டு நகர்ந்தேன்.

"ஏம்மா... புருஷன் செத்துப் போயி ரெண்டு வருஷம் ஆச்சு... இன்னி மட்டும் என்ன பண்ணிட்டு இருந்தே..." டெபுடி தாசில்தார், தாமிரபரணியிடம் கேட்டார்.

"ரெண்டு பேர் நாங்க வாங்கித்தரோம்னு சொன்னாங்க... அவங்களை நம்பிக்கிட்டு இருந்தேன். வாங்கித் தரலை.... அதான் நானே வந்தேன்..."

"நீ சொல்றதெல்லாம் சரிதான். விதவைங்களுக்குப் பென்ஷன் உண்டு. மாசம் இருநூத்தம்பது ரூபா. அரசாங்கக் கடன் வாங்கலாம். ஆனா புருஷன் செத்துப் போயிட்டாருங்கிறதுக்கு ஆதாரம் வேணும்மா."

"செத்துப்போன அவர் உடம்பை ஃபோட்டோ எடுத்திருக்கோம். அதைக் கொண்டு வரவா?"

"அதெல்லாம் செல்லாது. அரசாங்கச் சான்றிதழ் வேணும்மா... அது இல்லாம ஒண்ணும் பண்ண முடியாது. ஏன் டெத் சர்டிபிகேட் வாங்கலை?"

தாமிரபரணி அமைதியாக நின்றது.

"என்னால உன் விஷயத்துல ஒண்ணும் பண்ண முடியாது... டெத் சர்டிபிகேட்



கொண்டு வா... பார்க்கலாம்'' என்றார் கண்டிப்பாக. சிறிது நேரம் தயங்கி நின்று விட்டு தாமிரபரணி நகர்ந்தது.

என் அப்ளிகேஷனைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். ஒரு ஓரமாகப் பையனின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த தாமிரபரணியை நோக்கி நடந்தேன்.

என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஏம்மா... டெத் சர்டிபிகேட் அவசியம் வேணும்மா... எங்க போனாலும் அதைக் கேட்பாங்க. அது இல்லாம உன்னால ஒண்ணும் பண்ண முடியாது."

"அது எங்க கிடைக்கும்?" அப்பாவியாய்க் கேட்டாள்.

"உன் புருஷன் எப்படி செத்தாரு?"

"பூந்தமல்லியில வேலை பார்த்தாரு. சாதித்தகராறு. இவரு தலைவர் போஸ்டர்ல சாணி அடிச்சிட்டாங்கன்னு சண்டைக்குப் போனாரு... வெட்டிட்டாங்க..."

''போஸ்ட் மார்ட்டம் சர்டிபிகேட் இருக்கா?"

''அதெல்லாம் தெரியாதுங்க. செத்துப் போனவரை ஆஸ்பத்திரியில கூறு போட்டுக் கொடுத்தாங்க. உடம்பைப் பார்த்து அழத்தான் தோணுச்சு. நான் ஒரு நிலைக்குத் திரும்பவே நாலு நாளாயிடுச்சு. அதெல்லாம் வேணுமின்னு எனக்குத் தோணலை... பள்ளிக்கூடம் போயி நாலு எழுத்துப் படிச்சிருந்தா அந்த விவரமெல்லாம் தெரிஞ்சிருக்கும்.''

"உன் கூட இருந்தவங்க வாங்கி வச்சிருக்கப் போறாங்கம்மா...''

''யாரும் என் கூட இல்லை. நாங்க காதலிச்சுக் கல்யாணம் பண்ணிகிட்டோம். அதனால ரெண்டு பக்கமிருந்தும் யாரும் அவரு சாவுக்குக் கூட வரலை... அதனால அவங்ககிட்டெல்லாம் இருக்காதுங்க. வேற வழி இல்லையா?''

எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. "போய்த் தொலையட்டும். எனக்குப் பணம் காசு, வேலை வேணாங்க. இவனுக்கு ஒரு வழிவகை அமையணும். ஸ்கூல்ல சேர்க்கப் போனேன். சாதிச் சான்றும் வருமானச் சான்றும் கேட்டாங்க.... அது கிடைச்சிட்டாப் போதும். இவனைப் பள்ளிக் கூடத்துல சேர்த்து விட்டுடுவேன். நான் சாணி அள்ளி, ராட்டித் தட்டி கொத்தன் கையில் நின்னு பொழைச்சுக்குவேன்... இவன் படிக்கணுங்க'' என்றாள். அவள் குரலில் உறுதி இருந்தது.

"படிப்பான்" என்றேன்.

"ஏங்க வர்றப்ப நடந்தே வந்துட்டோம். கால் குடையுது. மைலாப்பூர் போற பஸ் வந்தா கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்றாள்.

பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள், "ஐயய்யோ... காசு இல்லாம பஸ்ஸுல எப்படிப் போறது? இருந்த காசை பேப்பர் வாங்கக் கொடுத்திட்டேன். வேடிக்கை பார்த்துக்கிட்டே நடந்து போயிடறோம்..."

பர்ஸ் எடுத்துப் பிரித்தேன். உள்ளிருந்து இருபது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தேன். "இந்தாம்மா... அவ்வளவு தூரம் நடந்து போக வேண்டாம். பஸ்ஸுல போங்க'' என்றேன்.

''ஐயய்யோ... அதெல்லாம் வேண்டாங்க" என்றாள்.

"பரவாயில்லம்மா... பஸ்ஸுக்குத்தானே தர்றேன்" என்றேன்.

யோசித்தாள். பிறகு ஏதோ சொல்ல எண்ணியவள் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு அமைதியானாள்.

"என்னம்மா...?" என்றேன்.

"வாத்தியார் ஏதோ வாங்கிக்கிட்டு வந்தாத்தான் நாளைக்குக் கிளாஸுக்குள்ளே விடுவேன்னு சொன்னார்... அதை வேணுமின்னா இந்தப் பணத்துக்கு நீங்களே வாங்கிக் கொடுங்க. உங்களுக்கு இஷ்டமிருந்தா" என்றாள் யோசித்து.

"என்னடா தம்பி?" என்றேன்.

"ஜாமெட்ரி பாக்ஸ்'' பையன் முணு முணுத்தான்.

எதிரே இருந்த பேப்பர் கடைக்கு அழைத்துச் சென்றேன். ஜாமெட்ரி பாக்ஸ் வாங்கிக் கொடுத்தேன். பையன் முகத்தில் நிலை கொள்ளாத சந்தோஷம். "ரொம்ப தேங்க்ஸ்'' என்றான். அந்த அம்மா கை குவித்தாள்.

தலையாட்டிவிட்டு இருவருமாக வேகமாக நடந்தார்கள். எனக்குள் ஒரு சிறிய சந்தோஷமும், கூடவே நம்பிக்கையும் எட்டிப் பார்த்தன. ○

# ஜோர்...



"பீரோ சாவியைக் கொடு..."

"முதலில் பீரோ வாங்கிக் கொடு. அப்புறம் தான் சாவியைத் தர முடியும்."

— எஸ். மோகன்



"போகாத ஊருக்குத் தலைவர் வழி சொல்றார்!"

"என்னப்பா சொல்றே?"

"நயாகரா நீர்வீழ்ச்சியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வர திட்டம் போடச் சொல்லியிருக்கார்!"

— புளியரை கணேசன்

"டாக்டர், எனக்கு அடுத்த ஜென்மத்துல ரொம்ப நம்பிக்கை இருக்கு!"

"எனக்கு இல்லை, முதல்ல ஃபீஸைக் குடுங்க!"

— தஞ்சை இரா. ஆதி

''அரசர் ஏன் லேட்?''

''தேர் பங்சராம்.''

— எஸ். மோகன்



''இருந்தாலும் இந்த இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல் ரொம்ப மோசம்...''

''எப்படிச் சொல்றே...?''

''இங்கே தமிழைக்கூட இங்கிலீஷில்தான் சொல்லிக் கொடுப்பாங்கன்னா பாரேன்...''

— ராஜிராதா

''படத்துலே அடிதடிக் காட்சி அபாரமா இருக்கே... ஸ்டண்ட் மாஸ்டர் யாராம்?''

''நகராட்சிக் கவுன்சிலர்தான்!''

— தஞ்சை தாமு



'என்னாங்கடா இது. இப்படியெல்லாம் கமெண்ட்டடிக்கிறாரே?' என்று அசந்தே விட்டோம். 'இந்த வயசில் கிழத்துக்குத் தாஜ்மஹால் எதிரே ரொமாண்டிக் போஸ் கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறதே!' என்ற முஷரஃப் பற்றிய பேச்சைத் தான் சொல்கிறோம். பேசியது வேறு யாராக இருக்க முடியும்? சாட்சாத் பாலா சாஹேப் தாக்கரேவேதான்!




• கழுதைக்கு...

சிவசேனைக்காராகளுக்குப் பேசக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? இரண்டு மணிக்குத் தொடங்கி, இரவு பதினொரு மணி வரை பேச பேச என்று பேசித் தீர்த்து, புதிய ரெக்கார்டையே ஏற்படுத்திவிட்டார் ப்ரமோத் நவால்கர். அசப்பில் மாறனைப் போல் இருப்பார். திமுகவிற்கு அவர் செய்வதை சிவசேனைக்கு இங்கு இவர் செய்து கொண்டிருக்கிறார். 'புல் வேர்' தொண்டர்களைப் 'ஃபுல் அவேர்' தொண்டர்களாக ஆக்குவதுதான் அது. எலெக்‌ஷனுக்கு முன் ஒரு பாச வலை சிரிப்பு. தொண்டர்களுக்கு ஒரு

# அழுகைப் பேச்சு இரங்கல்;

ஊக்குவிப்பு, உற்சாகத் இனிப்பு. இத்யாதிகளைப் புகட்டினார். விக்ரோலியிலிருந்து முலுண்ட் வரையிலான தொண்டர்கள், பாட்ச் பாட்சாக வந்து இந்தப் புத்துணர்ச்சி டானிக்கைப் பருகி பலம் பெற்றுச் சென்றனர். 'எங்களுக்கெல்லாம் வயசாகிவிட்டது. எதிர்காலம் இவர்களிடம் தான்' என்றவர், சின்ன சின்ன ப்ரேக் எடுத்துக் கொண்டது, டீ, தண்ணீர்க் குடிக்கத்தான்!

சிவசேனைக்காரர்கள் பேச்சில் வல்லவர்களாயிருந்து என்ன? 'ஜார்ஜ் புஷ் தன் பூனைக் குட்டிக்கு எப்படி இந்தியா என்று பெயர் வைக்கலாம்? ஏதோ புலிக் குட்டிக்கு வைத்தாலும் போனால் போகிறது என்று விட்டிருக்கலாம்' என்று தாக்கரே கொதித்துக் கொண்டிருக்கையிலேயே, 'ஆக்‌ஷனில்' இறங்கிவிட்டார்களே காங்கிரஸ்காரர்கள்? ஒரு கழுதையைப் பிடித்துக் கொண்டு வந்து, அதற்கு 'அமெரிக்கா' என்று பெயரிட்டு, பதிலடி கொடுத்துவிட்டார்கள்! இந்த அமெரிக்கக் கழுதைக்குப் 'பர்த்டே' எல்லாம் கொண்டாடி இனிப்பு விநியோகித்தார்கள். இந்தக் கூத்து அரங்கேறியது மும்பையிலுள்ள சஹாரில்.

பேச வேண்டிய இடத்தில் பேச மறுத்தாலும், சில சமயம் தகராறாகிவிடுகிறது. ஏக்தா கபூரின்

## மும்பை மசாலா

# அதட்டல் பேச்சு மிரட்டல்!

டெலிவிஷரியல் 'க்யூன் கி ஸாஸ்பி..' (கேளுங்க மாமியாரே..)வை எடுத்துக் கொள்ளுங்களேன். 'தக்ஷா பென்'னாக வரும் கேத்கி தவே, ஸீரியலில் படு பாப்புலர். அவரை ஒரு பிரபல குஜராத்தி நடிகையை 'இமிடேட்' பண்ணச் சொல்ல, அவர் மறுக்க, ஒரே கசமுசாவாகி, அவர் வெளியேறிவிட்டார். அந்த இடத்தை இட்டு நிரப்ப, இப்போது புதிதாக ஒரு காரெக்டர் - ஹிமானி ஷிவ்புர். தக்ஷா பென்னின் சகோதரி, 'ரக்ஷா பென்'னாக பிரவேசிக்கிறார். புதிய சகோதரியுடன் தொடர் தொடரும்.



• நவால்கர்

பழைய சகோதரிகளின் தொடர்பு விட்டுவிடாமல் இருக்கத்தான், இருக்கவே இருக்கிறதே 'ரக்ஷா பந்தன்.' இந்த முறை மார்க்கெட்டில் வந்திருக்கும் 'ராகி'கள் அசத்துகின்றன. அட்டகாசமான சகோதரர்களுக்கென்றுப் பொன்னாலான ராகிகள். விலை என்ன தெரியுமா? 36,500 ரூபாய்தான். என்ன பேச்சு மூச்சற்றுப் போய்விட்டீர்களா?

இப்படித்தான் பேசவே வாய் எழாமல் தத்தளிக்கின்றனர் மறைந்த பூலான் தேவியுடன் தொடர்பு கொண்ட சில மும்பைக்காரர்கள். அவரின் சுயசரிதையை எழுதிய மாலா ஸென், "என் சகோதரியை இழந்துவிட்டேன். எனக்கே இவ்வளவு பாதிப்பென்றால் அவரது அம்மாவுக்கும் சகோதரனுக்கும் எப்படி இருக்கும்? எப்பேர்ப்பட்ட வீராங்கனை அவர்?" என்று புலம்புகிறார். அவரை டி.வி.க்காக பேட்டி எடுத்த சேகர் சுமன், "எல்லோரும் அவரைப் பார்த்து நடுங்கிக் கொண்டிருக்கையில், அவர் என்னைப் பார்த்து நடுங்கியதாகச் சொன்னது அதிசயமாயிருந்தது. துவம்ஸிக்கப்பட்ட ஒரு பெண், வேறு வழியின்றி, துப்பாக்கித் ஏந்திய கண்ணீர் கதை அவருடையது. முடிவும் கண்ணீர் மயமாகிவிட்டதே." என்று அங்கலாய்க்கிறார். அவரை 'பாண்டிட் க்வீன்' ஆக்கிய ஷேகர் கபூர். செய்தி கேட்டதும், ஓர் அறையில் தம்மைப் பூட்டிக் கொண்டுவிட்டார். அத்தனை ஷாக். 'ஒரு குழந்தையின் கள்ளம் கபடமற்ற மென்மையான உள்ளம் அவருக்கு. மறுபிறவி எடுத்தவரை வாழவிடாது சிதைத்துவிட்டனரே' என்று குமுறுகிறார்.

அழுகைப் பேச்சு 'இரங்கல்' என்றால் அதட்டல் பேச்சு மிரட்டல், மிரட்டுவதை ஒரு கலையாகவே கற்றிருக்கிறது அண்டர்வர்ல்ட். பிஸினஸ் வட்டாரங்களில் செல் ஃபோன் அடித்தாலே நடுங்குகிறார்கள். செல்லில் ஃப்ளாஷ் ஆவது துபாய் நம்பர். 'ஐயோ தாவுத்தின் கையாள்தான் மிரட்டுகிறார்', என நினைத்து இவர்கள் தண்டம் அழுதுவிடுவார்கள். கடைசியில் பார்த்தால் அது 'ஃபஸ்லூ' என்ற லோகல் குண்டர். துபாய் 'ஸிம்' கார்டை வாங்கி வைத்துக் கொண்டு, வாலாட்டுகிறான். போலீஸ், 'இவனைக் கண்டு துவளாதீர்கள். இவனிடம் ஒரு துப்பாக்கிக்கூட கிடையாது' என்று அலறிக் கொண்டிருக்கின்றனர்.

ஃபஸ்லூவின் பேச்சு ஒரு விதத்தில் நடுங்க வைக்கிறதென்றால், நிதிஷ் பரத்வாஜின் (மஹாபாரத ஸீரியலின் கிருஷ்ணர்) பேச்சுவேறு விதத்தில் நடுக்கமெடுக்க வைக்கிறது. இவர் மானஸரோவர் யாத்திரை மேற்கொண்டு திரும்புகையில், கைலாச பர்வதத்தில், ஓரிடத்தில், விடியலில், ஒரு 15 அடி அசல் ஹனுமாரைப் பார்த்திருக்கிறார். அதை அப்படியே படம் பிடித்து, இப்போது வருவோர் போவோருக்கெல்லாம், யாத்திரை குறித்து கமெண்ட்ரியுடன், ஸ்லைடு போட்டுக் காண்பிக்கிறார். பார்ப்பவர்கள் உறைகிறார்கள். உறைபவர்கள் உருகுகிறார்கள்... பக்திப் பரவசத்தில்!

- ஜெயஸ்ரீராஜ்

# ஸ்டார்



மற்றவர் செய்யும் குற்றங்களை, தம் தோள் மீது சுமக்க துட்டு வாங்கும் பிரசாந்த், சம்மர் வெக்கேஷன் மாதிரி அடிக்கடி ஜெயிலுக்குப் போகும் தொழில் முறை கைதி!

விஜயகுமாரின் மக



னைக் கொல்லத் துடிக்கும் ரகுவரனிடம், பிரசாந்தைக் காட்டி, 'இவன்தான் என் மகன்' என்று டிராமா போடுகிறார் கலெக்டர் விஜயகுமார். ஒரு பக்கம் ரகுவரன் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு பிரசாந்தைத் துரத்த, காதல், காதல் என்ற புலம்பலோடு ஜோதிகாவைத் துரத்துகிறார் பிரசாந்த்! இடையிடையே அம்மா பாசம், அப்பா சென்டிமெண்ட் என்று சீரியஸாகப் போகும் கதையைக் காமெடிப் படம் மாதிரி எடுத்து நம் கழுத்தை, துருப்பிடித்த ரம்பத் திரைக்கதையால் அறுக்கிறார்கள்.

மின்னல் வேகத்தில் நடனமாடி, சண்டை போட்டு, தேவைப்படும் போது ரொமான்ஸ், பாச மழை பொழிந்து தன் ஹீரோத்தனத்தைப் பிரசாந்த் நிரூபிக்கிறார். ஆனாலும் கூலிக்காகப் பலியிடப்படும் பாத்திரத்தை ஏற்றாலும் ஏற்றார், நிஜமாகவே இந்தப் படத்தில் அவர் பலியாக்கப்பட்டிருப்பது வெளிப்படை.

ஜோதிகாவின் நடிப்பில் சென்டிமீட்டர் அளவு கூட முன்னேற்றம் இல்லை. அதனால்தானே என்னவோ, அவரை முன்னேற்ற முடிவு செய்து, தமிழ் அகராதியில் இல்லாத கெட்ட வார்த்தைகளை வாய் கூசாமல் பேச வைத்திருப்பது அபத்தம்.

கடவுளே! ரகுவரனை இப்படி ஹிப்பித் தலை வில்லனாக, கையில் தீபாவளி கேப் துப்பாக்கியைக் கொடுத்து, அசட்டுத்தனமாய்ச் சிரிக்க வைத்து, எத்தனை நாளைக்குக் காட்டுவார்களோ! (சாப்பிட மறுக்கும் குழந்தைகளுக்கு இதோ பார் பிள்ளை பிடிக்கிறவன் என்று இனி அம்மாக்கள், ரகுவரனின் இந்த உருவத்தைக் காட்டலாம்!)

விஜயகுமாரின் மகனாக வந்து கலக்கும் படத்தின் இயக்குனர் ப்ரவின்காந்தின் நடிப்பில் அமெச்சூர்தனம் அங்கங்கே எட்டிப்பார்க்கிறது. (நடிப்பிற்காக டைரக்ஷனைக் கோட்டை விடலாமுங்களா?)

படத்தில் பளிச்சென்று கண்ணுக்குத் தெரிவது ப்ரியனின் படப்பிடிப்பு மட்டும்தான்.

'தாள்' (தாளம்) ஹிந்திப் படத்திற்காக ரகுமான் போட்ட டியூன்களை வைத்துக் கொண்டு, அதற்குப் பொருத்தமாய்க் கதை எழுதும் சோதனை முயற்சியில் இறங்கி நம்மைச் சோதித்து விட்டார்கள்!

'டைம் கில்லிங்' என்று அலறுகிற யாரும் தப்பித் தவறி தியேட்டர் பக்கம் போய்விட வேண்டாம்.


— விஷுவல்தாசன்

• அவரெஜ்

Together can we do it

1976 - 2001

# சிலிண்டர் ஒரே அளவு - குடும்பமும் ஒரே அளவு - ஆனால் சிலிண்டரை உபயோகிப்பதில்தான் எத்தனை வேறுபாடு!



சமையல்காரர் உபயோகிக்கும் பொழுது 18 நாட்களுக்கு வரும்

இல்லத்தரசி உபயோகிக்கும்பொழுது சற்றே அக்கறையின்மையினால் அதே சிலிண்டர் 24 நாட்களுக்கு வருகிறது.

PCRAவின் LPG சேமிப்பு வழிமுறைகளைக் கையாண்டதால் அதே சிலிண்டர் அதே இல்லத்தரசிக்கு 36 நாட்களுக்கு வருகிறது.

PCRAவின் LPG சேமிப்பு வழிமுறைகளைக் கையாண்டு, கூடவே சோலார் குக்கரையும் உபயோகித்தால் 48 நாட்களுக்கு வருகிறது.

## PCRA வின் LPG சிக்கன வழிமுறைகள் :

* பிரஷர் குக்கரை உபயோகிக்கவும்
* கொதிக்க ஆரம்பித்தவுடன் தீயைக் குறைக்கவும்
* சமைக்கும்போது பாத்திரங்களை மூடி வைக்கவும்
* பருப்பு வகைகளை சமைப்பதற்கு முதல் நாள் இரவே ஊற வைக்கவும்.
* முதலில் சிறிய பர்னரை எரிய வைக்கவும். அடிக்கடி பர்னரை சுத்தப்படுத்தவும்.
* அகலமான அதிக ஆழமில்லாத பாத்திரங்களை சமைப்பதற்கு உபயோகிக்கவும்.

# Some women add life to everything!




Please note our new address

**Petroleum Conservation Research Association**
Sanrakshan Bhavan, 10 Bhikaji Cama Place
New Delhi -110066 Tel:6198809,6198856
Fax: 6109668 E-mail: pcrad@del2.vsnl.net.in
Visit us at : www.pcra.org

nsa/PCRA/94/01

WHERE CONSERVATION FAILS, POLLUTION STARTS • OIL CONSERVATION FOR A CLEAN ENVIRONMENT



# நெரிசல்

அடுத்த வீட்டுப் பெண்ணின்
வித்தியாசமான பார்வை

அப்துல்லா வைத்திருந்த
ஆட்டுக்கடை அரிவாள்

போனமாசம் வாங்கிய
சேட்டுக் கடை பாக்கி

தெருவில் ஓடிய
தண்ணீர் லாரிச் சப்தம்

காலைப் பேப்பரில் வந்த
கடுக்காய்ச் சூர்ண விளம்பரம்

ஆட்சி நிற்குமா கவிழுமா என்ற
அவசியமான கவலை

பத்து நாள் லீவுக்கு அப்புறம்
பாக்கி வைத்த சர்க்கார் வேலை

எல்லாம் நினைவுக்கு வந்து
நெரிசல் உண்டாக்கின

மூணு நிமிஷம் விளக்கேற்றித்
திருவாசகம் சொன்னபோது!

**சுப்ர. பாலன்**

# ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ®

## அறிமுகப்படுத்தும்

# கல்யாண சீர்பலகாரங்கள்



**எல்லா சீர்பலகாரங்களையும் வகைக்கு ஒன்றாக வைத்து அதற்காகவே வடிவமைக்கப்பட்ட அழகிய சீர்பலகார பெட்டிகளில் வழங்குகிறோம்.**

**பரிசளிக்க, சீர்வரிசைக்கு புதுமையானவை.**

**ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ®**

பாண்டி பஜார், சென்னை, போன் : 4312345
காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை, போன் : 4413805
அண்ணா நகர், சென்னை, போன் : 6192345

DIMENSIONS

## அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி: ரூ. 3000 இரண்டாம் பரிசு பெறும் கதை

**சாம்பவி**

இருபது வருடம் கழித்து எனக்கு மதுரை மேலமாசி வீதியின் முழு விஸ்தாரத்தில் நடக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. பண்டிகைக் காலங்களில் மீனாட்சியம்மன் கோவிலை மையமாக வைத்து ஒரு கிலோ மீட்டர் விட்டத்தில் கனவாகனங்கள் செல்ல முடியாமல் போய் பல வருடங்கள் ஆகி விட்டதால், அனைவருக்குமே மாசி வீதிகளிலோ, ஆவணி வீதிகளிலோ ஓரிரு கிலோமீட்டர்கள் நடக்கும் வாய்ப்பு ஏற்படாமல் போகாது. ஆடுசதையில் அலை அலையாக வலி கிளம்ப அந்த வலியின் சுகத்தை அனுபவித்தால்தான் உணர முடியும்.

"என்னால் ஒரு அடிகூட நடக்க முடியாது" ஆங்கில 'வி'யைக் கவிழ்த்தது போல கால்களைப் பரப்பியபடி என் பத்து வயது மகன் நடுவீதியில் நின்றான். நாங்கள் கடந்த இருபது வருடமாக வசித்து வரும் பெங்களூர் பெருநகரத்தில் இரண்டு சக்கர வண்டியில் பயணப்பட்டுப் பழகிப் போன அவனுக்கு நடப்பது வலித்தது.


"அப்படியே உன்னைக் கொண்டிருக்கிறான்" உடன் வந்த என் மூத்த சகோதரி என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"உனக்கு ஞாபகம் இருக்கா சுரேஷ்? அம்மா நம்ம எல்லாரையும் கூட்டிண்டு மீனாட்சி கல்யாணத்துக்குப் போவா. கரும்பு ஜூஸ் இல்லை என்றால் ரிக்ஷா சவாரி என்பாள். நாம் நல்ல பிள்ளைகள் மாதிரி கரும்புச்சாறைக் குடிப்போம். நீ ஒருவன்தான் சாமர்த்தியமாக ஜூஸையும் குடிச்சிட்டு, ரிக்ஷாவிலும் போகணும்னு அடம் பிடிப்பே."

என் மகன் சற்றுமுன்னர்தான் ஓர் ஐஸ் கிரீம் பார்லரில் பெரிய ப்ளாஸ்டிக் குவளை நிரம்ப இளஞ்சிவப்பு நிற ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறான்.

"ரிக்ஷாக்கள் மாறவில்லை" என்றேன்.

காக்கித்துணியில் மேல் உறை, பச்சை, சிவப்பு நிற காடி வர்ணம், ணங், ணங் என கயிற்றில் கட்டி ஒலி எழுப்பும் மணிகள். நமது தூக்கிவாரிப் போடல் கலைவதற்குள் நம்மைக் கடந்து போய்விடும் வேகம். மூன்றுவேளை சோற்றுக்காகத் தொடைகளையும், கெண்டைக்



கால்களையும் பிழிந்து, ட்ராயர் தெரிய கைலியை மடித்துக் கட்டியபடி ரிக்ஷா ஓட்டுபவர்கள் மாறவில்லை.

"வேற எதுவெல்லாம் மாறவில்லை?" என்றான் என் மகன். அவன் இன்னும் தன் 'வீ' நிலையிலிருந்து மாறாமல் நின்றான்.

இதோ இந்த மேலமாசி வீதி, நாடக செட் போட்டது போல இம்மி இடமின்றி வரிசையாக நிற்கும் கட்டடங்கள், ப்ளாட்பாரத்தில் இடுதிப்பென்று வீதியை அடைத்துக்கொண்டு ஆயாக்கள் நடத்தும் இட்லிக்கடை, எவர் சில்வர் பாத்திரத்தில், பயமுறுத்தும் குரலில் 'பருத்திப்பால்' என்ற கூவல், நேரு பிள்ளையார், புழுதி படர்ந்த அவர் சாய்ந்து கொண்டிருக்கும் அரச மரம்... எதுதான் மாறியிருக்கிறது?

"மாற்றம் ஒன்றைத் தவிர நிரந்தரம் எதுவுமில்லைன்னு நீதானே சொல்லுவ?" என் சகோதரி தூண்டிவிட்டாள்.

"மீனாட்சி கோவிலில், வசந்த மண்டபத்தில், அம்மன் சன்னதியில் என என்னால் இருபது வருஷம் மாறாத விஷயங்களைக் காட்ட முடியும். வசந்த மண்டப புஸ்தகக் கடைகளில் இன்றும் கூட்டத்தில் எம்பி, எம்பி சிறுவர்களின் பெற்றோர்கள் புஸ்தகம் வாங்கியபடி இருப்பது மாறி இருக்கிறதா?" மாறாதவற்றைப் பட்டியலிடும் என் ஆர்வம் அதிகமானது.

"அப்படி என்ன பிடிவாதம் சாயபு கடையில்தான் துணி வாங்கணும்னு?" என்றாள் என் சகோதரி.

அந்தச் சாயபு கடை என் நினைவிலிருந்து மாறவே இல்லை. தீபாவளி, பொங்கல், சித்திரை மாதத்தில் வரும் என் பிறந்த நாள் எல்லாவற்றிற்கும் என் சிறு பருவத்தில் அம்மா இங்கே வந்துதான் துணி எடுப்பாள். அப்பா

# மாறுதல்



வின் மோட்டார் நிறுவன வேலைக்குக் கடன் வசதி அந்தக் கடையில் உண்டு என்பதும் ஒரு காரணம். அம்மாவின் சிவப்பு நிற ரப்பர் வளையலும், அந்துருண்டை மணக்கும் சின்னாளப் பட்டுப் புடைவையும் ஒரு சேர எழுந்தது. நூறு பண்டிகைகள் வந்துவிட்டன. முப்பத்தியேழு பிறந்த

நாள் வந்துவிட்டது. ஆனால் எனது ஒன்பதாவது பிறந்த நாளுக்கு முந்தைய தினம், அவசர அவசரமாக என்னை மட்டும் பத்தொன்பதாம் நம்பர் பஸ்ஸில் அழைத்துக்கொண்டு போய் சாயபு கடையில் வாங்கிக் கொடுத்த கறுப்பு நிற நிக்கரும், ரோஸ் வண்ண மேல் சட்டையும் அது ஏற்படுத்திய சந்தோஷமும் வேறு எந்தப் புது உடுப்பும் ஏற்படுத்தவில்லை.

"எனக்குப் பாண்டி அண்ணாச்சியைப் பார்க்கணும்" என்றேன்.

சாயபுக்கடை என்பதைவிட பாண்டி அண்ணாச்சி கடை என்றுதான் எங்களுக்கு ஞாபகம். வெண்ணிற வேட்டியும், நீல நிற சட்டையும், வெள்ளை விபூதியும், சிவப்பு நிறப் பொட்டும் அவரது ஸ்தூல அடையாளங்கள். பெரிதாகச் சிரிக்கும்பொழுது மேல் ஈறு தெரியும். அம்மா வாசல் திண்ணையில் அமர்ந்து பிற குடியிருப்புப் பெண்களுடன் பேசும்பொழுது பாண்டி அண்ணாச்சி சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, வேட்டியைத் தொடையில் இறுக்கிக்கொண்டு ஒரு காலை சைக்கிளின் பின்னால் மடக்கி வைத்து தானும் பேச்சில் கலந்து கொள்வார். அப்பா வேலை பார்த்து வந்த அய்யங்கார் நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்களுக்குச் சாயபு கடையில் கடன் சலுகைகள் உண்டு என சொன்னது பாண்டி அண்ணாச்சிதான். அதன் காரணமாக அம்மாவுக்கு அண்ணாச்சி மேல் கூடுதல் அபிமானமும், மரியாதையும் உண்டு.

"நீ சொல்லும் அண்ணாச்சி அப்படியே இருப்பாருன்னு நம்பறியாப்பா?" என் மகன் கிட்டத்தட்ட என் அலைவரிசையை நெருங்கி வந்து, என் தேடலில் கலந்துகொண்டதால் இது வரை அவன் அவதிப்பட்ட வலி மறந்து போயிருந்தது.

"அப்படியே என்றால் எப்படி?" என்றேன் அவனை முடுக்கிவிட்டபடி.

"வெள்ள வேஷ்டி, நீலச்சட்டை, குங்குமப் பொட்டு, ஈறு தெரியற சிரிப்பு இதெல்லாம்..."

"ஆமாம்" என்றேன்.

"அய்ய இருபது வருஷம் கழிச்சும் ஒரு ஆள் அப்படியே இருக்க முடியுமா?"

"முடியும்."

"தோல் சுருங்கி, கண்பார்வை குறைஞ்சு, தலை நரைச்சு ஓல்டா ஆயிருப்பாரு."

"மாட்டார்."

"என்ன பந்தயம்?" என்றான்.

"எது வேணாலும்."

"திருநகர் வரைக்கும் ரிடன் ஆட்டோவில் போகணும்" என்றான் கண்கள் மின்ன. வண்டிகளில் முகவிளக்கு ஒளிக் கற்றைகள் என் மகன் முகத்தில் பட்டுத் தெறிக்க, அவன் கன்னங்களின் பூரிப்பு மின்னிக் கொண்டிருந்தது.

"ஜீன் (Gene) என்பது கூட மாறாதது. சிறு வயதில் உன் கன்னமும், கண்களும் எப்படி இருந்ததோ அப்படியேதான் உன் மகன் ராகுலும் இருக்கான்" என்றாள் என் சகோதரி.

"அய்யோ! மறுபடியும் மாறுதல் பற்றியா?" என என் மகன் போலியாகத் தலையில் கைகளை வைத்துக்கொண்டான்.

அண்ணாச்சி பசங்களுடன் எங்களது ஒவ்வொரு தீபாவளியும் கழியும். போஸ் ரத்னம், பரமேஸ்வரி, தனம். தீபாவளி முதல் நாள் வரையில் சாயபு கடையில் போனஸ் கொடுக்கமாட்டார்கள். இத்தனைக்கும் என் தந்தைக்கு அமைந்ததைப்போல பஞ்சப்படி, சலுகைகளுடன் கூடிய சம்பளம் அண்ணாச்சிக்கும் கிடைத்ததாக நினைவில்லை. என் பதினேழு வருட பிராயத்து நினைவுகளை உலுக்கிப் பார்க்கும்பொழுது அவர் மாத வருமானம் முந்நூறிலிருந்து நாநூறு வரைதான் இருக்கும். அப்பாவைப் போல சாயபுவுக்கு எட்டு மணி நேர வேலை, அட்டவணை விடுப்பு நாட்கள் என்ற நியதிகள் கிடையாது. ஒன்பது மணிக்கு ஒரு மஞ்சள் பையில்



தூக்குச் சட்டியைப் போட்டுக்கொண்டு கிளம்பினார் என்றால் இரவு ஒன்பதரை மணிக்கு நான் வெராந்தாவில் பாடங்களை நடந்து, நடந்து படிக்கும் சமயம் எதிர்ப் படுவார். அப்பொழுதும் அதே குங்குமப் பொட்டு, அதே ஈறு தெரியும் சிரிப்பு.

"மாறுதல் இல்லை மாறுதல் இல்லைங்கறியே இருபது வருஷத்துக்கு முன்னால் அரிசி விலை எவ்வளவு? கிலோ ரெண்டு ரூபாய்! இப்ப கிலோ இருபது ரூபாய்."

"அப்ப வாங்கின ஐந்நூறு ரூபாய் சம்பளமா இப்ப வாங்கறோம்?" என்றேன் நான்.

இறுதியில் மோட்டார் வைத்த ரிக்ஷாவில் செல்வதாக முடிவானது. ஜன வெள்ளத்தைக் கடந்து, தீபாவளி வார இரவுகளில் மீனாட்சி கோவில் ஒட்டிய வீதிகளில் செல்வதைப் போல ஒரு சுகம் தரும் அனுபவம் எதுவும் இராது என நினைக்கிறேன்.

மதுரையின் பலம் மீனாட்சி கிடையாது. எட்டு பட்டிகளிலிருந்தும் நாள் தோறும் வீதி வீதியாக வந்து குவியும் ஜனங்கள் எனத்

தோன்றியது.

"விளக்குத்தூண் பக்கம் இராத்திரி தீபா வளிக்கு முதல்நாள் அலைஞ்சிட்டு வருவோமே ஞாபகம் இருக்கா. கடைசி மணித்துளி ஆவேச வியாபாரத்தைப் பார்க்க ஓடுவோமே?"

"என்ன த்ரில்லிங் எக்ஸ்பீரியன்ஸ் இல்லை அது?"

"இப்ப சும்மாச் சொல்லக்கூடாது. ஜவுளி வியாபாரம் பெருத்து துணிகளும், புடைவை களும் சீப்படுகின்றன."

நான் பியுசி படிக்கும் பொழுதுதான் அண் ணாச்சிக்குக் கடுமையான நெஞ்சு வலி ஏற் பட்டது. சற்றேறக்குறைய பதினைந்து வருடம் ஸர்வீஸ் போட்டும் சாயுபு அதிகப்படியான மாத வருமானம் கொடுக்கவில்லை என்று ஒரு நாள் அண்ணாச்சி வேலையிலிருந்து நின்று விட்டார்.

> "பொதுக்குழு கூட்டத்துல கலந்து கிட்டவங்க எல்லா ரும் இருமுறாங் களே... ஏன்?"
> "கட்சில 'புகைச் சல்' அதிகமா யிடுச்சு!"
> — அம்பை தேவா

"சாயபு கடை வந்தாச்சு" என என் சகோதரி என்னை ஸ்தூல உலகிற்கு அழைத்து வந்தாள்.

சாயுபு கடையின் முன் முகப்பு ஒரு வட்டத்தின் ஆர்க் போல இருக்கும். பெரிய, பெரிய கண் ணாடிக் கதவுகள், காக்கிச் சீருடையில் இரண்டு காவல் காரர்கள், உயரமான கல்லா பெட்டி. கல் லாப் பெட்டியில் இருந்த சாயுபுவிடம் விசாரித்தேன்.

"கலைமான் வஹாப் இருக்காரா?"

"நான் அவரது மூத்த மகன் அஹமத். அதோ வாப்பா புடைவைப் பிரிவு பகுதியில் இருக்கார்."

கலைமான் வஹாப்பின் உடலில் நல்ல மாற்றம் தெரிந்ததால் கண்களைச் சுற்றி ஏகப் பட்ட சுருக்கம், தாடி வெளுத்து மெலிந்திருந் தது. ஆனால் எப்பொழுதும் அணியும் வெளிர் மஞ்சள் நிற ஜிப்பாவும், மூட்டிய வெள்ளை வேட்டியும்தான் அணிந்திருந்தார்.

சாயபுவிடம் இன்னார் என அறிமுகப் படுத்திக்கொண்டேன்.

"அடடே ராமசாமி பையனா? அப்பா எப் படி இருக்காரு, அம்மா எப்படி இருக்காங்க?"

"ரெண்டு பேருமே தவறிப்போய் நாலு வருஷமாகுது வஹாப்" என்றேன்.

"யா அல்லாஹ்!" ஒரு நிமிடம் கண்களை மூடிக்கொண்டு ஜிப்பா பைக்குள் கையை நுழைத்து ஜபமாலையை உருட்டி இறந்து போன என் பெற்றோருக்கு அஞ்சலி செலுத் தினார்.

"நீங்க இப்ப என்ன தம்பி பண்றீங்க?"

"பெங்களூரில் ஸாஃப்ட்வேர் என்ஜினியரா இருக்கேன். சீஃப் எக்ஸிக்யூடிவ் போஸ்ட்."

"நல்லது நம்ம கடையை மறக்காம தேடி வந்ததுக்கு ரொம்ப நன்றி தம்பி. போய் வேணுங்கற துணியைப் பாருங்க."

"எதெல்லாம் மாறியிருக்கு? எதெல்லாம் மாறலை?" என்றான், என் மகன். குரலில் கேலி தான் மிகுந்திருந்தது.

உயரமான கூரை மெட்ராஸ் ரூஃபிங். அடுக்கி வைக்கப்பட்ட துணி ராக்குகளின் பின்னால் சுவரில் பிளாஸ்டர் ஆஃப் பாரி ஸினால் மோல்டுகள் பதிக்கப்பட்டிருந்தாலும் அங்கங்கே எட்டிப் பார்க்கும் நாயக்கர் காலத்துக் கருங்கல் சுவர். எல்லாப் பிரிவு களிலும் அம்பாரமாய்க் குவித்து வைக்கப் பட்டிருக்கும் துணிகள்.

"ஜீன்ஸ் ஸெக்ஷனிலும், ரெடிமேட் ஸெக் ஷனிலும் ஒவ்வொரு கம்பெனி பேண்டும் ஷர்ட்டும் ஐந்நூறு ஆயிரம் ரூபாய்க்கு மேல தான் இருக்கு சுரேஷ். ஆயிரக்கணக்கில் அடுக்கி வெச்சிருக்காங்க. டிஸ்ப்ளேயில் மட் டும் இவ்வளவுனா ஸ்டாக் எவ்வளவு இருக் கணும்? டோட்டல் டிஸ்ப்ளே ஆஃப் ஆல் க்ளாத்ஸ் மட்டும் இரண்டு கோடியைத் தாண் டும்னு நினைக்கிறேன்" என்றாள் என் சகோதரி.

"நிஜமாகவே ஜவுளிக்கடல்" என்றான் என் மகன்.

"அப்பவே சிண்டிகேட் பாங்கில் இருபது லட்சம் கடன் வாங்கின முதல் ஜவுளிக் கடை இவங்களதுதான். இப்ப இருபது கோடி இருக் கும்."

"பாண்டி அண்ணாச்சி கிடைச்சாரா?" என்றான் என் மகன்.

ஒவ்வொரு பிரிவாகத் தேடினோம். எல்லா ஊழியர்களும் நீலநிற மேல் சட்டை தான் அணிந்திருந்தனர்.

சிறுவர்களுக்கான ஆயத்த ஆடைப் பிரி வுக்குப் போன பொழுது நான் ஸ்தம்பித்து விட் டேன். பாண்டி அண்ணாச்சி என் வர்ண னைக்குச் சற்றும் மாறாமல் வாடிக்கை யாளர்களிடம் பெட்டி, பெட்டியாகப் பிரித்து, துணி காட்டிக்கொண்டிருந்தார். அதே மேடு ஏறின சுறுப்பு நெற்றியில் பளிச்சென்று தெரி யும் வெள்ளை விபூதி. நடுவில் சிவப்புக் குங்குமம், ஈறு தெரியும் சிரிப்பு.

கடவுளே! இதென்ன இப்படி ஒரு அதி சயம்! பாண்டி அண்ணாச்சி என்ன காலத் தின் சவாலா? அல்லது காலத்தின் அதிசயமா? இருபது வருடம் கழிந்த பின்னரும் மாறாத உடல் அமைப்புடன் மாறாத ஊழியராக...

## ராவ் பாடிய பாட்டு!

டெல்லி இந்திராகாந்தி நேஷனல் சென்ட்டர் ஃபார் ஆர்ட்ஸ்' சார்பில் தியாகராஜர் கிருதிகள் தொகுப்பினை முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் சமீபத்தில் வெளியிட்டார். இத் தொகுப்பை வழங்கியவர் பிரபல கர்னாடக சங்கீத வித்வானும், முசிறியின் பிரதம சிஷ்யருமான டி.கே. கோவிந்த ராவ். வெளியிட்டிற்குப் பின் சில கிருதிகளைப் பாடிய ராவ், ஒரு ராக மாலிகை பாடிக் கொண்டிருக்கும்போது, சில வரிகள் மறந்து விட, எவ்வளவோ முயன்றும், ஞாபகத்திற்கு வரவில்லை. வேறு வழியில்லாமல், ராவ் ரசிகர்களை நோக்கி, 'யாரேனும் பாட முடியுமா?' என்று கேட்க, முன் வரிசையிலிருந்து ஒரு குரல்! அந்த ராகமாலிகையின் மீதி வரிகளைப் பாடி முடித்தது.



உடனே அரங்கில் கைதட்டல். யார் பாடியது என்று எட்டிப் பார்த்தால்... அட நம்ம முன்னாள் பிரதமர் ராவ்!

— வி. மாலி

எப்படி இது சாத்தியம்?

நான் உறைந்துதான் போய்விட்டேன்.

"அதோ அவர்தான் பாண்டி அண்ணாச்சி" என என் மகனுக்குக் கை நீட்டினேன்.

என் சகோதரி கூட அவரைப் பார்த்ததும் பரவசப்பட்டாள்.

"நீங்கதான் பாண்டி அண்ணாச்சியா?" என் மகன் நேராக அவர் முன் போய் நின்று கேட்டான்.

பாண்டி அண்ணாச்சி நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

"உனக்குப் பாண்டி அண்ணாச்சியைத் தெரியுமா?" சிரித்தபடி அவர் ராகுலின் கன்னத்தைத் தட்டிவிட்டுக் கேட்டார்.

"உம்..."

"பார்த்திருக்கியா?"

"ஓ!"

"உன் வயசு என்ன?"

"பத்து."

"பாண்டி அண்ணாச்சி செத்துப்போய் பத்து வருஷமாச்சு."

என் மகன் மலங்க விழிக்க ஆரம்பிப்பதற்குள் நான் போய் நின்றேன்.

என்னை அறிமுகம் செய்துகொண்டேன்.

"சுரேசுதானே நீ? நல்லவேளை என் ஞாபகத்திற்கு இன்னும் தேய்மானம் ஏற்படலை. நான் பாண்டி அண்ணாச்சி இல்லை. அப்பா செத்துப் போய்ப் பத்து வருஷமாச்சு. நான் அவரது இரண்டாவது பையன் ரத்னம்."

பழைய விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தோம்.

"பரமேஸ்வரிக்கும், தனலட்சுமிக்கும் கல்யாணம் பண்ணி வைக்கவே அப்பா மிகவும் சிரமப்பட்டுப் போய்விட்டார். எந்த மூலைக்கும் காணாத ஒரு சம்பளம். தீபாவளிக்கு முதல் நாள் ராத்திரி பதினொரு மணி வரைக்கும் துணி விரிச்சுக் காட்டணும். போனஸை தீபாவளிக்கு முதல் நாள் இராத்திரிதான் கொடுப்பார்கள். ஒரு வாரம் முன்னாடியே கொடுத்துட்டா லீவு போட்டுடுவோமாம். அப்பாவின் அதிகப்படியான வேலை நேரம் துணிக்கடையில் கழிந்து விட்டதால் போஸ் மற்றும் எனது பள்ளிப் படிப்பைச் சரியாக கவனிக்க முடியாமல் போனது. அம்மாவுக்குப் படிப்பறிவு இல்லை. நாங்களே வளர்ந்ததால் எஸ்.எஸ்.எல்.சியைக்கூட தாண்ட முடியாமல் போனது. அப்பா திடுதிப்பென்று இறந்ததும் சாயபு, அப்பாவின் முப்பது வருஷ சர்வீஸுக்கு ரூ.5000 மட்டுமே கொடுத்தார். அதற்கே எங்க சனங்க முழுவதும் சாயபுவைப் பெரிய சக்கரவர்த்தியாகப் போற்றிப் பாடினாங்க. என்னை வேலைக்குச் சேர்த்துக் கொள்றதாச் சொன்னாங்க. யாரை எதிர்க்க முடிஞ்சது என்னால்? யாரை? ஒத்துக் கொண்டேன்" என்றான்.

வெளியில் வந்ததும் என் மகன் கேட்டான்.

"நீ தோத்துட்டியா? ஜெயிச்சுட்டியா?"

"தெரியலை" என்றேன்.

"துணிக்கடை மாறியிருக்கா, மாறலையா?"

"எல்லாம் மாறியிருக்கு. எதுவும் மாறவில்லை" என்றேன்.

"போப்பா நீ சொல்றது புரியவே இல்லை."

"உனக்குப் புரிய இருபது வருஷம் ஆகும்" என்றேன்.

"அப்பவும் பாண்டி அண்ணாச்சி இருப்பாரா?"

"இருப்பார்" என்றேன்.

யாரை எதிர்க்க முடிந்தது என்ற அவன் கேள்விக்கு விடை மட்டும் எத்தனை யுகங்கள் கழிந்து கண்டுபிடிக்கப் போகிறோமோ தெரியவில்லை. பாண்டி அண்ணாச்சிக்கும் ரத்தினத்துக்கும் அமைந்த வாழ்க்கையில் எனக்கும் பொறுப்புண்டு என்பது மட்டும் நன்றாகவே தெரிந்தது. ○

**மேஷம் :**

அளவோடு நலம் தரும் வாரமாக இருந்தாலும் உங்கள் ஆற்றலும் புத்திசாலித்தனமும் அபாரமா வெளிப்படக் கூடிய காலமிது. மோட்டா ரக அரிசிக்கு 'லெவி' கிடையாதுன்னு சொல்லியிருக்காங்களே, அதுபோல, உங்களோட புதிய முயற்சி களுக்கும் தடை ஏதும் வராது. கணவன் - மனைவி உறவு நிலை அன்பு கலந்து இருக்கும். புதன் ராசியோட பலத்தால், படிக்கிறப் பசங்களுக்கு நல்ல எதிர் காலம் 'பளிச்'னு தெரியும். கூடப் பிறந்தவங்களால ஏதேனும் பிரச்னை வரலாம்.

**ரிஷபம் :**

'குரு' மட்டுமே சிறப்பாக இருந்தாலே, குதூகலத்துக்குக் குறைவில்லேம்பாங்க. ஆனா பாருங்க. உங்க விஷயத்துல சூரியன், புதன், சுக்ரன் மூணு பேருமே 'குரு' பகவா னோட கை கோத்திருப்பதாலே, இது சிறப்பான வாரமா இருக்கற சான்ஸ் அடிச் சிருக்கு. என்ஜாய்! குடும்ப நலம் திருப்தி யாக இருக்கும். விஞ்ஞானம், ரசாயனம், மருத்துவத் துறையைச் சேர்ந்தவங்களா இருந்தா ராஜினாமா ஃபேஷன் போல தனி மவுசு கிடைச்சிடும். குடும்பத்தில் மங்கள மேளம் பொங்கி வழிய நல்ல நேரம் பார்க்க வேண்டி யிருக்கும்.

**மிதுனம் :**

இந்த வாரம் பிஃப்ட்டி, பிஃப்ட்டி வாரம்னு நீங்க கொண் டாடிக்கலாம். ஏன்னா, நன்மையும், தீமையுமா கலந்துல்ல வருது! துணிச்சல், புத்திசாலித்தனம் சூப்பரா வாக்-அவுட் ஆகும். புதிய சொத்துக்கள் வாங்கறதுக் குப் போட்ட பிளான் படு சக்சஸ் ஆகும். ஆனா ஸ்பெகுலேஷன் துறையில மட்டும் மறந்தும் காசைப் போட்டுடாதீங்க. பண முதலீடு பண்ணும்போது ரொம்ப கவனம் தேவை. பெரியவர்கள், சாதுக் கள் தரிசனம் அமைதி தரும்.

**கடகம் :**


அடேயப்பா! ரொம்ப நாளைக்கு அப்புறம் நீங்க எதிர் பார்த்த யோகமான வாரம் அமைஞ் சிருக்கு... வெளியுறவு அமைச்சகத்தின் கோப்புகளைக் கபளீகரம் செய்த 'சர்கேம்' கம்ப்யூட்டர் வைரஸ் போல, உங்களையும் ஏதேதோ குழப்ப எண்ணங்கள் பிடித்திருந் தன. அது இப்போது விலகி, செழிப்பான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இரும்பு, எஃகு, எண்ணெய் வகையறாக்கள் நல்ல லாபம் அள்ளித் தரும். தந்தையின் நல னில் அக்கறை தேவை. டாக்டர் வீட் டுக்கும் மருந்துக் கடைக்கும் ஏறி இறங்க வேண்டியிருக்கும். உஷார்.

**சிம்மம் :**

உங்க ராசிநாதனாகப் பட்ட திருவாளர் சூரியன் பகவான் 12ல் இருப்பது அவ்வளவு விசேஷ மான பலனில்லைதான். அதுக்காக மனசு சோர்ந்துடாதீங்க. குரு பலம் நல்ல ஸ்ட்ராங்கா இருக்கே. ஜமாய்ச்சடலாம். மனை, நிலம், வீடு, வாங்க இதுதான் நல்ல சான்ஸ்! பிரமாதமான ஆதாயம் இருக்கு... ட்ரை பண்ணுங்க. தடபுடலா கோயில் கட்டி, அமிதாப்புக்குத் தர்மசங்கடத்தை உருவாக்கிய கோல்கத்தா ரசிகர்கள் மாதிரி, உங்க நெருங்கிய நண்பர் களாலும் சிறுசிறு பிரச்னைகள் வரும்.

**கன்னி :**

மேட்டூர் அணை நீர் மட்டம் 'கிடுகிடு'னு குறைஞ்ச மாதிரி, உங்க டென்ஷன், பணப் பிரச்னை எல்லாமே 'மடமட'னு குறையும். மனசுல நம்பிக்கையும் துணி வும் கூடும். எதிரிகள் 'ஏண்டா இவன்கூட மோதினோம்!'னு நொந்துப் போவாங்க. கோர்ட்டு, கேஸ்ல தர்மதேவதை உங்கப் பக்கம்தான். அரசுப் பணியாளர்கள் சூரிய பலம் காரணமாக வெற்றித் திலகம் சூடுவார்கள். பெண்கள் புதிய முயற்சிகள்ல ஈடுபடக் கூடாது. வாழ்க்கைத் துணை நலம் தேவை.



**தனுசு ராசிக்காரரான கவிஞர் விஜய் வெளிநாட்டுக்குப் போக சான்ஸ் இருக்காம்.**

# நடக்குமென்பார் நடக்கும்!

**துலாம் :**

பீக் அவரில் பிரேக் டவுன் ஆன அரசு பஸ் போல கேட் பாரற்று இருந்த உங்கள் ஆற்றல் வெளிப்படும் நேரமிது. 'கப்'னு பிடிச்சுக்கிட்டு 'பட்டு'னு எகிறிடுங்க. முக வசீகரம் பளிச்சிடும். அந்தஸ்து, செல்வாக்கு எல்லாமே ஏற்றம் காட்டும். வி.ஐ.பிங்க 'உனக்கில்லாத ஹெல்ப்பா?' என்று வலிய கேட்டு உதவி செய்வார்கள். சுப காரியங்கள் குஷியாய் நடக்கும். தான, தரும பணிகளில் நாட்டம் பெருகும். இடமாற்றம், ஊதிய உயர்வு, போன்றவை அமையும்.

**விருச்சிகம் :**

'புலிகளுடன் இனி பேச்சு வார்த்தை கிடையாது'னு இலங்கை அரசு முடிவா முறிச்சுக்கிட்ட மாதிரி, நீங்க எந்த விஷயத்துலயும் அவசரம் காட்டக் கூடாது. நிதானமா, யோசிச்சு செயல்படணும். ஏன்னா, 2ல் கேது, 8ல் ராகு இருக்கிறதால, 'எடுத்தேன், கவிழ்த்தேன்'னு எதுவும் செய்யக் கூடாது. இந்த ஒரு விஷயத்துல பதவிசா நடந்துக்கிட்டாப் போதும், இந்த வாரத்தைச் சுளுவா ஓட்டிடலாம். பெண்கள் எண்ணம் நிறைவேறும். பயணம் தவிர்க்கணும். புதியவங்கக் கிட்டப் பழகும்போது எச்சரிக்கை தேவை.

**தனுசு :**

சுவாரசியமாக இருக்கும் ஸ்ரீகாந்தின் 'கிரிக்கெட் டாக்' நிகழ்ச்சிபோல, இந்த வாரம் உங்களுக்கு மிகவும் சுவாரசியமாக அமையவிருக்கிறது. குரு 7ல் இருப்பதாலும், சனி 6ல் இருப்பதாலும்தான் உங்களுக்கு இந்த லக். கல்லூரி மாணவர்களுக்குக் கலகலப்புக்குப் பஞ்சமிருக்காது. அயல்நாட்டுக்குப் போகும் அதிர்ஷ்டம் கூட அடிக்கலாம். எதுக்கும், பாஸ்போர்ட் எடுத்து வைச்சுக்குங்க. வியாபாரிகளின் கல்லாவில் சில்லரை சேரும். உஷ்ண சம்பந்தமான நோய் தாக்கலாம். முன்னெச்சரிக்கை தேவை.

**மகரம் :**

'வெறுங்கையோடு திரும்பினேன்'னு முஷாரஃப் வேணா சொல்லியிருக்கலாம். ஆனால் 11ல் ராஜ போகமாக உலவும் செவ்வாய் ஸார், உங்களை அப்படியெல்லாம் விட்டுடுவாரா என்ன? நம்பிக்கை ஏற்படும். பராக்கிரமம் வெளிப்படும். திறமை அதிகரிக்கும். நிறங்களைப் பொருத்தவரை, சிவப்புதான் உங்க லக்கி கலர். அது சம்பந்தப்பட்ட எந்த பிசினஸ் செஞ்சாலும், ஆதாயம் அள்ளிக் குவிக்கும். வெளிநாட்டு வர்த்தகம் கூட லாபம் காட்டுறதனால, அதையும் முயற்சிக்கலாம்.

**கும்பம் :**

ஒரு சின்ன பழமொழியைச் சொல்லி, உங்க ராசியை விவரிச்சுடலாம். இதுவரை 'குடத்துக்குள்ள விளக்கா இருந்தீங்க. இனிமேல் குன்றிலிட்ட விளக்கு மாதிரி பிரகாசமா ஜொலிக்கப் போறீங்க. மனசுல உற்சாகம் அதிகரிக்கும். மக்களால் நல்ல பாக்கியம் உண்டாகும். சிலருக்குத் தொட்டில், கிலுகிலுப்பை, பேபி ஃபிராக் வாங்கும் அதிர்ஷ்டம் உண்டாகும். ஞான மார்க்கத்தில் நாட்டம் உள்ளவர்களுக்குக் குரு உபதேசம் பெற வாய்ப்பு உண்டாகும். பெயர், புகழ் சேரும். சனி, ராகு ஆகியோருக்கு ப்ரீதி செய்வது நலம்.

**மீனம் :**

நான்கு முக்கிய கிரகங்கள் ஜொலிப்பான பாதையில் சஞ்சாரம் என்பதால், நீங்கள் அம்சமான யோகத்தைக் காணப் போகிறீர்கள். வாழ்த்துக்கள். வீரப்பனைத் தேடி வரும் தேவாரத்திடமிருந்து எந்தத் தகவலும் இல்லாதது போல, நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த வெளிநாட்டு வாய்ப்பு 'புஸ்' ஆகும். கலைத் துறையினருக்குக் காலம் கனிந்துள்ளது. பெண்களுக்கு உற்சாகமான பாதை புலப்படும். அலைச்சலும், மனக்கிலேசமும் அவதிப்படுத்தும். தான தருமம் செய்து வந்தால், ஆரோக்கியம் திரும்பும்.

"நான் பூ வியாபாரம் பண்ணி மாசம் ரூ 1500 சம்பாதிக்கிறேங்க; எங்க வூட்டுக்காரருக்கு ரூ 3500 சம்பளம், ஒரு கம்பெனில... எங்க ரெண்டு குழந்தைங்களையும் வாணி வித்யாலயாவுல (இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்) சேர்த்திருக்கோம். நாலாங் கிளாஸ் வரையில ஸ்கூல் ஃபீஸ் நூறு ரூபா; ட்யூஷனுக்கு 300 ரூபா; எப்படியோ கஷ்டப்பட்டுக் கட்டிடுவோம்; அஞ்சாங் கிளாஸ்லேயிருந்து ஃப்ரீதானேன்னு நினைச்சிட்டிருந்தோம். திடீர்னு ஃபீஸு மாசம் முந்நூறு ரூபான்றாங்க; ட்யூஷனுக்கு 700 ரூபாயாம்! நாங்க எங்கே போவோம்? பேசாம முனிசிபாலிடி இஸ்கூல்ல சேத்துட வேண்டியதுதான்!" ... பூவை முழும் போட்டுக்கொண்டே முனகுகிறார் வரலக்ஷ்மி. முலுண்ட் சாயிபாபா நகரில் வசிப்பவர்.

அக்கம் பக்கத்தில் இப்படிப்பட்ட பூக்காரிகள் பலர்; எல்லோருக்கும் இதே அழுகைதான்.

இப்படியே, மும்பை முழுவதிலும் மிடில் கிளாஸ், லோயர் மீடில் கிளாஸ் மக்கள் சில நாட்களாகத் தூக்கமின்றித் தவித்தனர்.

ஆங்கிலப் பள்ளிகளில் மாதம் நூற்றுக்கணக்கில் ஃபீஸ் என்பது தமிழ்நாட்டில் பழகிப் போன விஷயம். மகாராஷ்ட்ரத்துக்குப் புதிது.



• போராட்டத்தில் கனிஷ்கத்

# சஸ்பெண்ட் சர்க்குலர்!

மாநிலத்திலுள்ள உயர்நிலை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அரசு முழு மான்யம் வழங்குவதால், ஐந்தாவதுக்கு 5 ரூபாய், ஆறாவதுக்கு 6 ரூபாய் ... பத்தாவதுக்கு 10 ரூபாய் என்பதாகத்தான் இதுநாள் வரை மாதாந்திரக் கட்டணம் இருந்து வந்தது. இதனால் எல்லோரும் தம் குழந்தைகளை ஆங்கில மீடியப் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்தார்கள்... அல்லது வைக்க முடிந்தது. ஆனால் இந்த ஜூன் மாதம், கல்வித் துறையிலிருந்து வந்த சர்க்குலர் ஒன்று எல்லோரையும் கதி கலங்க வைத்தது.

"இனி மும்பையிலுள்ள ஆங்கிலப் பள்ளிகளுக்கு (175) 50% மானியம் ரத்தாகும்; ஏனைய இடங்களிலுள்ள பள்ளிகளுக்கு (225), 20% கட்! குழந்தைகளிடமிருந்து ஃபீஸ் வசூலித்து இந்தத் தொகையைப் பள்ளிகள் ஈடுகட்டவும்" என்று அறிக்கை வெளியிட்டது. இதில், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களுக்கு மட்டும் ஃபீஸ் வேண்டாம் என்ற விதி விலக்கு. இது மும்பை முழுவதிலும் எக்கச்சக்க எதிர்ப்பைக் கிளப்பிவிட்டது.

பெற்றோரும் குழந்தைகளும் சும்மா இருப்பார்களா? ஆங்காங்கே குழுக்களமைத்து போராட்டம் துவங்கிவிட்டனர்.

நாளுக்கு நாள் வலுத்த எதிர்ப்புக் குரல்களும், ரயில் மறியல்களும், போராட்டங்களும், விலாஸ்ராவ் தேஷ் முக் அரசை ஆட்டிப் படைத்துவிட்டன. ஒருவழியாக மனம் மாறி, "சர்குலர் சஸ்பெண்டட்" என்று முதல்வர் அசெம்ப்ளியில் அறிவித்துவிட்டார்.


ஆங்கிலக் கல்விக்கு மும்பையில் கிடைத்த அடிப்படை வெற்றி இது!

— ஜெ.ஆர்

# குறையொன்றுமில்லை

'ஆல மா மரத்தின் இலை மேல்' என்ற பாசுரத்தில் இரண்டு இடத்திலே 'ஐயோ' என்று வருகிறது!

அடியேன் வெறுமே 'ஐயோ' என்று சொன்னேனானால் அடிக்க வருவார்கள் எல்லோரும். ஆனால் இந்தப் பாசுரத்தைச் சொல்கிறபோது 'ஐயோ!' என்று சொல்லித்தான் ஆக வேண்டும். ஒரு கட்டத்துக்கு மேல் ஓடவில்லை ஆழ்வாருக்கு! அந்த எம்பெருமான் அப்படி ஈர்க்கிறான் அவரை! அந்த ரங்கநாதன் இருக்கிறானே, அந்தத் திருமேனி அப்படியே ஆழ்வாரை இழுத்துக் கொண்டு போக, 'ஐயோ!' என்கிறார்.




ஒரு சின்ன வடபத்ர சாயி – பாலம் முகுந்தம் – அந்த வடபத்திரத்திலே சயனித்துக் கொண்டிருக்கிறான். அவ்வளவு விச்வத்தையும் தன்னுள்ளே கொண்டவன் எம்பெருமான், சர்வத்தையும் தன்னுள்ளே அடக்கியவன்... அவன் ஓர் இளம் தளிரிலே படுத்துக் கொண்டிருக்கிறான்! இதுதான் அகடித கடனா சாமர்த்தியம் என்று சொன்னேன்!

திருப்பாவையிலே பாருங்கள் – 'மாலே மணி வண்ணா' என்று துதித்து, 'ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய்' என்று கேட்கிறாள் ஆண்டாள்.


'ஒன்றுமே வேண்டாம்... உன்னிடத்திலே துயிலெழுப்பத்தான் வந்தோம்... கைங்கர்யம் பண்ணுவதற்காக வந்தோம். வேறு எதையுமே விரும்பவில்லை. 'தூயோமாய் வந்தோம்; துயிலெழப் பாடுவான்' என்று சொல்லிவிட்டு... 'என்ன வேண்டும்?' என்று பகவான் கேட்டபோது 'எதுவும் இல்லை, எதுவும் இல்லை' என்று சொல்லிவிட்டு... கடைசியில் இந்தப் பாசுரத்தில் பெரிய்ய்ய்ய பட்டியல்! நீ...ள, அது வேண்டும், இது வேண்டும்... சங்கம் வேண்டும் சக்கரம் வேண்டும்...' என்கிறாள்.

பகவான் பார்த்தான் : 'என்னாலே கொடுக்க முடியுமா இத்தனையும்?' என்று கேட்டான்.



# 24

"உன்னால் முடியாதது கூட உண்டா?... ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய்!" என்று சொல்கிறாள். "உன்னுடைய சாமர்த்தியம் என்ன, நீ எப்படிப்பட்டவன் என்பது எங்களுக்குத் தெரியாதா...? ஓர் இளம் தளிரிலே கடலேழும் வானகமும் வையகமும் எஞ்சாமல் வைத்தடக்கிக் காக்கும் பிரான். எல்லாவற்றையும் உள்ளடக்கி விச்வமாக இருக்கக்கூடிய நீ எவ்வளவு பளு உடையவன்! அவ்வளவு பளு உடையவன் இந்த இளம் தளிரிலே படுத்துக் கொண்டிருக்கிறான் என்றால், இந்தத் தளிர் உன்னைத் தாங்குகிறதா? நீ அதைத் தாங்குகிறாயா? யாரைப் பார்த்துக் காது குத்துகிறாய் இங்கே!" - பகவானைப் பார்த்து ஆண்டாள் கேட்கிறாள்!



ஆலின் இலையாய் - ஆலின் நிலையாய் என்று இரண்டு பாருள் கொள்ளலாம் இதற்கு. ஆலமர வித்து மாதிரி முழு பீஜம் என்று ஓர் அர்த்தம். சின்ன வித்திலேயிருந்து எவ்வளவு பெரிய விருக்ஷம் வருகிறது! பகவானிடத்திலேயிருந்து சகலமும் வருகிறது என்று அர்த்தம்.

அந்த இலை மேல் அழகாகப் படுத்துக் கொண்டிருப்பவன், இலை தன்னைத் தாங்குகிறார்போல காட்டுகிறானேயொழிய அது நிஜமில்லை. கோபுரத்தைப் பொம்மை தாங்குகிறது என்று சொல்வதைப் போலத் தான்!

பெரிய பெரிய கோபுரத்திலெல்லாம் பார்க்கலாம். அடி மட்டத்திலே பொம்மை ஒன்று அப்படி கையை, தாங்குகிற பாவத்தில் வைத்துக் கொண்டிருக்கும்! அவ்வளவு பெரிய கோபுரத்தையும் அதுதான் தாங்குகிற மாதிரி தெரியும். ஆனால், ஏதாவது சம்பந்தமுண்டோ!

உலகத்திலே பார்த்தால், மீதியெல்லாம் நம்மைத் தாங்கி நிற்கிறது என்று நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால், எதுவும் தாங்குவதில்லை நம்மை! அவன்தான் தாங்கி நிற்கிறான். மீதி அனைத்துமே கோபுரம் தாங்கிகளைப் போலத்தான்!

ஆகையினாலேயேதான் ஆண்டாள் சொல்கிறாள்: "நீதான் அந்த இளந்தளிரையும் தாங்கிக் கொண்டிருக்கிறாய்..."

**ஸ்ரீ**வத்ஸ கோத்திரத்துக்கு ஒரு ஏற்றம் உண்டு. ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு ஏற்றம் - அதிலே ஸ்ரீவத்ஸ கோத்திரத்தின் ஏற்றம் என்னவென்றால் விஷ்ணுவினுடைய பரதத்வத்தைப் பேசிய கோத்திரம் அது. விஷ்ணுவே பரதெய்வம் என்று காட்டிக் கொடுத்தவர் ஸ்ரீவத்ஸ மஹரிஷி. இதை வேதமே சொல்கிறது.

பூர்வ காலத்திலே ஒரு பெரிய சதஸ். அந்த சதஸிலே கலந்து கொள்ளாத மஹரிஷிகளே கிடையாது. அங்கே எல்லா மஹரிஷிகளும் உட்கார்ந்திருக்கிறபோது திடீரென்று வசிஷ்டர் பேசினார். 'உலகம் யாரால் தாங்கப்படுகிறது?' என்று ஒரு கேள்வி எழுப்பினார்.

எல்லா மஹரிஷிகளும் வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருக்கிறார்கள். ஒருத்தருக்கும் பதில் எதுவும் தெரியவில்லை.

"எல்லோரும் இப்படி மௌனமாக இருக்கிறீர்களே...?" என்கிறார்.

ஸ்ரீவத்ஸ மஹரிஷி உட்கார்ந்திருக்கிறார் அந்த சதஸிலே... அவர் எழுந்தார். எழுந்து பதில் சொன்னார். அருணத்திலே வருகிற அந்த மந்திரம் ரொம்ப அழகு.

விஷ்ணுனா வித்ருதே பூமி:

"ஏன் வாயை மூடிக் கொண்டு இருக்கிறீர்கள்? இருப்பதைச் சொல்வதற்கு என்ன தயக்கம்? விஷ்ணுவினால் இந்த உலகம் தரிக்கப்படுகிறது."

ஸ்ரீவத்ஸ மஹரிஷி இதைச் சொல்லி உலகத்துக்குக் காட்டினார். எல்லோரும் ஆமோதித்தார்கள். அதுதான் சத்யம் என்பதை அத்தனை மஹரிஷிகளும் ஒப்புக் கொண்டார்கள். ஆகையினாலே இதைத் தாங்குபவன் - உலகத்தை- பூமியைத் தாங்குபவன் அவன்தான்.

பூத க்ருத் - சமஸ்தத்தையும் உண்டாக்கியவன்

பூத ப்ருத் - சமஸ்தத்தையும் தரிப்பவன். சமஸ்த பூதங்களையும் சராசரங்களையும்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

தரிக்கிறான் பரமாத்மா.

எப்படி தரிக்கிறான்...? ஆல இளம் தளிர் மேலே படுத்துக் கொண்டு தரிக்கிறான்! அவனுக்குத் துளிக்கூட பளுவே கிடையாது! சங்கல்ப மாத்திரத்தினாலே சமஸ்தத்தையும் தாங்குகிறான்.

ஒரு பெரிய மூட்டையைத் தலையில் ஒருத்தன் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறான். எப்போது இறக்கி வைப்பார்கள் என்று அவன் ஏங்கி நிற்பான். பளு அவன் தலையை அழுத்துகிறது! அந்த மாதிரி சிரமப்பட்டுக் கொண்டா பரமாத்மா தாங்குகிறான், என்றால் இல்லை! அது இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தானானால் அப்படியே இருக்கும். சங்கல்ப மாத்திரத்தினாலே சமஸ்தத்தையும் தாங்குகிறான் பரமாத்மா.

தொன்னையிலே நெய் வைத்துக் கொண்டு யக்ஞம் நடத்துகிறார்கள். தொன்னையை நெய் தாங்குகிறது என்று யாராவது சொன்னால் ஏற்க முடியுமா? அது பிரத்யக்ஷம் இல்லையே. ஆனால் தர்க்க சாஸ்திர ரீதியாக தொன்னையை நெய் தாங்குகிறது என்று நிரூபித்து விடலாம்.

ஆதாரம், ஆதேயம் என்று தர்க்க சாஸ்திரத்தில் உண்டு. ஆதாரம் என்பது தாங்குவது. ஆதேயம் என்பது தாங்கப்படுவது. நெய் ஆதாரமா தொன்னை ஆதாரமா என்று கேட்டால், தர்க்கம் படித்தவர்கள் 'ஆதாரம் நெய், தொன்னை ஆதேயம்' என்பார்கள்.

யக்ஞத்திலே என்ன முக்கியம்?... நெய் தானே! நெய்யே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், தொன்னைக்கு என்ன வேலை! ஆகவே தொன்னைக்கு நெய்தான் ஆதாரம் என்று நிரூபணம் பண்ணிவிட்டார்கள்.

## அருள்வாக்கு

**வா**யில்லா ஜீவன் என்று சொல்லப்படுகிற வர்க்கத்தைச் சேர்ந்ததே பசு. அப்படியிருந்தாலும் அது 'அம்மா' என்று அடிவயிற்றிலிருந்து வாய்விட்டுக் குரல் கொடுக்கிறது. 'அம்மா' என்று சொல்கிற அந்தப் பசுவே நமக்கெல்லாம் அம்மாவாக இருக்கிறது. அம்மாவின் முதல் லக்ஷணம் என்ன? பால் கொடுப்பதுதான். நாம் குழந்தையாயிருந்தபோது நம்மைப் பெற்றெடுத்த தாயார் நமக்குப் பாலூட்டி உயிரூட்டினாள். அந்தக் குழந்தைப் பிராயத்திலேயே பசுவும் நமக்குப் பால் கொடுத்து ப்ராண ரக்ஷை தந்தது. பெற்ற தாய் பால் கொடுப்பது நம்முடைய குழந்தைப் பருவத்தோடு முடிந்து விட்டது. ஆனால் நமக்கு வயதான பின்னரும் பசு தரும் பாலும், அதிலிருந்து

அதைப் போலத்தான் இளந்தளிரிலே படுத்துக் கொண்டிருக்கிற பரமாத்மா அந்தத் தளிரையும் சேர்த்துத் தாங்குகிறான்.

மார்க்கண்டேய மஹரிஷி பிரளய காலத்திலே நேரே பார்த்து ஸ்தோத்திரம் பண்ணுகிறார் - எம்பெருமானை. பூரண ஆயுளைப் பெற்றவரானதனாலே பிரளய காலத்திலேயும் கூட எம்பெருமானை ஆல இலையிலே பார்க்கும்படியான பாக்கியம் பெற்றார். அத்தனை இளம் தளிரால் அந்த பளுவைத் தாங்க முடியுமா...? அதையும் தாங்கிக் கொண்டு சர்வத்தையும் தாங்குபவன் பரமாத்மாதான்!

**இ**வ்வளவு உயர்ந்தவனாய் இருக்கக் கூடிய எம்பெருமான்தான் உலகத்திலே பிறக்கிறான். சங்கல்பம் பண்ணிக் கொண்டு

## கொள்ளை கொண்டன எங்கள் மனத்தை!



♦ பொன்னியின் செல்வனை மூன்றாம் முறையாகப் படித்தாலும், அடடே... அதற்குள் முடிந்து விட்டதே என்ற ஏக்கம்தான் கடைசியில் ஏற்பட்டது. கதையில் உலா வந்தவர்கள் கல்கியோடு இருக்கும் பத்மவாசனின் படங்கள், கொள்ளை கொண்டன எங்கள் மனத்தை! அதுவும் அந்த உள் அட்டை வண்ணப்படம் அற்புதம்!

விஜயா இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

♦ கிராஃபிக்ஸில் இன்று உலகையே கலக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பத்மவாசன், ஓவியத்தையே ஒரு காவியமாக, கிராஃபிக்ஸோ என்று நினைக்கத் தூண்டும் வகையில் அழகாகப் படைத்துள்ளார். அவரது கைக்கும் தூரிகைக்கும் கல்கி

பெறப்படுகிற தயிர், மோர், நெய் ஆகியனவும் நம் ஆஹாரத்தில் தொடர்ந்து இடம் பெறுகின்றன. ரொம்பவும் வயஸான தசையிலும், மற்ற ஆஹாரங்கள் குறைந்து அல்லது நின்றே போன நிலையிலும் ஒரு மனிதருடைய உடலில் உயிரை நிறுத்திக் கொடுக்கும் உணவாகப் பசு தருகிற பாலே இருக்கிறது. நம்முடைய ஆயுளின் ஆரம்பத்தில் ஒரு குறுகிய கால கட்டத்தில் மாத்திரம் நம்மைப் பெற்றெடுத்த தாய் பால் தருகிறாளென்றால் பசுவோ நம்முடைய ஆயுள்காலம் பூராவும் பால் தருகிறது. அதனால்தான் உறவுகளிலேயே பரமோத்தமமான தாயுறவைப் பசுவுக்குத் தந்து 'கோமாதா' என்றே சொல்வது.



'கோ' என்றால் 'பசு' என்று எல்லோருக்கும் தெரியும். Cow என்ற வார்த்தையும் 'கோ'விலிருந்து வந்ததுதான். டிக்ஷனரியிலேயே அப்படித்தான் போட்டிருக்கும்.

அந்த கோவை மாதாவாகவே நம்முடைய தேசத்தில் தொன்றுதொட்டுக் கண்டு அன்பும் பக்தியும் செலுத்தியிருக்கிறார்கள்.

அன்பும் சாந்தமும் நிறைந்த தோற்றத்தோடு நிற்கிற ஒரு பசுவைப் பார்த்தாலே பெற்ற தாயாரைப் பார்ப்பது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றும்.

பெற்றெடுத்துப் பாலூட்டும் மாதாவை ஜனக மாதா என்பது. அதே மாதிரி இன்னும் ஒரு சில மாதாக்களைச் சொல்லுவதில்தான் கோமாதாவும் ஒன்று. பூமாதா, ஸ்ரீமாதா என்று இன்னும் இரண்டு மாதாக்கள்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

அவனே உலகத்திலே வந்து அவதரிக்கிறான்.

பூத க்ருத், பூத் ப்ருத், பாவயதிதி பாவ : என்றார் ஆதிசங்கரர்.

அவனுடைய அவதாரம் சத்யம் என்பதை பாவ: என்ற சப்தம் உணர்த்துகிறது.

பத்து அவதாரங்கள் முக்கியமாகச் சொல்லப்படுகின்றன. இவை தவிர எத்தனையோ அவதாரங்கள். கஜேந்திரனுக்கு எதிரிலே பிரத்யக்ஷமாகத் தோன்றினான் - அதி ஹரி அவதாரம் என்று பெயர்.

நேரே வந்து, எல்லோரும் அனுபவிக்கும்படியாகத் தன்னைத் தாழ இட்டுக் காட்டுகிறான் பரமாத்மா.

அவதார காலத்திலே சங்கல்பம் பண்ணிக் கொண்டு பூலோகத்திலே வந்து அவதரிக்கும்படியான நற்குணமுடையவன்.

இதைத்தான் நம்மாழ்வார் பாசுரத்திலே சொல்கிறார் :

பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா
ஒழுக்கும், அழுக்கு உடம்பும்,
இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை -
உயிர் அளிப்பான்,
எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்!
இமையோர் தலைவா-
மெய்ந் நின்று கேட்டருளாய், அடியேன்
செய்யும் விண்ணப்பமே.


- நம்மாழ்வார் வாக்கிலே முதன் முதலில் உதித்த பிரபந்தம் இது.

(தொடரும்)

வாசகர்களின் அன்பு வந்தனங்கள்.
அஸ்வதிமணாளன், மடிப்பாக்கம்.

♦ பொன்னியின் செல்வனைப் பிரிகிறோமே என்று வருத்தமாக இருந்தாலும், சிவகாமியின் வருகை மகிழ்ச்சியை ஏற்படுத்திவிட்டது.
பாரதிமகள், கரூர்

♦ 'பொன்னியின் செல்வன்' நிறைவுற்றது ஏமாற்றம் விளைவிப்பதாக இருந்தது. வாசகர்களின் நாடித்துடிப்பையுணர்ந்து 'சிவகாமியின் சபதம்' அறிவித்த ஆசிரியருக்கு நன்றி! கதாசிரியரின் வரலாற்றியல் அறிவுப் பரப்பும் ஆழமும் வாசர்களுக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்துகிறது. அவ் வியப்பே ஆசிரியரை 'வரலாற்'றுக் காலத்தில் வாழ்ந்த கதை மாந்தராகவே எண்ணச் செய்து விடுகிறது. பெரும்பான்மையின் கருத்து ஆசிரியர் வரலாற்றுக் காலத்தில் வத்தியத் தேவனாக வாழ்ந்திருப்பார் என்பதே!



இரா. கண்ணன், பாளையங்கோட்டை





# ஞானம் உதிக்குமா?

*அந்தக் கோயிலின் தெப்பக் குளப் படிக்கட்டுகளில் குழந்தையை அமர வைத்துவிட்டுக் குளத்தில் குளிக்கப் போகிறார் தந்தை. தண்ணீரில் மூழ்கியவர் நீண்ட நேரமாகியும் வராததால் 'திடுக்'கிடுகிறது குழந்தை. கண்களில் கண்ணீர் தாங்கி கோயில் கோபுரத்தை நோக்கிக் கும்பிட்டு அழுகிறது. குழந்தையின் அழுகை ஈசனின் மனத்தைக் கரைய வைக்க, வெண்புகை சூழ, பார்வதியுடன் ஈசன் குளத்தில் ஆஜர்! ஞானப்பால் வழங்குகிறார் பார்வதி. வாயில் பால் வடிந்து காயுமுன் குழந்தையை ஆசீர்வதித்துவிட்டு மாயமாகின்றனர் ஈசனும் பார்வதியும்.*

*குளத்திலிருந்து எழுகிறார் குழந்தையின் தந்தை...*

**கட்!** போதும். புரிந்திருக்குமே -திருஞானசம்பந்தரின் கதைதானென்று.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் சிறப்பிடம் வகிக்கும் சம்பந்தரின் வாழ்க்கையை அருட்செல்வர் நா.மகாலிங்கத்தின் ஆதரவோடு நாட்டிய நாடகமாகத் தயாரித்திருக்கிறது பென்டாமீடியாவின் இன்டெலிவிஷன் - நிறுவனம்.

"இதை நாட்டிய நாடகமாகத் தயாரிக்க முழுமுதற்காரணம் நா. மகாலிங்கம்தான். வெறும் காட்சியாகக் கொடுப்பதைவிட இப்படி வித்தியாசமாகக் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று சொன்னார். அவரது விருப்பத்திற்கேற்ப செயலில் இறங்கி விட்டோம்." என்கிறார் இன்டெலிவிஷன் நிர்வாக இயக்குனர் சுந்தரம்.

விரைவில் தொலைக்காட்சித் தொடராக வர இருக்கும் இந்நாடகத்தில் ராஜ்குமார் பாரதி, டி.கே.எஸ். கலைவாணன், மகாநதி ஷோபனா ஆகியோரின் குரல்களில் பாடல்கள் பின்னணியில் ஒலிக்க, திரையில் நாட்டியமாடுகிறார்கள்.

இசையமைப்பு எல்.கிருஷ்ணன், பிரமீளா குருமூர்த்தி. நடன அமைப்பு 'கலா சாதனாலயா' இயக்குனர் ரேவதி ராமச்சந்திரன்.

இசையும் நடனமும் நம் மனத்தைக் கொள்ளை கொள்ளப் போட்டிப் போடுகின்றன.

" 'ஞானப் பரம்பரைகள்' என்ற தலைப்பில் மற்ற நாயன்மார்களின் வரலாறையும் இப்படித் தயாரிக்க இருக்கிறோம். தொலைக்காட்சித் தொடர் மட்டுமின்றி வீடியோ கேசட்டுகள், சிடி வழியாகவும் வெளியிட இருக்கிறோம்." என்கிறார் சுந்தரம்.

தொலைக்காட்சியில் தரமான தொடர்களும் வெற்றிபெறும் என்ற ஞானோதயம் 'ஞானப்பரம்பரைகள்' மூலமாகவாவது ஏற்பட்டால் சரிதான்.

**- ஏக்ஜி**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


# கல்கி

12.8.2001
இதழுடன்
இணைப்பு

கல்கி வார இதழ்–
வானதி பதிப்பகம்
இணைந்து வழங்கும்



# ஞானமலர்கள்



## கர்வம் என்னும் கள்வன்

நிலத்தில் விழுந்து சிதறிய தானியமணிகளைப் பொறுக்குவது போல், நான் செய்திருக்கும் சில நல்ல காரியங்களையும் சேர்த்து வைத்திருக்கிறேன். ஆனால் தயாநிதியே! கர்வம் என்கிற திருடன் அவற்றையும் என் மனத்திலிருந்து வெளியேற்றி விடுகிறான். நான் செய்த சில நற்செயல்களையும் தற்பெருமை காரணமாகப் பிறரிடம் சொல்லிச் சொல்லி அவற்றின் பலனை இழந்து விடுகிறேன்.

– துளஸிதாஸர்

## பணிவு

ஒருவனுடைய அகங்காரத்தை வளர்த்து, தான் கடவுளை உணர்ந்தவன் என்று அவன் சொல்லிக் கொள்ளச் செய்யும் நூலறிவு ஒரு தடங்கலே. கடவுளை அறிதல் என்பது கடவுளை அனுபவித்தலே. இதற்குப் பணிவு மிக அவசியம். அதிக வித்தையானது ஒருவனைக் கர்வம் கொள்ளச் செய்கிறது. புத்தி ஓர் எல்லைக்கு உட்பட்டதே என்பதை உணர்ந்து இறைவனிடத்தில் தலைபணிய வேண்டும்.

– சுவாமி ராமதாஸர்

## சுத்தம் சுகம் தரும்

**சு**த்தத்திலேயே நமது முன்னேற்றம் இன்று உள்ளது. சுத்தமான நினைப்பும், கற்புள்ள ஒழுக்கமும் மனிதனுக்கு வேண்டும். முதலில் உன் உள்ளம் சுத்தமாகட்டும். சுத்தமின்றி வீரமில்லை, ஒற்றுமையில்லை, சாந்தமில்லை, உய்வும் இல்லை.

– *சுவாமி ராமதீர்த்தர்*

## முக்திக்கு வழி

**எ**ன்னைப் பொறுத்த வரையில் முக்திக்கு எங்கே வழி இருக்கிறதென்றால் எனது தேசத்துக்காகவும் மானிட ஜாதிக்காகவும் தொண்டு செய்து கொண்டிருப்பதில்தான்.

– *மகாத்மா காந்தி*



## ரஸானுபவம்

**க**டவுள் பாடே கஷ்டமாய்ப் போய் மனுஷர்களைப் படைத்துக் கொண்டார் என்று சொல்ல வேண்டும். வானைப் படைத்தார், மானைப் படைத்தார், மயிலைப் படைத்தார், மலையைப் படைத்தார். படைத்த பிறகு அவை ரொம்ப அழகாக இருக்கவும் கண்டார். இவற்றை அனுபவித்து

மெச்சட்டுமே என்று மக்களையும் படைத்தார்.

– ரஸிகமணி டி.கே.சி.

## தாயாகி நிற்பவன்



தாயைக் குழந்தை பற்றி நிற்பது போல் பகவானைப் பற்றிக் கொண்டு நிற்பதுதான் சரியான வழிபாட்டு முறை. பகவானை நம்பி வாழாதவன் தன்னையும் அறியான், கடவுளையும் அறியான், மூடனாவான்..

பிரார்த்தனையின் போது 'ஆ' என்று கதறிக் கூப்பிட வேண்டியதில்லை. உன் உள்ளத்திலேயே அவன் இருந்து வருகிறான். யாரும் அறியாமல், மெதுவாக, அடக்கமாக, பிரியமுடன் அவனோடு பேசலாம்.

– துறவி லாரென்ஸ்

## தெய்வ தரிசனம்

குற்றம் செய்வதில் பெரியவன், மடமையில் பெரியவன், வஞ்சகமாக நடப்பதில் பெரியவன் என்னும் நிலையில் வாழ்பவன், ஒருபோதும் இறைவனைக் காண முடியாது.

– வடலூர் வள்ளலார்

# ஊழி நெருப்பு

தவத்தையும் பொறுமையையும் யார் பொக்கிஷமாகப் பெற்றிருக்கிறாரோ, அவரிடம் ஆத்மசக்தியாகிற ஊழித் தீயானது மறைந்து கிடக்கும். அந்த அக்கினி பீறிட்டுக் கிளம்புமாயின் அது உலகத்தையே சாம்பல் ஆக்கிவிடும் என்பதையும் மறக்காதே.

– மகாகவி காளிதாஸர்

# எது அஹிம்சை?



எதிராளியின் அநியாயத்தைத் தான் பொறுத்துக் கொள்ளாவிட்டால் அது மேலும் துன்பத்தை விளைவிக்கும் என்று அஞ்சிக் கொண்டு அதை ஒருவன் பொறுத்துக் கொண்டு செல்வானானால், அது அஹிம்சையை அடிப் படையாகக் கொண்ட மனோபாவம் ஆகாது. அது கோழைத் தனமே ஆகும்.

அஹிம்சையில், துன்பத்தைச் சகிப்பதற்கு அஞ்சுவது என்பதும் இருக்காது. நம் கட்சி, நியாயத்தைச் சார்ந்தது என்ற முழு நம்பிக்கையும், அதை ஆதரிப்பதற்கு வேண்டிய திடமான மன உறுதியும், எதிரிக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது என்கிற உறுதியான எண்ணமும் இருந்தால்தான் அஹிம்சை கைகூடும்!

– பாபு ராஜேந்திர பிரசாத்



## புடம் போடும் அன்பு!

தாயே! சாலை ஓரத்தில் ஓடும் கழிவு கால்நீரும் கங்கைப் பெருக்கில் கலந்து புனிதமாவது போல், பரிச வேதியில் தங்கிய இரும்பும் உடனேயே தங்கமாக ஆவது போல், ஜன்ம ஜன்மங்களாகப் பாபம் செய்து மிகவும் களங்கமுற்றுள்ள என் உள்ளமும், உன்பால் அன்பு பூண்டு கலந்தபின், மாசுகள் நீங்கித் தூய்மை பெறாதிருக்க முடியுமா?

– ஸ்ரீ ஆதிசங்கரர்

## சீர்திருத்துங்கள்

ஒவ்வொருவரிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் அனேகம் இருக்கத்தான் செய்கின்றன. கோவில்களையும் மயானங்களையும் எப்படிச் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை முஸ்லிம்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

கோவிலாவது பாதகமில்லை. ஆனால் மயான சீர்திருத்தம் மிகவும் அவசிய மானது. ஏனெனில் கோவிலுக்கு நாம் போகாமல் இருந்துவிடலாம். ஆனால் நானும், நீங்களும் ஒருநாள் கட்டாயம் மயானத்துக்குப் போயே ஆக வேண்டும் அல்லவா? ஏதோ அபசகுனமாகச் சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. சாக்ஷாத் பரமசிவனின் வாசஸ்தலமே மயானமாக இருக்கும்போது அதைப் பற்றிப் பேசுவது எப்படி

அபசகுனமாகும்?

– அமரர் கல்கி (கொலுவும் கோவிலும்)

## யார் பாக்யசாலி?

**ஏ**ழை ஒருவனுக்கு ஐயமிடும் போது உயர்ந்த பீடத்தில் நின்று கொண்டு உன் சில்லறையை அவனிடம் வீசாதே. அவனுக்கு ஈவதால் உனக்கே நீ உதவி புரிந்து கொள்ள முடிந்தது என்று உணர்ந்து, அப்படி ஒருவன் கிடைத்தானே என்று நன்றி சொல். பெறுபவன் பாக்கியசாலி அல்லன். கொடுப்பவனே பாக்கியசாலி.

– சுவாமி விவேகானந்தர்



## காயத்ரி தேவி

**கா**யத்ரி மந்திரத்தைக் காலை, பிற்பகல், மாலை மட்டுமே என இல்லாமல் எல்லாக் காலத்திலும், எல்லா நிலையிலும் உன்னுள் ஸ்மரிக்க வேண்டும். காயத்ரி மந்திரம் ஸ்மரிக்க நேரமில்லை என்பது சோம்பல் கொண்டவர்கள் சொல்லும் காரணம்!

காலையில் பல் விளக்கி, குளித்து சாப்பிடுவதில்லை? அதற்கெல்லாம் நேரம் இருக்கும் போது காயத்ரி மந்திரம்

சொல்வதற்கு மட்டும் நேரமில்லையா?

'ஸ்நானம் செய்யும்போது காயத்ரி சொன்னால் காயத்ரி தேவிக்கு அபிஷேகம் பண்ணுகிறாய். உணவு உண்ணும் போது அதை காயத்ரி தேவிக்கு நிவேதனமாக்குகிறாய்..

**– பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா**

## பகைவர்



**சா**திச் சண்டை, சமயச் சண்டை, பிற மூடச் சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக் குடாக் கடலில் எறிதல் வேண்டும், நமது நாட்டுத் தெய்வ பக்தர்கள் சாதிப் பகை முதலியவற்றில் தலைப்படவே இல்லை. ஹிந்து மதாச்சாரியர், தெய்வத்தை வழிபடுவோர் அனைவரும் ஒரு சாதியினரே என்னுங் கொள்கையுடையவராய் வாழ்ந்து வந்தனர்.

தெய்வப் பணி செய்வோர் அனைவரும் எங்ஙனம் ஓரினத்தவராகக் கருதப்பட்டனரோ, அங்ஙனமே நாட்டுப் பணி செய்வோர் அனைவரும் ஓர் இனத்தவராகவே எண்ணப்படல் வேண்டும். சாதிச் சண்டை, சமயச் சண்டை முதலியவற்றை வளர்த்து வருவோரை, எனது நாட்டுப் பகைவர் என்றே கருதுகிறேன்.

**– தமிழ்த் தென்றல் திரு.வி.க.**

# உருவ வழிபாடு

உருவ வழிபாடு தவறானது என்ற கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள் இந்நாள் மக்கள். நானும் இப்படி நினைத்தவன்தான். அதற்கு அபராதமாக, எல்லா அனுபவங்களையும் விக்கிரகங்கள் மூலமே பெற்ற ஒருவரின் பாதத்தில் பாடம் கேட்டேன். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைத்தான் குறிப்பிடுகிறேன். அப்படிப்பட்ட ஒரே ஒருவரை விக்கிரஹ ஆராதனை மூலம் பெற முடியும் எனில், இன்னமும் ஆயிரம் விக்கிரகங்களை வைத்துக் கொண்டு பூஜை செய்யலாம்.

**– சுவாமி விவேகானந்தர்**



# ஆத்ம பரிபக்குவம்

ரோஜாச் செடி பெரிதாகப் புஷ்பிக்க வேண்டும் என்பதற்காகத் தோட்டக்காரன் அதன் கிளைகளை வெட்டுவது மட்டுமன்றி, சில சமயங்களில் அதன் வேரைக் கூடக் கெல்லி வெளியே எடுத்துச் சூரிய வெளிச்சத்துக்கும் பனிக்கும் காட்டுகிறான். உங்கள் உடம்பையும் அப்படியேதான் ஆத்ம வளர்ச்சிக்காக ஆண்டவன் கஷ்டத்துக்கு உள்ளாக்கியிருக்கிறான்.

**– பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்**



## துறவியின் குடும்பம்

தனக்காகச் செய்யும் காரியங்களை விலக்குவதே துறவு. ஒரு குடும்பத்தை விட்டு வருகிற துறவிக்கு உலகமே குடும்பமாகிவிடுகிறது.

**– பகவான் ஸ்ரீரமணர்**

## பாக்கியசாலி

எவன் ஒருவன் உலகத்தின் உயிரினம் அனைத்தையும் வணங்குகிறானோ, எவன் பிறரை நிந்திக்கவே மாட்டானோ, எவன் சொல், உடம்பு இவற்றைச் சலனமின்றி வைத்துக் கொள்கிறானோ – அவனைப் பெற்ற அன்னை மிகவும் கொடுத்து வைத்தவள்.

**– நரஸி மேத்தா**

## பிரார்த்தனை

எமது வாக்கு, உன் திவ்ய குணங்களைப் பேசுவதிலும், எமது காது உன் புகழைக் கேட்பதிலும், எமது கரங்கள் உன் பணிகளைச் செய்வதிலும், எமது மனம் உன் தூய திருவடிகளைப் பற்றிய தியானத்திலும், எமது தலை உன் இருப்பிடமாகிய உலகத்தை வணங்குவதிலும், எமது கண்கள், உன் உடலாக விளங்கும் மகான்களைக் காண்பதிலும் ஈடுபடட்டும்.

**– ஸ்ரீமத் பாகவதம்**

## தேச நலன்

சமூக நலனோ, தேச நலனோ குறுக்கிடும் போது, நாம் நமது தன்னலத்தைச் சற்றும் விலக்கி வைப்பதில்லை. பலர் தமது என்னும் ஆசைப் பேய்க்கு அடிமையாகி விடுகின்றனர். பொது நலம், தேச நலம் என்று பேசுகிறவர்களில் பலர், உள்ளூரத் தன்னலம் கொண்டவர்களாக உள்ளனர்.

– ***லாலா லஜபத் ராய்***

## இறைவா!



என்னை அமைதியின் வடிவாய் ஆக்கியருளும்,
பகையுள்ள இடத்தில் அன்பையும்
தவறு உள்ள இடத்தில் மன்னிப்பையும்
பிளவுள்ள இடத்தில் ஒற்றுமையையும்

பிழையுள்ள இடத்தில் உண்மையையும்
ஐயமுள்ள இடத்தில் உறுதியையும்
விரக்தியுள்ள இடத்தில் நம்பிக்கையையும்
இருள் உள்ள இடத்தில் ஒளியையும்
மருள் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும்
தருவாய்... இறைவா!

– ***அன்னை தெரசாவின் காலைப் பிரார்த்தனை***

உண்மையைப் பேசுவது
கலி யுகத்துக்கான தவம் ஆகும்.

— பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## உயர்வான தியாகம்



ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வோர் அங்கத்தில் அதிக கௌரவம் இருக்கும். கவரிமான் என்று ஒன்று உண்டு. அதன் கௌரவம் வாலில்தான் இருக்கிறது. மயில் என்றால் அதற்குத் தோகை விசேஷம். தோகையை மயில் ஜாக்கிரதையாக ரட்சிக்கும். யானை எதை ரட்சிக்கும்? தன் தந்தத்தைத் தீட்டி வெள்ளை வெளேர் என்று வைத்திருக்கும்.

இந்தப் பிள்ளையார் என்கிற யானை என்ன பண்ணுகிறது என்றால் அந்தக் கொம்பிலேயே ஒன்றை ஒடித்து, அதனால் மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும், தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை, இவ்விதம் இந்த யானை காட்டியது. நியாயத்துக்காக, தர்மத்துக்காக, வித்தைக்காக, எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்பதை, தானே, தன்னுடைய தந்தத்தைத் தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி பரமாச்சார்ய சுவாமிகள்

## பக்தன்

புல்லினும் தாழ்ந்தவனாகவும், மரத்தினும் பொறுமையுடையவனாகவும், தற்பெருமை அற்றவனாகவும், பிறர்க்கு உரிய பெருமையைக் கொடுப்பவனாகவும் பக்தன் இருக்க வேண்டும்.

– **ஸ்ரீ சைதன்ய மகாப்ரபு**



## எது பகைமை...?

கருத்துக்களில் வேறுபாடு இருந்தால் அது பகைமை அன்று. அது பகைமை என்றால், என் மனைவியும் நானும் பெரும் பகைவர்களாக மாறியிருப்போம்.

– **மகாத்மா காந்தி**

## உறுதி

பிறர் நன்மை செய்தால் நன்மை செய்வேன், தீமை செய்தால் தீமை செய்வேன் என்று கூறாதே. 'நன்மை செய்தால் நன்மை செய்வேன், தீமை செய்தால், பதிலுக்குத் தீமை செய்யமாட்டேன் என்று உறுதி கொள்.

– **நபிகள் நாயகம்**



தவறைச் சரிப்படுத்திக் கொள்ளப் பிரயாசைப்படுவதால் அவமானம் கிடையாது.

– ராஜாஜி

பரிசுத்தமான இதயம், பெண்ணின் பெருமைக்குரிய சொத்து. காதல் அவளுடைய அழகிய ஆபரணம்.

– ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

ஓர் உண்மை விசுவாசியின், கடவுள் நம்பிக்கை உடையவனின் அடையாளத்தை நான் சொல்கிறேன்: மரணம் வரும்போது அவன் முகம் மலர்ச்சியுடன் இருக்கும்.

– கவிஞர் இக்பால்

பாவம் பயனளிக்க ஆரம்பிக்காதவரை இன்பமாய்த்தான் தோன்றும்; ஆனால் அது பயன் தரும் போதுதான், பாவி தன் பாவத்தை உணர்கிறான்.

– கௌதம புத்தர்

என்னுடைய ராமன் அயோத்தி அரசனாயிருந்த தசரதனுடைய புத்திரனான ராமன் அல்லன். என்னுடைய ராமன் இறப்பும் பிறப்பும் இல்லாதவன். இணையற்றவன். அவனையேதான் வணங்குகிறேன். அவன் எல்லோர்க்கும் உரியவன்.


– மகாத்மா காந்தி

உள்ளத்தைக் கல்லாக்கிக் கொள்ளாதீர்கள்.
தருமமும் தயையுமே நிரந்தரச் செல்வம்
கடவுளுடைய பாங்கியில் நல்ல வட்டியுடன் பெருகிப் பத்திரமாக இருக்கும்.

**– ராஜாஜி**

உன்னுடைய கடமைகளைச் செய்து வரும்போதே கடவுளை நினைத்து வருதல் தியானம்.

**– பகவான் ராமகிருஷ்ணர்**



மதம், ஜாதி இவை எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் எல்லோருக்கும் பொதுவானவை. மதம் என்பது மனித மனத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. உலகம் சிறப்பாக இயங்குவதற்கு மனித மனம் சீராக இயங்க வேண்டும்.

**– ஸ்வாமி சின்மயானந்தர்**

## சாந்திக்கு வழி...

இறைவழிபாடு என்பது தவிர்க்கமுடியாது விஷயம். எல்லா மதத்தினரும் ஏதாவது ஒரு வகையில் தாம் பின்பற்று


கிற தெய்வத்தை தினமும் வழிபட வேண்டும். அதன் மூலம் தான் மனசில் தெளிவு பிறக்கும். சாந்தி பிறக்கும். மனம் தெளிவு பெற்றால்தான் மனிதன் தானும் அமைதியாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்பான். நம்மை மீறிய சக்தி ஒன்று உண்டு என்பதை முதலில் நாம் உணர வேண்டும்.

அறிவியல் மேதைகள் ஐன்ஸ்டீன், எனகரிக்கோ பெர்மி முதலான எல்லோரும்



பக்தி நிறைந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால் 'வேதாந்தம் இல்லாத விஞ்ஞானம் குருடு' என்றே கூறியிருக்கிறார்கள். இந்த உலக வாழ்க்கைக்கு விஞ்ஞானத்தைப் போல் இறை அன்பும் பயன்படுவதோடு மறுமைக்கும் சிறந்த வழி காட்டுகிறது.

— ஸ்ரீமத் ரங்க ராமானுஜ மஹாதேசிக ஸ்வாமிகள்





## சமபாவம்

மனிதர்களிடம் அன்பாக இருப்பது மட்டுமில்லை. தாவர வர்க்கங்களிடமும் பிராணி வர்க்கங்களிடமும் அன்பாக இருக்க வேண்டும். எல்லா உயிர் இனங்களையும் சமமாக பாவிக்க வேண்டும். சமமாக பாவிப்பது என்றால் அழிக்காமல் ரக்ஷிப்பதுதான்.

– முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

## கர்மயோக உபதேசம்!

இந்திரியங்களையும் மனதையும் அடக்கி, பற்றற்ற உள்ளத்துடன் கருமங்களைச் செய்வது பகவத்கீதையின் உபதேசம். உடலைத் தேராகவும், இந்திரியங்களைக் குதிரைகளாகவும், இந்திரியங்களைச் செலுத்தும் மனதைக் கடிவாள வாராகவும், புத்தியைச் சாரதியாகவும், புலன்கள் செல்லும் விஷயங்களை ரதம் ஓட்டும் பாதையாகவும் அமைத்து, உபநிஷத்தில் ஒரு சிறந்த உவமை சொல்லப்பட்டிருக்கிறது. சாரதியைக் கொண்டு குதிரைகளைச் சரியாக இழுத்துப் பிடித்து ரதத்தை ஜாக்கிரதையாகச் செலுத்தினால், எஜமானனாகிய ஆத்மாவின் யாத்திரை சரியாக முடியும். இல்லையேல், குதிரைகள் கண்டவாறு ஓடி, பிறப்பும் இறப்புமாகச் சுற்றிச் சுற்றிப் போய்க் கொண்டிருக்க வேண்டியதாகும் என்று கடோபநிஷத்து சொல்லுகிறது. இந்தப் பழைய உவமையைக் கருதி, தேரோட்டும் தோற்றுவாய் பகவத் கீதையின் கர்மயோக உபதேசத்


திற்கு மிகவும் பொருத்தமாய்ப் பொருள் செறிந்து அமைந்திருக்கிறது.

– ராஜாஜி

## அற்புதங்கள் உள்ளதா?

அற்புதங்களையெல்லாம் தவிர்த்து விடுங்கள். சமயத்தில் எவ்வித அற்புதமும் இல்லை. வேதாந்தத்தில் ஏதாவது அற்புதம் இருக்கிறதா? வேதத்தில் இருக்கிறதா? சம்ஹிதையில் இருக்கிறதா? புராணங்களில் இருக்கிறதா? பழங்கால மகான்கள் தங்கள் சமயத்தை உபதேசிப்பதற்கு எந்த ரகசிய சங்கங்களை அமைத்தார்கள்? மனித இனத்திற்கு மகத்தான உண்மைகளைக் கொண்டு வருவதற்காக எந்த ஏமாற்று கை அசைவுகளைச் செய்ததாக நம் சாஸ்திரங்களில் எழுதப்பட்டிருக்கிறது? அற்புதங்களில் ஆசைப்படுவதும் விருப்பம் கொள்வதும் மூடநம்பிக்கையின் பொது அடையாளங்கள். இவை எப்போதும் இழிவின், மரணத்தின் அடையாளங்கள். இதைக் குறித்து எப்பொழுதும் எச்சரிக்கையாக இருங்கள். வலிமையாக இருங்கள், உங்களுடைய சொந்தக் கால்களில் நில்லுங்கள்.

– சுவாமி விவேகானந்தர்



## அன்பே வடிவானவர்

கடவுள் அன்பே வடிவானவர். அவர் எல்லாவற்றிலும் மறைந்திருக்கிறார். அவர் ஒவ்வொன்றிலும் தெளிவாகப்

பார்க்கக் கூடியவராக இருக்கிறார். ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ அவரிடம் இழுக்கப்படுகிறோம். ஒரு பெண் தன் கணவனிடம் அன்பு செலுத்தினால் தன் கணவனிடமுள்ள கடவுளாகிய மகத்தான இழுப்பாற்றலே அவளை அவனிடம் அன்பு செலுத்தத் தூண்டுகிறது என்பதை அவள் அறிவதில்லை. நாம் வழிபட வேண்டியது, கடவுளாகிய இந்த அன்பு ஒன்றையே. நாம் அவரை உலகைப் படைத்தவராகவும், காப்பவராகவும் நினைத்துக் கொண்டிருக்கும் வரையில் புறவழிபாட்டை மட்டுமே செய்ய முடியும். ஆனால் அவற் றையெல்லாம் கடந்து சென்று அவரை அன்பின் உருவமா கவும், எல்லாவற்றிலும் அவரையும் அவரில் எல்லா வற்றை யும் காணும்போது மட்டுமே மிக மேலான பக்தியை நாம் அடைகிறோம்.

– **சுவாமி விவேகானந்தர்**



**ப**ரோக்ஷம், அபரோக்ஷம் என்று இரண்டு, பரோக்ஷம் என்பது நமக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டிருப்பது, ரஹஸ்யமாயிருப்பது. அபரோக்ஷம் அதற்கு ஆப்போஸிட்: நமக்கு நன்றாகத் தெரிவது. கேள்வியறிவு பரோக்ஷம், அநுபவ அறிவு அபரோக்ஷம். அநுபவத்துக்கு வராதவரையில் ஒன்றைப் பற்றிய அறிவு அதன் பிரயோஜனமான ஆனந்தத்தை நமக்குக் காட்டாமல் ரஹஸ்யமாக வைத்துக் கொண்டு இருக்கிறது என்று அர்த்தம்.

குற்றாலம் அருவியைப் பற்றிப் பக்கம் பக்கமாகப் படிக்கிறோம். போய்விட்டு வந்தவர்

கள் அதைப் பற்றி மணிக்கணக்காக வர்ணித்துக் கேட்கிறோம். ஆனாலும் இதனாலெல்லாம் அநுபவ ஆனந்தம் நமக்குக் கொஞ்சமாவது ஏற்படுகிறதா? நாமே போய், மணிக் கணக்கெல்லாம் வேண்டாம், நாலு நிமிஷம் அஞ்சு நிமிஷம் அதன் கீழே நின்றுவிட்டால் அப்போதுதானே நிஜமாக அதைத் தெரிந்து கொண்ட ஆனந்தம் ஏற்படுகிறது?

ஆத்மாவுக்கான ஸமாசாரங்களை டன் டன்னாகப் புஸ்தகத்தில் பார்த்தும் படித்தும் நெட்டுருப் போட்டும், quote பண்ணியும் ப்ரயோஜனமில்லை. குருவே உபதேசம் பண்ணியுங்கூட, அது காதுக்குள்ளே, காது வழியாக மூளைக்குள்ளே போனாலுங்கூட, ப்ரயோஜனமில்லை. அதுவரை அது பரோக்ஷம்தான். ஆத்மாவிலேயே அது அநுபவமாகப் பேசணும். அப்போதுதான் அபரோக்ஷம்.

– காஞ்சி மகா சுவாமிகள்



# உயிர் மழை

வெம்மை மிகுந்த பிரதேசங்களிலிருந்து வெம்மை குன்றிய பிரதேசங்களுக்குக் காற்று ஓடிவருகிறது! அங்ஙனம் ஓடிவரும்போது காற்று மேகங்களையும் ஓட்டிக் கொண்டு வருகிறது! இவ்வண்ணம் நமக்கு வரும் மழை, கடல் பாரிசங்களிலிருந்து வருகிறது! காற்றே, உயிர்க் கடலிலிருந்து எங்களுக்கு நிறைய உயிர் மழை கொண்டுவா! உனக்குத் தூபதீபங்கள் ஏற்றி வைக்கிறோம். வருணா, இந்திரா, நீவிர் வாழ்க! இப்போது நல்ல



மழை பெய்யும்படி அருள் புரிய வேண்டும்.

**– மகாகவி பாரதியார்**

## அந்தஸ்தும் சலுகையும்

**பி**ரத்யேக அந்தஸ்தையும் சலுகையையும் நான் வெறுக்கிறேன். பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாத எதுவும் எனக்கு ஆகாது.

**– மகாத்மா காந்தி**

## மூன்று பேறுகள்

**எ**ந்தப் பிள்ளை தன்னுடைய நல்ல ஒழுக்கங்களால் தகப்பனை மகிழ்விக்கிறானோ, அவனே பிள்ளை.

எந்த மனைவி கணவனுக்கு இதத்தை விரும்புகிறாளோ அவளே மனைவி.

எந்த நண்பன் ஒருவனுடைய வாழ்விலும் தாழ்விலும் ஒரே மாதிரி இருக்கிறானோ அவனே நல்ல நண்பன்.

இந்த மூன்று பேறுகளையும் உலகத்தில் புண்ணியவான்கள் அடைகிறார்கள்.


**– ஸ்ரீ வாத்ஸ்யாயனர்**

**ப**க்தி செலுத்துவதால் முக்தி கிடைத்துவிடுமென்று சொன்னால் நாம் செலுத்தும்

அந்த பக்தியே நேராக முக்தியைக் கொடுத்து விடுகிறது என்று அர்த்தமில்லை. நாம் செய்கிற எதுவுமே தானாக எந்தப் பலனையும் தருவதில்லை. பலன்களைத் தருகிற பலதாதாவாக ஈச்வரனே இருக்கிறான். அவன்தான் பாப புண்யம் பார்த்து எல்லாருக்கும் எல்லாப் பலனையும் கொடுக்கிறான். அவ்விதத்தில் நாம் பண்ணுகிற பக்திக்குப் பலனாக அவன் பரம க்ருபை செய்து, ஞானத்தைத் தந்து, அந்த ஞானத்துக்குப் பலனாக மோக்ஷாநுபூதியைக் கொடுக்கிறான். ஆக, பலன் தருவது நாம் பண்ணும் பக்தியே அல்ல; அதற்குப் பிரதியாக ஈச்வரன் செய்யும் கிருபைதான் பலனைத் தருவது.

பக்தி நிஜமானதாக இருந்தால் பக்தி பண்ணுகிறவன் அதற்குப் பிரதியே எதிர்பார்க்க மாட்டான். பிரதி பிரயோஜனம் எதிர்பார்த்து விட்டால் அது வியாபாரம்தானேயொழிய பக்தி இல்லை என்றே பாகவதாதி நூல்களில் சொல்லியிருக்கிறது. இப்படி பக்தன் (பிரதி வேண்டாமல்)இருந்தாலும் இவனிடமிருந்து நிஜமான பக்தியைப் பெற்றுக் கொண்ட பகவானுக்கு மனசு கேட்குமா? அதனால் அவன் க்ருபை பண்ணத்தான் பண்ணுவான். ஞானத்தை அநுக்ரஹிக்கத்தான் செய்வான். பக்தனை ஸம்ஸாரத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தில் சேர்க்கத்தான் செய்வான்.

– காஞ்சி மகா சுவாமிகள்



## விரும்பாத பொருள்கள்...

**தா**மரை மலர் இரவு நேரத்தில் கூம்புவதால் சந்திரனு

டைய கிரணங்கள் அதனுள்ளே புகுவதில்லை. அவ்வாறே, அல்லி மலரிடத்து சூர்யனுடைய கிரணங்கள் செல்வதில்லை. உலகம் கொண்டாடிப் போற்றுகிற சந்திர சூரியர்களை விரும்பாத பொருள்களும் இந்த உலகத்தில் இருக்கின்றன!

**– மகாகவி காளிதாஸர் (ரகுவம்சம்)**



## பசப்பு வார்த்தைகள்

**ம**க்களுடைய வீணான பசப்பு வார்த்தைகளைப் பொருட்படுத்தாதே. அவர்களுடைய புகழ்ச்சிக்கோ இகழ்ச்சிக்கோ நீ செவி சாய்க்கத் தொடங்கினால் உன்னுடைய வாழ்க்கையில் பெரிய சாதனை எதையும் நிறைவேற்ற முடியாமல் போய்விடும்.

**– சுவாமி விவேகானந்தர்.**

## உயிர்கொண்ட அறிவு

**ஒ**வ்வொரு ஜீவனுள்ளும் பேதமற்ற சுத்தப் பொருள் ஒன்று உண்டு என்கிற பேருண்மையை நன்கு உணர்ந்து, அந்த அறிவை உள்ளத்தினுள் பதியவைத்து, அது உள்ளத்தில் வேரூன்றி, உயிர் கொண்டு நிற்கச் செய்வதே ஞானம். உயிரற்ற அறிவினால் பயனில்லை. உயிர்கொண்ட ஞானம் உள்ளத்தில் வேர்

கொண்டு, இலையும், பூவும், காயும், கனியும் தரும். நற்செயலும், சாந்தியும் நல்லெண்ணங்களும் உண்டாகும். அவையே உயிர்கொண்ட அறிவின் பூவும் கனியுமாகும்.

– ராஜாஜி

## இறைவன் நினைவு

எவரைக் காணும் போதெல்லாம் இறைவனின் நினைவு வருகிறதோ, அவரே ஆண்டவனின் அடியார்களுள் சிறந்தவராவார்.

– நபிகள் நாயகம்



## மயக்கும் தோற்றம்!

இந்த யுகத்திலே முக்யமாக என்ன பெரிய அபாயம் என்றால், அபாயமான வஸ்து அப்படி கண்ணுக்குத் தெரியாமல் அதுவே ரொம்ப நல்லது மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து மயக்கி விடுவதுதான். அபாயத்தை அபாயமானது என்று தெரிந்து கொள்ள முடிந்தால்தானே அதிலிருந்து நம்மை ஜாக்ரதை செய்து கொள்ளலாம்? தீரர்களாக இருந்தால் அதோடு சண்டையும் போட்டு அதை அடக்கி வைக்கலாம்? பூர்வ யுகங்



களில் அபாய ஹேதுவாக அஸுரர்கள் தோன்றியபோது, அவர்களுடைய க்ரூரமான ரூபம், வெளிப்படையாகவே அவர்கள் க்ரூரமாகச் செய்த கார்யங்களெல்லாம் ஜனங்களுக்குத் தெரிந்தபோது அவர்கள் ஒதுங்கிப் போகப் பார்த்தார்கள். அப்படியும் இவர்கள் மேலே வந்து விழுந்து பிடுங்கினபோது 'நம்மால் இவர்களோடு சண்டை போட்டு முடியாது' என்று பகவானிடம் ப்ரார்த்தித்துக் கொண்டார்கள். பகவானும் அவதாரங்கள் எடுத்து அவர்களை ஸம்ஹரித்தார். முள்ளு குத்தினால் அதைப் பிடுங்கிப் போட்டவுடன் எல்லாம் ஸரியாய் விடுவது போல, அப்புறம் ஜனஸமூஹம் (தேவ ஸமூஹத்தையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்) நல்லபடியாகி, பழையபடி நல்ல வழியிலேயே போய்க் கொண்டிருந்தது. க்ருஷ்ணாவதாரத்திலும் கம்ஸன், சிசுபாலன், ஜராஸந்தன், துர்யோதனன் முதலானவர்களை தர்மத்திற்கு அபாயம் உண்டாக்கும் துஷ்டர்கள் என்று இனம் பிரித்துக் கண்டுகொள்ள முடிந்தது.

– காஞ்சி மகா ஸ்வாமிகள்

## அடம் பண்ணும் குழந்தை போல...

நம்முடைய பிரார்த்தனைகளைக் கேட்டுக் கொண்டே இருந்தாலும் கடவுள் அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதில்லை. அம்மாவுக்காக அழுகிற சிறு குழந்தை

யைப் போன்றது நம் பிரார்த்தனைகளின் தன்மை. ஆனால் தாயார் எப்போதுமே, வந்து குழந்தையைச் சமாதானப்படுத்திக் கொண்டிருக்க முனைவதில்லை. விளையாட்டுப் பொருள்களைக் குழந்தையின் முன்னால் போட்டு அதைத் திருப்திப்படுத்திவிடுவாள். அம்மாதான் வேண்டும் என்று அடம்பிடித்து அழுது, மற்ற பொருள்களைக் குழந்தை நாடாமல் ஒதுக்கிவிடுகிறபோது, தாய் வந்து அதை எடுத்துக் கொள்வாள். கடவுளை உணர்ந்தறிய வேண்டுமானால், அம்மா வருகிற வரை விடாமல் அடம் பண்ணுகிற அந்தப் பொல்லாத குழந்தையைப் போல் நீங்களும் செயல்பட வேண்டும்.

– **ஸ்ரீஸ்ரீபரமஹம்ஸ யோகானந்தா**




## வழிபாடு

**உ**ங்கள் வீட்டில் வழிபாடு செய்வது என்பது குடும்பத்தாரின் தேவைக்காக ஓர் அறையில் விளக்கேற்றி வைப்பது போன்றது. ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது என்பது உலகம் முழுமைக்குமான ஒளிதருகிற சூர்யனைப் போன்றது. ஆகவே நாம் வீட்டிலும் ஆலயத்திற்குச் சென்றும் வழிபாடு செய்யலாம்.

– **த்ரிதண்டி ஸ்ரீமத் சின்ன ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்**

## நமக்குள்ளேயே...

கலியிலே தனியாக இப்படி அஸுரக் கூட்டம், ராக்ஷஸ ஜாதி என்று இல்லை. மனுஷ்ய ஜாதிக்கு வெளியிலே அப்படியில்லை. அப்படியென்றால்... புரிகிற தோல்வியோ? மநுஷ்யர்களின் மூளைகளுக்குள்ளேயேதான் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் புகுந்து கொண்டு விட்டார்கள்! இந்த யுகத்தில் அதர்மசக்தி வெளியிலே பௌதிகமாக இருந்து கொண்டு ஜனங்களைத் தாக்காமல் ஜனங்களுக்குள்ளேயே, அவர்களுடைய புத்திக்குள்ளேயே கெட்ட சித்த வ்ருத்திகளாகப் புகுந்து கொண்டுவிட்டது!



**– காஞ்சி மகா ஸ்வாமிகள்**

## மழையில் நீராடினாலும்...

ஸ்ரீ ராமத்யானமே கங்காஸ்னானத்திற்குச் சமமானது. மழைநீரில் எவ்வளவுதான் மூழ்கி நனைந்து நீராடினாலும் மனத்தில் உள்ள காமக்குரோதங்கள் அகலுமா?

**– ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்**

# பகவானை நினைத்துக் கொள்ளுங்கள்...

பரபரப்பான சூழ்நிலை என்று எதுவுமே கிடையாது. நீங்களாக அப்படி உண்டாக்கிக் கொள்கிறீர்கள். அப்படியே ஒரு பரபரப்பான சூழ்நிலை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உட்கார்ந்து எதையும் அமைதியாகப் படிக்க முடியவில்லை. பிரார்த்தனைகளுக்காக அரை மணி நேரம் கூட ஒதுக்க உங்களால் முடியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் எங்கேயெல்லாம் போகிறீர்களோ அங்கேயெல்லாம் பகவானை நினைக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

– சுவாமி சித்பவானந்தர்



# எல்லாமே பகவானுக்கு

த்யானம் என்பது ஒரு புஷ்பம். த்யானத்தால் எதையும் சாதிக்கலாம். மனசை அடக்கி மூர்த்தியை நினைப்பது த்யானம். கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கடைசிப் படிக்கட்டாக இதைத் தான் சொல்கிறார். சாப்பிடுகிறாயா, அது கிருஷ்ணனுக்கு. எழுந்திருந்தால் அது கிருஷ்ணனுக்காக, உட்கார்ந்தால் அது கிருஷ்ணனுக்கு. தூங்குகிறாயா அது கிருஷ்ணனுக்கு–



என்று நினைத்துக் கொள்ள வேண்டும். எல்லாமே பகவானுக்கு என்று நினைத்துக் கொண்டு விட்டால், மீதி எண்ணங்கள் மனசில் வருவதற்கு இடமில்லாமல் போய் விடுகிறது.

– முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


## பகவானின் விருப்பத்துக்கு...

இறைவனை உணர்தல் என்பது உலகத்தைத் துறப்பதல்ல. மாறாக உலகத்தை இறைவனின் படைப்பாகக் கண்டு, அவனுக்குச் செய்யும் பணிவிடையாக எல்லா ஜீவராசிகளுக்கும் சேவை செய்து, பகவானின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகும்.

– சுவாமி ராமதாஸர்

நடைமுறையில் நமக்குள்ள மன நிலையில், நாம் கெட்ட காரியங்களில் போகாமலிருப்பதற்கு வழி ஏதாவது நல்ல கார்யங்களில் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பதுதான். எந்த நல்ல கார்யத்திலும் கெட்டது வரலாமானாலும், சாஸ்த்ரப் படியும், பெரியவர்கள் வழி காட்டியுள்ளபடியும், நம்முடைய மனஸ்ஸாக்ஷிக்குக் கொஞ்சமும் கூட உறுத்தாதபடியும், 'மொத்தத்தில் நல்லது' என்று தெரிகிற கார்யங்களில்–கார்யத்தில்

கெடுதல் ஏதாவது சேர்ந்தாலும்கூட, நம்முடைய உத்தேசம் கெட்டதேயில்லாமல் நல்லதாக இருக்கிற கார்யங்களில்–ஈடுபட்டு ஈடுபட்டுத்தான் பழைய கெட்ட கர்மா பாக்கிகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப் பணிகள் செய்வதில் வாஸ்தவமாகவே நாம் பிறத்தியாருக்கும், பிறத்தியார் நமக்கும் அநேக நல்லது பண்ணவும் முடியுந்தான். ஒத்துக் கொள்கிறேன். (சிரித்தபடி) ஒத்துக்கொள்வதோடு, இத்தனை நாழி சொன்ன மாதிரி, சும்மாயிருந்துவிட மாட்டேன்! உங்களையும் சும்மாயிருக்க விடமாட்டேன்! 'இதைப் பண்ணுங்கோ, அதைப் பண்ணுங்கோ!' என்று ஓயாமல் உங்களுக்கு ஏதாவது கார்யத்தைக் கொடுத்து உபத்ரவம் பண்ணிக் கொண்டே தான் இருப்பேன்! 'ஒரு நல்லதும் பண்ண வேண்டியதில்லை; சும்மாயிருக்கிறதுதான் பெரிய உபகாரம்' என்று நான் விஸ்தாரம் பண்ணிக் கொண்டு போனதைப் பார்த்துவிட்டு யாராவது, 'அப்பாடா! இனிமேலே இவர் வேத ரக்ஷணம், பிடி அரிசி, ஆத்திக்கீரை, கும்பாபிஷேகம், குளம் வெட்டுவது என்று எதையாவது சொல்லி ஹிம்ஸை பண்ணமாட்டார்' என்று நினைத்திருந் தால்' நன்றாக ஏமாந்துதான் போவீர்கள்! இனிமேலேயும் இப்படிச் சொல்லி, இன்னும் புதிசு புதிசாக ஏதாவது சேர்த்துச் சொல்லி, உபத்ரவம் பண்ணிக் கொண்டு தானிருப்பேன்!



– காஞ்சி மகா ஸ்வாமிகள்

தொகுப்பு : சுப்ரபாலன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 12.8.2001

ஞான மலர்கள் தத்துவ முத்துக்கள் மட்டுமல்ல;
வாழ்க்கையில் மணம் சேர்க்கும் வண்ண மலர்கள்!

# உங்கள் வாழ்க்கையில்—

# ★ வெற்றிகள் குவிய ★ மகிழ்ச்சி பொங்க
# ★ அமைதி நிலவ ★ வளம் பெருக

வழித்துணைபோல் வரக் கூடிய சிந்தனைத் தெறிப்புகளைப் புத்தக வடிவில் கொத்துக் கொத்தாய் வெளியிட்டிருக்கிறோம்.

வாழ்ந்து, வழிகாட்டி, வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்ட ஆன்றோர், அறிஞர், தலைவர்களின் கருத்துக்களைப் படித்துப் பயன்பெறுங்கள்.

விவரமான புத்தகப் பட்டியலுக்கு உடனே எழுதுங்கள்:

## வானதி பதிப்பகம்

13, தீனதயாளுதெரு,
தி.நகர், சென்னை — 600 017.
போன்: 4342810




சிவகாமியின் சபதத்தில் ஒரு காட்சி. ஓவியம்: சந்திரா (1948)




இப்பெல்லாம் என் வீட்டில என் சமையலுக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். சாம்பார், ரசம், புளிக்குழம்பு, புளியோதரை எல்லாம் பிரமாதம். சூப்பர் டேஸ்ட். நான் உபயோகிப்பது **ரூபி புளியாச்சே.**

**ரூபி புளி** விதை, ஓடு, நார் நீக்கிச்சுத்தம் செய்யப்பட்டு முற்றிலும் சுகாதாரச் சூழலில் தயாரிக்கப்படுவது. ஜூஸ் நிறைந்தது. சிறிதளவு உபயோகித்தாலே போதும்.

எம்மனதையும் கொள்ளை கொள்ளும் அருமையான சமையலுக்கு **ரூபி புளி.**

A quality product by

**O.M.S. AGRO FOOD PRODUCTS CORPORATION**

**3, Parangirinathapuram Compound, Pullalakottai Road**

**Virudhunagar - 626 001 Tamilnadu, India.**

TAS VISION RT 778 / 01